விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 25 புதன்கிழமை (11.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 357

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## சர்வதேசம் மௌனித்துவிட்டால் தமிழர்களின் நிலை மோசமாகும்

### வடக்கு முதலமைச்சர் உரை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் கருத்துக்களை அறிய சர்வதேச பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அசட்டையாக இருந்து வந்தால் தமிழ் பேசும் மக்களின் நிலைமை மோசமாகிவிடும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## செங்கோல் இன்றி சபை அமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் மூன்றாவது அமர்விலும் அவைத் தலைவர் செங்கோல் இன்றியே சபை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின் மூன்றாவது அமர்வு நேற்றுக்காலை யாழ். கைதடியிலுள்ள மாகாணசபைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இதன்போது அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் புதிய அங்கியுடன் சபை

20-ம் பக்கம் பார்க்க

## படகு கவிழ்ந்து மீனவர் பலி

(கரவெட்டி)

வடமராட்சி இன்பசிட்டி கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் ஒருவர் படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதோடு, மற்றொருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30-க்கு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மேற்படி கடற்பரப்பில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு இரு மீனவர்கள் தமது படகில் மீன்பிடிக்கச்சென்றுள்ளனர்.

20-ம் பக்கம் பார்க்க

## கல்வி அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாண சபையின் 2014-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கல்வி, கலை, பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 642 கோடியே 43 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் கல்விக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆளுநர் செயலகமும் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கும்

19-ம் பக்கம் பார்க்க

## தமிழினப் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை அவசியம்

### வடக்கு மாகாண சபையில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

தமிழினப் படுகொலைக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் சர்வதேச நீதி விசாரணை அவசியம் என்பது உட்பட 10 கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு மாகாண சபையின் மூன்றாவது அமர்வில் ஆளும் கட்சியினர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின் மூன்றாவது அமர்வு யாழ்.கைதடியிலுள்ள மாகாண சபைக் கட்டடத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தமிழினப்படுகொலை, மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச நீதிவிசாரணை தேவை. சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் தமிழ் இனம் சர்வதேச சமூகத்திடம் நீதிகோரி நிற்கின்றது எனக் கூறியவாறு தனது கையில் எதிர்ப்பு பதாகையுடன் அவைத் தலைவருக்கு முன்பாக

20-ம் பக்கம் பார்க்க

## அங்கஜன் இராமநாதன் கலந்துகொள்ளவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் நேற்று இடம்பெற்ற அமர்விலும் கலந்துகொள்ளவில்லை.

அதேவேளை ஒருமாத காலம் விடுமுறைக்கு அவர் விண்ணப்பித்துள்ளதாக அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இதனைவிட சபை உறுப்பினர்களின் அனுமதியுடன் அவருக்கான விடுமுறையும் வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கயன் மாகாண சபையின் மூன்று அமர்விலும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல்

### மனித உரிமை தினத்தில் அசம்பாவிதம்

(திருகோணமலை)

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று திருகோணமலை நகரில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின் போது ஏற்பாட்டாளர்கள் உட்பட சிலர் தாக்கப்பட்டுள்ளார்கள்.

20-ம் பக்கம் பார்க்க



## பரீட்சைக் கடமைக்கு சென்ற அதிபர் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கடமையில் ஈடுபடுவதற்கு சென்றிருந்த அதிபர் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் பசுபதி கணேசமூர்த்தி (வயது 47) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, இராமநாதபுரம் மகாவித்தியாலய பரீட்சை மத்திய நிலையத்தில் பரீட்சை கடமைகளில் ஈடுபடுவதற்கு சென்றிருந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 2.20

19-ம் பக்கம் பார்க்க

up to 25% CONDITIONS APPLY
Special offer
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
(C-5735) Tel:- 021 222 0033 / 021 222 4777

## போலி நகைகள் அடைவு பன்னிரண்டு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான போலி தங்க நகைகளை அடைவு வைத்து பணமோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 12 பேரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 6 பேர் நேற்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் ஏனைய 6 பேரும் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஜே-6)

## வடக்கு மாகாண சபையில் 16 பிரேரணைகள் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்தை வலியுறுத்தியும் இராணுவத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் காணி சுவீகரிப்பு மற்றும் வீடழிப்பு, கோவில்கள் இடித்தழிப்பு, பாடசாலைகள் இடித்தழிப்பு என்பனவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பிரேரணைகள் உட்பட 16 பிரேரணைகள் மாகாண சபையின் மூன்றாவது அமர்வில் நேற்று எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின் மூன்றாவது அமர்வு

19-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை

மேலும் சிட்டை எழுதுநர் (Bill Clark) (வயது 18 - 30) - பெண்

தொடர்புகளுக்கு :- 0775-556-904


## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 1966 - 09 - 26

உதிர்வு 2013 - 12 - 10

அமரர் பசுபதி கணேசலிங்கம்

(அதிபர் கிளி. அக்கராயன் ஆரம்ப பாடசாலை)

அமரர் பசுபதி கணேசலிங்கம் அவர்கள் 10.12.2013 அன்று இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

-தகவல்
அதிபர் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்

(C-5742)


## வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:

021 321 0815,
021 567 1532


## மீளும் நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 09 - 09 - 1953

விண்ணில் 21 - 11 - 2012

அமரர்

சின்னத்தம்பி இந்திராணி

(மூத்தக்கா)

திதி : கார்த்திகை பூர்வபக்க நவமி

அம்மா!
அம்மா எங்கள் ஆருயிர்த் தெய்வமே!
பார் போற்ற வந்த எங்கள் அம்மா!
அம்மா இன்றோடு ஓராண்டு ஓடியதோ!
ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
எங்கள் அன்பின் திருவுருவத்தை
மறக்க முடியாமல் துடிக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
நினைவுக் காணிக்கை எங்கள் தாயாருக்கு.


**உங்கள் ஆத்மா சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

மாவலி படிப்பக லேன், மண்டான்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

நீங்காத மீளும் நினைவுகளுடன்
சின்னத்தம்பி குடும்பத்தினர்.

(C-5744)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 1948-03-30

உதிர்வு 2013-11-12

அமரர்

பொன்னையா தர்மலிங்கம்

(குட்டிக்கிளி)

கடந்த 12.11.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் பொன்னையா தர்மலிங்கம் அவர்களின் மரண செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அயலவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை 12.12.2013 வியாழக்கிழமை அன்று காலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

(சி-5746)

## கருத்தரங்குகள்

வட மாகாண காணி வெளிக்கள போதனாசிரியர் பரீட்சைக்கானது.

யாழ். நகரில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவில் நாளை (12.12.2013) காலை 9 மணிக்கு.

வவுனியாவில் C.B.A கதிரேசன் வீதியில் ஞாயிறு (15.12.2013) மு.ப :- 10.30 மணிக்கு

தொடர்பு:- 0754-164-564

(B-5742)

## வீரர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டியில் கோண்டாவில் சிவபூமி மனவளர்ச்சிப் பாடசாலை மாணவன் எஸ்.தனுசன் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டிகள் அவுஸ்ரேலியாவில் நியூகாஸ்ரன் நகரில் நடைபெற்றது.

இப்போட்டியில் கோண்டாவில் சிவபூமி மன வளர்ச்சி பாடசாலையில் இருந்து மூவர் பங்கு பற்றியிருந்தனர்.

இதில் எஸ்.தனுசன் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவர்கள் மூவரையும் பாராட்டும் வைபவம் இன்று மாலை 3 மணிக்கு கோண்டாவில் சிவபூமி மனவளர்ச்சி பாடசாலையில் இடம் பெறவுள்ளது. (எ-11)

## பாம்பு கடித்து யுவதி காயம்


பாம்பு கடிக்கு இலக்காகி யுவதி ஒருவர் சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் கரவெட்டி கலட்டிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஆட்டுக்கு குழை எடுக்க சென்றபோதே புடையன் பாம்பு கடிக்கு இலக்காகினதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த வினிதா (வயது 27) என்பவரே பாம்பு கடிக்கு இலக்கானவராவார். (எ-60)

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் 3-ம் நாள் விழா



மூவுலகும் ஆளும் இறைவனின் மூன்றாம் நாள் நிகழ்வு இது. முத்தமிழும் வாழ்த்தும் முனிவன் மாணிக்க வாசகன் மனதை ஒரு முகப்படுத்தி சொன்ன ஒரு வாசகம் உள்ளத்தை உருக்கி ஆன்ம ஒளி பெருக்கியது. ஆத்ம தாகம் தீர அள்ளிப் பருகுவோம். முத்தமிழ் முனிவன் அவன் சொன்ன திருவெம்பாவை பாடல்களை இசையோடு இறைவா தமிழாகப் பாடுவோம். பரவுவோம்.

காரை. S. கெங்காதரன்

அனுசரணை
E.S.P. நாகரத்தினம்
அன் கோ.

(C-5734)


## உடனடியான தொழில்

வருமான பிரச்சினையா ??? தொழில் தேடுகிறீர்களா ??? கவலையை விடுங்கள் ...... 18-55 ஆண், பெண்

எம்மிடம் கொழும்பை அண்மித்த பகுதிகளின் பிரபல்யமான தொழிற்சாலைகளான டொபி/ ஜாம்/ கோடியல்/ பிஸ்கட்/ PVC/ பிளாஸ்டிக்கை/ கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில். உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/-, 25,000 /- , 38,000 /- சம்பளங்களுடன் உற்பத்தி / லேபல் / பொதியிடல் / களஞ்சியப்படுத்துல் பிரிவுகளில் நிரந்தர உடனடி வேலைவாய்ப்பு.

0777 117 661, 0775561883

(C-5738)

## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829

(சி-5736)

## CAMBRIDGE ENGLISH

PET UNIVERSITY OF CAMBRIDGE

August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞானமுகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

உடனடியாக BRITISH Council இன் ஆதரவுடன் 02.09.2013 இல் ஆரம்பிக்கவிருக்கும் Cambridge - Prelimnary English Test (PET) வகுப்பில் சேருங்கள்.

* இது ஓர் **Intermediate B1, Level** பரீட்சையாகும். **U.K** இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன
* நீங்கள் **UK** இல் திருமணம் செய்வீர்களானால் **UK Border Agency** அங்கீகரிக்கும் **A1** பரீட்சைக்குப் பதிலாக **PET Certificate** இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் **PET=B1**
* நீங்கள் **IELTS** பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் **PET** பாட நெறியைப் பின்பற்றிய பின் **IELTS** வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்



**Exam Fee : Rs.8300/=**
**Exam Date: 15-03-2014**

Subjects : Reading, Writing, Listening, Speaking

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

Course Schedule

| | Mon,Tuse,Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.30-10.30; 10.30-12.30 | 2.00-5.00 |
| Exam fee | Rs.8300 | |
| Exam date | 07-12-2013-Colombo | |

புதிய பிரிவுகள் 16-12-2013 இல் ஆரம்பமாகும்.

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 075 543 5089 , 077 880 3887

(C-5681)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஒற்றுமை

ஒரு ஊரில் அண்ணன், தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுடைய தந்தை கடைசியாக அவர்களுக்கென்று விட்டுட்டுப் போன சொத்து ஒருமாமரம், ஒரு பசுமாடு, ஒரு போர்வை. இவ்வளவு தான். இந்த மூன்றையும் அவர்கள் இருவரும் ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொள்ள வேண்டும்.

எப்படி பாகம் பிரிப்பது ? எப்படி பங்கு போட்டுக் கொள்வது எல்லாவற்றையும் சரிபாதியாக வெட்டி ஆளுக்கு அரை வாசியாகவா எடுத்துக் கொள்ள முடியும்? அண்ணன் காரன் ஒருமக்கு. என்ன சொன்னாலும் தலையாட்டிக் கொண்டு போவான். தம்பிக்காரன் புத்திசாலி. இருந்தாலும் அந்தப் புத்திசாலித் தனத்தை தவறாக உபயோப்படுத்தக் கூடியவன் . அந்தத்தம்பி அண்ணனிடம் சொன்னான். அண்ணா நம்முடைய அப்பா நமக்காக விட்டுட்டுப்போன சொத்தை நாமிருவரும் ஒற்றுமையாக இருந்து பிரித்துக் கொள்ளலாம் . ஊரைக் கூட்டி பஞ்சாயத்து பண்ண வேண்டிய அவசியமில்லை என்றான். அப்படியானால் சரி தம்பி நீயே அதைப் பங்கு போடு என்றான் அண்ணன்.

தம்பி யோசித்தான் அதற்குப் பின் சொன்னான்.

"அண்ணா நீங்கள் வயதில் மூத்தவர். அதனால் மூன்று விடயத்திலும் உங்களுக்கு தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அது தான் நியாயம். முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதில் அடிப்பாகம் தான் வலுவானது. அதனால் அந்த மரத்தின் அரைவாசிக்குக் கீழ் உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் முழுவதும் உங்களுக்கு. மேல் பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருப்பது எனக்கு இருக்கட்டும் அடுத்ததாக அந்தப் பசுமாடு

எஞ்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அதனால் அந்த மாட்டின் தலைப்பாகம் உங்களுக்கு. பின்பக்கம் எனக்கு இருந்து விட்டுப் போகட்டும்.

அடுத்தது அந்தப் போர்வை .அதைப் பகல் முழுவதும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் இரவு முழுவதும் நான் வைத்துக் கொள்கிறேன்." என்றான் தம்பி.

விபரம் புரியாத அண்ணன் சரியென்று ஒத்துக் கொண்டான்.

அதற்குப் பின் என்ன ஆயிற்று தெரியுமா?

அண்ணன் அந்த மரத்துக்கு உரமிட்டான். நீர் பாய்ச்சினான். தம்பி ஜாலியாக மரத்தின் மேல் உட்கார்ந்து பழத்தையெல்லாம் பறித்துக் கொண்டிருந்தான்.

அண்ணன் பசு மாட்டுக்குத் தீனி வைத்தான். புல்லை அள்ளி வந்து போட்டான். தண்ணீர் வைத்தான்.

தம்பி தன்பாட்டுக்கு பால் கறந்து கோப்பி போட்டு குடித்துக் கொண்டிருந்தான்.

அண்ணன் பகல் முழுவதும் அந்தப் போர்வையை சும்மா மடித்து வைத்திருந்தான்.

தம்பி ஜாலியாக ராத்திரியில் அதை வாங்கிப் போர்த்திக் கொண்டு தூங்கினான்.

இப்படியே நடந்து கொண்டிருந்தது. இதை பக்கத்து வீட்டுக்காரன் ஒரு நாள் கவனித்தான். நடப்பது நியாயமில்லை என்பதைப் புரிந்து கொண்டான். உடனே அந்த அண்ணனை இரகசியமாக ஒருநாள் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து சில யோசனைகளை சொல்லி.

இனிமேல் இப்படி நடந்து கொள் என்று சொன்னான். அவனும் சரியென்று சொல்லி தலையாட்டி விட்டுப்போனான். அதன் பின் என்னாவாயிற்று தெரியுமா? அண்ணன் மரத்துக்கு உரம் வைப்பது. தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான். பின் ஒரு கோடரியை எடுத்து வந்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான்.

தம்பி பதறிப்போய் "என்னண்ணே இப்படிச்செய்கிறீர்கள்?" என்றான்.

"என்னுடைய பங்கில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன்னுடைய பங்கிலேயா நான் வெட்டுகிறேன்?" என்று கேட்டான்.

மாட்டுக்குத் தீனி வைப்பதையும் தண்ணீர் வைப்பதையும் நிறுத்தினான். தம்பியால் பால்கறக்க முடியவில்லை. தவித்துப் போய்விட்டான்.

அந்தப் போர்வையை பகல் முழுவதும் அண்ணன் வைத்திருந்து இரவு நேரும் வருவதற்குள் அதை தண்ணீரில் நனைத்து தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக் கொள்ள முடியவில்லை.

அதன் பின் அண்ணனிடம் சமரசம் செய்து கொண்டு நியாயமாக நடக்க ஆரம்பித்தானாம் அந்தத் தம்பி.

ஒற்றுமையாக வாழ்வதிலும் ஒழுங்கு முறை வேண்டுமென்பது இதிலிருந்து புரிகிறதல்லவா!

ஒருத்தன் சொன்னான்;

"என்னுடைய எதிர் வீட்டுக்காரனிடம் நான் மிகவும் பிரியமாக நடந்து கொண்டேன். அவனை என்னுடன் கூடப்பிறந்த தம்பியாக நினைத்துப் பழகினேன். தம்பியென்று தான் கூப்பிடுவேன். அது தான் இப்பொழுது வில்லங்கமாகி விட்டது" என்றான்.

"ஏன்" என்று கேட்டேன்.

"அவனும் அதை நிஜமென்று நினைத்துக் கொண்டு இப்பொழுது என்னுடைய சொத்தில் பங்கு கேட்கிறான் சேர்" என்றான் மிகவும் வேதனையோடு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சர்வதேச விசாரணையில் அரசு சிக்குவது உறுதி-ஜே.வி.பி. எச்சரிக்கை

திருகோணமலை மூதூரில் 17 தொண்டு நிறுவனப் பணியாளர்கள கொல்லப்பட்டமை தொடர்பில் சுயாதனமான உள்ளக விசாரணையை இலங்கை அரசு நடத்தாவிடின், சர்வதேச விசாரணையில் சிக்குவது உறுதி. இதில் எவ்வித மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை என்று ஜே.வி.பி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், யுத்தத்தின் போது மீறப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமாகவும் அரசுக்கு மார்ச் மாதத்தில் பலத்த அடி காத்துக் கொண்டிருக்கிறது என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரின் போது அரசுக்கு சர்வதேச அழுத்தங்கள் குவியும் என தற்போது எதிர்வுக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 2006ஆம் ஆண்டு மூதூரில் தனது தொண்டு நிறுவன பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை தொடர்பாக சர்வதேச விசாரணையில் ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தயார் என அக்ஷன் பாம் நிறுவனம் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுபோன்ற சிக்கல்கள் தொடர்பாக வினவிய போதே ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான லால் காந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசு சர்வதேச விசாரணைகள் குறித்து அக்கறை செலுத்த வேண்டிய தருணம் வந்து விட்டது. ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில் யுத்தம் செய்ய மாத்திரமே உரிமையுண்டு. மாறாக யுத்த குற்றம் புரியும் உரிமை அதற்கு இல்லை. ஆனால், இலங்கையோ இரண்டையும் செய்து விட்டது. இதை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். இதனாலேயே தற்போது உள்நாட்டுப் பிரச்சினைக்குள் உலக நாடுகளே மூக்கை நுழைக்கின்றன.

இதற்கு இந்த அரசும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுமே காரணம். இவர்களின் செயற்பாட்டால் இன்று நாட்டிலுள்ள அனைவருமே பாதிக்கப்பட்டுள்ளோம். சென்ற வருடமே யுத்த குற்றச்சாட்டு குறித்து சுயாதீன விசாரணை நடத்துமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா பல முறை கோரிக்கை விடுத்தது.

அதுமட்டுமல்லாமல், ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கே வருகை தந்து அரசு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என மீண்டும் வலியுறுத்தி விட்டுச் சென்றார். ஆனால், அரசோ இன்னமும் இதுவிடயத்தில் அக்கறை கொள்ளவேயில்லை.

தற்போது மூதூர்கொலை தொடர்பிலும் அரசுக்கு அழுத்தம்வந்துவிட்டது. இப்படியே பிரச்சினைகள் நீடித்துக் கொண்டே போனால் நாட்டு மக்கள் எவ்வாறு நிம்மதியாக வாழமுடியும்?

ஆனால், அரசுக்கு 2014 ஆம ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பெரயதோர் ஆபத்து காத்துக் கொண்டிருக் கிறது என்பது மட்டும் இவற்றி லி ருந்து தெளிவாகத் தெரிகிறது.

இதிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டு மெனில் மூதூரில் 17 பேர் கொல்லப்பட்டமை மற்றும் யுத்தத்தின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து உடனே சுயாதீன உள்ளக விசாரணையை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் சர்வதேசம் பொறுமை மீற வேண்டி ஏற்பட்டு விடும் என்றார். (செ-2)

# தொழிற்பயிற்சி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற் பயற்சி கற்கைநெறியை தொடர விரும்புவர்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), ஆடை வடிவமைப்பாளர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர், மரவேலை தொழில் நுட்பவியலாளர்(தளபாடம்) ஆகிய தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான பயிற்சிகளை மேற்கொள்ள விரும்புபவர்களிட மிருந்தே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி கற்கை நெறியை தொடர விரும்புபவர்கள் மாவட்ட அலுவலகம் 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம் எ்ன்ற முகவரியிலோ அல்லது 021222 7949 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பை ஏற்படுத்துவதன் மூலமோ தமது பதிவுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னராக பதிவு செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. காரைநகர் பயிற்சி நிலையத்திலும் பதிவுகளை மேற் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70-110 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 50-80 | 70 | 80 |
| தக்காளி | 25-40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 20-35 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 40 |
| கரட் | 40 | 80 | 80 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 20 | 25 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 120-240 | 230 | 200 |
| பெரிய வெங்காயம் | 60-100 | 130 | 120 |
| பாகற்காய் | 90 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 60 | 90 | 80 |
| பீற்றூட் | — | 30 | 80 |
| கறிமிளகாய் | — | 120 | 120 |
| முருங்கைக்காய் | 120-200 | - | 160 |
| போஞ்சி | 160 | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 10-20 | 25 | 40 |
| தேசிக்காய் | 80-120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 30 | 35-45 |
| இராசவள்ளி | 200 | - | 220 |

# இராசி பலன்

*11.12.2013*
*(கார்த்திகை 25, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு*
*நவமி பிற்பகல் 12.28 மணிவ்ரை*
*உத்தரட்டாதி மாலை 6.44 மணிவரை*
*இராகுகாலம் 12.19-1.49 மணிவரை*
*சுபநேரம் 4.49-6.19 மணிவரை*

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.

**இடபம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழும் நாள்.

**மிதுனம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தொல்லை தந்தவர்களே தோள்கொடுத்து உதவ முன்வருவர்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திருடர் பயமுண்டு, எதிர்பாராத மனஸ்தாபங்களால் மனதில் உற்சாகம் குறையும், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி** பயணங்களால் பலனுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பொருளாதாரநிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான நாள், அபூர்வ சந்திப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்** நோய்கள் குணமடையும், விருந்தினர் வருகையுண்டு, கனிந்த தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு, பூர்வபுண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களால் நன்மையுண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

**கும்பம்** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், கோரிக்கைகள் நிறைவேறலாம்.

**மீனம்** வார்த்தைகளால் வளம் காணும் நாள், திட்டமிட்ட காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், கனவுப்பலிதமுண்டு, போசன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மானிகளை சேதப்படுத்திய ஆறு பேர் கைதாகினர்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டத்தில் மின்சார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது வீட்டு மின்மானிகளினைச் சேதப்படுத்திய குற்றச் சாட்டின் கீழ் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கொழும்பிலிருந்து வருகை தந்த இலங்கை மின்சார சபையின் சோதனைக்குழுவும் பொலிஸாரும் இணைந்து யாழ்.மாவட்டத்தின் பல பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்படி, வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் உதவியுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வீட்டின் மின்மானியைச் சேதப்படுத்திய மூவர் கைது செய்யப்பட்டதுடன் சுன்னாகத்தில் அப்பிரதேச பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அதே குற்றச்சாட்டின் பேரில் மூவர் கைதாகியுள்ளனர்.

இவர்கள் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள மின்மானியினுள் கம்பிகளைச் செருகி மின்மானியின் வாசிப்பினை குறைத்துக் காட்டுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டதனாலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது. (செ-9-23)




## விசேட கூட்டம்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட கூட்டமொன்று இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள அடுத்த பாராளுமன்ற அமர்வுகள் செயற்படுத்த வேண்டிய செயற்றிட்டங்களை திட்டமிடல் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற இளைஞர் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்திலிருந்து 15 உறுப்பினர்களும் செனட் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-9-23)

# மானிப்பாய் இந்து மாணவனுக்கு புத்தாக்குநருக்கான சிறப்பு பரிசு

(மானிப்பாய்)

அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட இளம் புத்தாக்குதல் போட்டியில் யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் சிறப்புப் பரிசிலை பெற்றுள்ளான்.



களனிபல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட இப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜெயச் சந்திரன் திருசன் என்ற மாணவன் தோசை, றொட்டி, கொத்து றொட்டி ஆகியவற்றினைத் தயார் செய் வதற்கான இயந்திரம் ஒன்றினைக்-கண்டு பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9-23)

## இரத்ததானம்

(மானிப்பாய்)

காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி வினோதினி ஸ்ரீமேனனும் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் லக்ஷன், காரைநகர் பிரதேசசபை தவிசாளர் வே.ஆனைமுகன், கௌரவ விருந்தினர்களாக காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் சு.யோகேஸ்வரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-9-23)

# பேராசிரியர் கைலாசபதியின் 31 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய பேரவையால் நடத்தப்படும் பேராசிரியர் கைலாசபதியின் 31 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் தேசிய கலை இலக்கிய பேரவையின் தலைவர் பேராசிரியர் சி.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கான வரவேற்புரையை பேரவையின் யாழ்.பிரதேச செயலாளர் த.ஸ்ரீபிரகாஸ் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் ஆய்வரங்கில் "கல்விச் சமூகவியலும் சமூக மேம்பாடும்" எனும் தலைப்பில் சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் க.சிவகரன், "கருத்துப் பரிமாற்றமும் மொழிக்கையாள்கையும்" எனும் தலைப்பில் பேரவையைச் செயலாளர் பேராசிரியர் சி.சிவசேகரம், "தனி நபர் வாதமும் சமூக நோக்கும்" எனும் தலைப்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.இராசநாயகம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

கலை நிகழ்வாக தேசிய கலை இலக்கிய பேரவை ஆற்றுகையாளர்கள் வழங்கும் நாட்டார் பாடல், கவியுரைப்பு நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (செ-5)

# மாலுசந்தி மைக்கல் விளை.கழகத்துக்கு 27 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(கரவெட்டி)

விளையாட்டுத்துறை அமைச்சினால் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்துக்கு 27 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக விளையாட்டுத்துறை அமைச்சின் கீழுள்ள விளையாட்டுக்கழகங்களில் பிரதேச ரீதியில் ஒரு விளையாட்டுக் கழகம் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மேற்கு பிரதேச செயலகத்தின் கீழ் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கான வேலைகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார்.

நிதி ஒதுக்கீட்டின் கீழ் விளையாட்டு மைதானத்தை சுற்றி பாதுகாப்பு வேலிகள், மைதான வளைவுகள், விளையாட்டுக்கழக அலுவலகம் என்பன அமைக்கப்படவுள்ளன. (செ-9-24)

# வடமராட்சி வாகன விபத்து; ஆட்டோ சாரதி உயிரிழப்பு

வடமராட்சி கரவெட்டி சாமியன் அரசடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கன்ரர்-முச்சக்கரவண்டி விபத்தில் படுகாயமடைந்தவர்களில் முச்சக்கரவண்டி சாரதி ஆண்டி சுந்தரம் (வயது 60) என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவத்தில் கரவெட்டி மேற்குப் பகுதியைச் சேர்ந்த ஆட்டோ சாரதியான ஆண்டி சுந்தரம் (வயது 60), அதில் பயணித்த துன்னாலை தெற்கைச் சேர்ந்த இளைய தம்பி அப்புத்துரை (வயது 80), அப்புத்துரை சோதிமலர் (வயது 63) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந் நிலையில் ஆட்டோ சாரதி உயிரிழந்துள்ளதுடன் மற்றைய இருவரும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (செ-9-24-10-60)

## மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் மீட்பு

கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை சேர்ந்த ஆறுமுகம் தவராசா என்பவரது மோட்டார் சைக்கிள் தொடர்பான ஆவணங்கள் சில கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலகத்தில் வந்து ஆதாரம் காட்டி மேற்படி ஆவணங்களை பெற்றுக் கொள்ள முடியும். (செ-5)







சாவகச்சேரி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வில் சாவ.நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் கலை நிகழ்வையும் நூலகத்துக்கு வி.விக்னேஸ்வரன் ஒரு தொகுதி நூல்களை நூலகரிடம் அன்பளிப்பு செய்வதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரத்துபஸ்வல தண்ணீரில்

# இரசாயனம் கலந்திருப்பது உறுதி

## நீர்வள சபை இறுதி அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

ரத்துபஸ்வல, கையுறை தயாரிப்பு தொழிற்சாலை வளாகத்தினுள்ளும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் நீரில் இரசாயனங்கள் பரவியுள்ளதாக நீர்வள சபை அதன் இறுதி அறிக்கையில் உறுதிசெய்துள்ளதாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

இந்த பகுதியில் குடிநீர் நெருக்கடி ஏற்பட்டதை தொடர்ந்து இதனை ஆராய ஓர உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டது.

இந்த தொழி ற்சாலை வளாகத்தின் கிணறுகளிலுள்ள நீரில் அமிலத் தன்மை காணப்படுகிறது.

நைதரேற்று மற்றும் சல்பேற்று அடர்த்தி சில கிணறுகளில் உயர் அளவில் காணப்படுகிறது.

அமிலங்களை கையாள்வதில் அசிரத்தை காரணமாக அமிலப் பரவுகை உண்டாகியது என இந்த அவதானங்கள் மூலம் முடிவு செய்யலாம். (செ-2)

## வழக்கு தள்ளுபடி

இலங்கை கடற்படையினருக்கு இந்தியாவில் பயிற்சியளிப்பதற்கு தடை விதிக்கக் கோரி தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டது.

இந்த மனு நீதிபதிகள் சுதாகர் ,வைத்திய நாதன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் இந்த வழக்கிற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்றனர்.

இதைத் தொடர்ந்து மனுதாரர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இதைபதிவுசெய்து கொண்ட நீதிபதிகள் மனுவைத் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டனர். (செ-2)

### மாவட்டமட்ட இறுதிப்போட்டிகள்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திருவாசக விழாவை முன்னிட்டு அறநெறிப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, திருவாசகப் பண்ணிசைப் போட்டிகளில் முதலாமிடம் பெற்ற மாணவர்களுக் கான மாவட்டமட்ட இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நல்லூர் மணிமண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (9)


## உடனடித் தேவை

யாழ் நகர மத்தியில் உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் சமையற்காரர்கள் தேவை

✷ சைனீஸ்(CHINESE) உணவு வகைகள் தயாரிப்பதில் விசேட அனுபவம் பெற்றவர்.

Soup, NaaN, CHILLI PARATTA KOTHU, STARTERS, BURIYANI

✷ இந்திய இனிப்பு வகைகள் மற்றும் சிற்றுண்டி முறுக்கு, MIXER போன்றவை தயாரிப்பவர் (ஆண்/பெண்).

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

077-3478427

(4816)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்(ஆனைக்கோட்டை) (4818)

வட்டாரம்:-04

ஆதன இலக்கம்:-48

பழைய பாடசாலை வீதி

வட்டாரம் 04 பழைய பாடசாலை வீதி சுதுமலை ஆதன இலக்கம் 48 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை) ''பிலா நின்ற தோட்டம்'' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு நான்கு (நி.ப 04) இவ்வாதமானது சுதுமலை மானிப்பாயைச் சேர்ந்த சரவணமுத்து இலகுப்பிள்ளை அவர்களால் அறுதி உறுதி மூலம் சுதுமலையைச் சேர்ந்த யோகலிங்கம் பெண் பரஸேஸ்வரி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் நா.முத்துவிநாயகம் முகதாவில் நிறைவேறிய 3647 ஆம் இலக்க 1993.12.01 ஆம் திகதி அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தமென தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "பிலா நின்ற தோட்டம்" நிலப்பரப்பு 02 உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் என்பவர் யோகலிங்கம் பெண் பரமேஸ்வரி பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## விளம்பரப்படுத்தல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் பயன்படுத்தி அகற்றப்பட்ட (கழிக்கப்பட்ட) பழைய இரும்புகள், வெள்ளிரும்புகள் விற்பனைக்காக உள்ளன.

அலுவலக நாட்களில் நேரில் சமுகம் கொடுத்து இதற்கான மதிப்பீட்டினை மூடி ஒட்டிய நிலையில் தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி வரணி என்ற முகவரிக்கு 26.12.2013 ஆம் திகதிக்கு முன்னர் தபாலில் அல்லது நேரில் சமர்ப்பிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி


இவ்வண்ணம்

தலைவர் கூ.சேவையிலுள்ள

கி.பூபாலசிங்கம்

(5740)

# அகாஷி-கோத்தா பேச்சுவார்த்தை



(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஸி, பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இரு தரப்பு உறவுகள் குறித்து பாதுகாப்புச் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இடையிலான உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. இச் சந்திப்பின் போது இலங்கை மற்றும் ஜப்பானிய தூதுவர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேவேளை, யசூசி அகாஸி, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்த அகாஸி இன்று புதன் கிழமை வரையில் நாட்டில் அவர் தங்கியிருப்பார என தெரிவிக்கப்படுகிறது. (செ-2)


## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (பு•ஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

◆ சைவ உணவு -150/= மட்டுமே

◆ அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 021 222 2829

(சு/5683)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 13 ¾ உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, CIMA / Executive Assistance<br>தொ.இ: B/564 | பிறப்பு: 1986 இந்து (Sed)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 34 ¾ செவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: G/604 |
| பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 19 ¼ உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, கல்வியற் கல்லூரி / ஆசிரியர்<br>தொ.இ: B/566 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 65 செவ் 1 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/614 |
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 16 ¾ உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc / ஆசிரியர்<br>தொ.இ: B/569 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 19 செவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/615 |
| பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம் 1 கி.பா: 23 ¾ செவ் 12 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Accounting / அவுஸ்ரேலியா PR<br>தொ.இ: B/572 | பிறப்பு: 1972 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 51 ½ செவ் 4 ல்<br>தகைமை/தொழில்: வெளிவாரி பட்டப்படிப்பு / ஆசிரியர்<br>தொ.இ: G/621 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலம் வழங்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது- சம்பிக்க



அநாதைகளுக்கு அடைக்கலம் வழங்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிதத்துள்ளார்.

கங்கொடவில சோம தேரரின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்தொடர்ந்துஉரையாற்றுகையில். போர், அரசியல் மற்றும் மத ரீதியான பிரச்சினைகளினால் நிர்க்கதியாகும் மக்கள் இலங்கையை நோக்கி படையெடுக்கின்றனர்.

மாலைதீவு மொத்த சனத்தொகையில் 20 வீதமானவர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர்.

விக்னேஸ்வரன் வடக்கில் சிங்களவர்களை குடியேற்ற விரும்பவில்லை.

போரில்வெற்றிகொண்டபோதிலும் நாட்டின் எந்தவொரு நிலத்திலும் வாழும் உரிமை இன்னமும் கிட்டவில்லை.

சிலர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக இலங்கை மீது குற்றம் சுமத்தி வருகின்றனர்,

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட சலகட்சிகள்நாட்டைசமஷ்டிமுறைமைக்குள் தள்ள முயற்சிக்கின்றன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (செ-2)

# நாற்பது இலட்சம் புதிய குடிநீர் வழங்கல் திட்டங்கள் 2020 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்தப்படும்

## நீர் வழங்கல் வடிகாலமைப்பு தகவல்

2020 ஆம் ஆண்டிற்குள் 40 இலட்சம் புதிய குடிநீர் வழங்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் மீதான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த வருடம் வரை 19 இலட்சம் புதிய குடிநீர் வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகக குறிப்பிட்ட அவர் 2013 இல் மட்டும் 38ஆயிரம் குடிநீர் வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 2020 இற்குள் இதனை 40 இலட்சமாக்குவதே இலக்காகுமெனவும் அவர் தெரிவித்தார்.

குடிநீருக்கான கேள்வி வருடத்திற்கு வருடம் பெருமளவில் அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்ட பிரதியமைச்சர் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்தியா, ஜப்பான் உட்பட 20 நிதி நிறுவனங்களின் உதவியுடன் மேற்படி குடிநீர்த்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டில் சகலருக்கும் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வடக்கு, கிழக்கு உட்பட பல்வேறு பிரதேசங்களிலும் பல புதிய திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அதேவேளை, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை இதுவரை காலமும் ஈட்டி வந்துள்ள நட்டத்தை ஈடுசெய்து அதனை இலாபத்தில் இயங்கும் நிறுவனமாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு இந்தச் சபை 280 மில்லியன் நட்டத்திலேயே இயங்கியது. எனினும் 2013 ஆம் ஆண்டில் 389 மில்லியன் ரூபாவை இலாபமாகப் பெறும் நிறுவனமாக இச்சபை மாற்றப்பட்டுள்ளது.

"மஹிந்த சிந்தனை கொள்கை திட்டத்திற்கிணங்க ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட குடிநீர் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நீர் விரயம் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் அந்த விசேட செயற்றிட்டத்திற்காக 300 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு பௌஸர் மூலம் சுத்தமான குடிநீரை வழ்ங்கும் செயற்றிட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் நீரினால் ஏற்படும் சகல நோய்களையும் தவிர்க்க முடியும்.

அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களின் பல பிரதேசங்களுக்கும் குடிநீரை வழங்கும் பாரிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வடக்கில் கிளிநொச்சி, ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளிலும் தற்போது பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 'ஜய்க்கா' நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி குடிநீர்த் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டிற்குள் தெற்கிற்கான பாரிய குடிநீர்த் திட்டம நிறைவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(செ-2)

# ஜெனீவாவில் இராணுவத்தினரை காப்பாற்ற நான் தயார்

## குரல் கொடுக்கிறார் சரத்

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் இலங்கை சார்பில் குரல் கொடுக்க தான் தயாராக இருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை ஆணைக்குழுவில் இராணுவத்தினருக்காக குரல் கொடுத்து அவர்களைகாப்பாற்றதயார் எனினும் சில நபர்களை காப்பற்ற நான் தயாரில்லை.

சட்ட ரீதியான இலங்கை அங்கமவகிக்கும் அமைப்புகளின சட்டத்திட்டஙகள் அனைத்தும் இலங்கைக்கும் பொருந்தும்.

இல்ங்கையில் போர் நடைபெற்ற போது தவறுகள் இடம்பெற்றனவா என்பதை அறிந்து கொள்ளும் தேவை எவருக்காவது இருந்தால், இராணுவத்தின் சார்பில் ஆஜராகி நாட்டின் கௌரவத்தை பாதுகாக்க நான் தயாராக இருக்கின்றேன்.

எனினும் சில நபர்கள் தவறு செய்திருந்தால் அவர்களை நான் காப்பற்ற போவதில்லை. இராணுவத்தினருக்காக பேசுவேன். சகல சட்டங்களையும் மதித்து மனித உரிமைகளை பாதுகாத்து போரிடுமாறு நான் இராணுவத்தினருக்கு உத்தர விட்டிருந்தேன் என்றார். (செ-2)



வலி.தெற்கு பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பார்த்தீனிய களைகளின் பரம்பல் அதிகரித்து காணப்படுகின்றது. வெற்றுக் காணிகளிலும் வீதியோரங்களிலும் இவற்றின் பரம்பலை அவதானிக்க கூடியதாகவுள்ளது. உடுவில் பிரதேச செயலகம் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபை பிரதான அலுவலகம் என்பவற்றை அண்மித்துள்ள வெற்றுக் காணியொன்றில் பார்த்தீனியக் களைகள் ஆக்கிரமித்திருப்பதை படத்தில் காணலாம். இதேவேளை இம்மாதம் வடமாகாண பார்த்தீனிய ஒழிப்பு மாதமாக வடமாகாண விவசாய அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுவும் குறிப்பிடத் தக்கது. (படம்:- அ.மே.சேவியர்)

# அளுத்கமகேவுக்கு எதிராக விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக அவரது மனைவி செய்துளள முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர.

அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவினால்தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு அமைச்சரே காரணம் எனவும் அமைச்சரின் மனைவியான ஆஷாவிஜயந்திபெரேரா பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்திருந்தார்.

அமைச்சரின் மனைவியின் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக பொலிஸ் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

# மரண தண்டனை குறித்து மாற்றம் கொண்டு வர உத்தேசம்

மரண தண்டனையில் மாற்றம் கொண்டு வருவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள்மற்றும்புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட டுள்ள கைதிகளின் தண்டனையை ஆயுள்தண்டனையாக குறைப்பதறகு திட்டமிட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திர சிறி கஜதீர குறிப்பிட்டுள்ளார்.

ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் தண்டனைக் காலத்தை 20 வருடங்களாக குறைப்பது, குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான யோசனைத் திட்டமொன்றை நீதி அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மரண தண்டனையை இரத்து செய்யுமாறு பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையிடம் நேரடியான கோரிக்கைகளை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# போதைப் பொருள் தொடர்பில் பாராளுமன்றில் விசேட விவாதம்

## கோருகிறது ஜே.வி.பி.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் பாராளுமன்றில் விசேட விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்ற விவாதம் நடத்துவதுதொடர்பிலான உத்தியோகபூர்வ கோரிக்கையை கட்சி சபாநாயகரிடம் முன்வைக்க உள்ளதாக கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர்அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

261 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய கொள்கலன் ஒன்றை அண்மையில் இலங்கை சுங்கப் பிரிவினர் மீட்டிருந்தனர். இந்த சம்பவம் தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி. கோரியுள்ளது.

இந்தப் போதைப்பொருள் அடங்கிய கொள்கலனை விடுவிப்பதற்கு பிரதமர் அலுவலகத்திலிருந்து கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக குற்றம சுமத்தப்பட்டுள்ளது.

எனினும்,இந்தச் சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என பிரதமர் தெரிவித்துள்ளார். இப் பிரச்சினை தொடர்பில் மக்களுக்கு தெளிவான விளக்கம் அளிக்கப்பட வேண்டுமாயின் பாராளுமன்றில் இது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டுமென அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுளார். (செ-2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# தமிழக முதல்வரை சந்திக்க தயாராகும் மனோ கணேசன்

ஜனநாயக மக்கள் கட்சியின் தலைவர் மனோகணேசன் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்திக்க தயாராகி வருகிறார்.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு வெற்றிகரமான அரசியல் தீர்வை காண வேண்டுமாயின் அயல் நாடான இந்தியாவின் உதவி இலங்கைக்கு அவசியம் என்பதால் தான் தமிழக முதல்வரை சந்திக்கவுள்ளதாக மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கைக்கு மிகவும் அருகில் இருக்கும் தமிழகம் தேசியப் பிரச்சினைக்கான தீர்வில் நேர்வையான தூண்டு கருவியாக இருக்க வேண்டும்.

அதேபோல் இலங்கையின் வடக்கு, கிழக்கு தனிநாடாக உருவாக்கினால் அடுத்தகட்ட நடவடிக்கையாக தமிழகம் துண்டுகளாக பிரிந்து செல்லும் என்பதை நான் தமிழக முதல்வருக்கு சுட்டிக்காட்ட எண்ணியுளேன் என மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழக முதல்வரை சந்திப்பதற்கான நேரம் கிடைத்ததும் தான் அவரை சென்று சந்திக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றப்பட்டு ஒருவருடம் கடந்தும் இன்னல்களுடன் முள்ளிவாய்க்கால் மேற்கு மக்கள்

**(முல்லைத்தீவு)**

**முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள்ளிவாய்க்கால் மேற்கு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஒருவருடம் கடந்தும் பல இன்னல்களுடன் வாழ்ந்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

மேற்குறித்த கிராமத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் திகதி மீள்குடியேற்றப்பட்ட 320 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

போரினால் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட இக் கிராமத்தில் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படாது பாரபட்சம் காட்டப்படுவதுடன் போரினால் குறைந்தளவு பாதிக்கப்பட்ட முள்ளியவளை பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.



இக்கிராமத்தில் 66 வீடுகள் இந்தியன் வீட்டுத்திட்டத்தாலும் 39 வீடுகள் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினாலும் 6 வீடுகள் இராணுவத்தாலும் நிர்மாணித்து கொடுக்கப்பட்டன.

அத்துடன் 20 வீடுகள் இந்தியன் நிறுனத்தினாலும் 16 வீடுகள் போறூட் நிறுவனத்தினாலும் புனரமைத்து கொடுக்கப்பட்டன.

50 வீடுகள் திருத்தப்படாத நிலையிலுள்ளது.

இங்குள்ள 123 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவை. 1,2,3,4 அங்கத்தவர்களை கொண்ட 40 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளாவது தேவையாகவுள்ளது.

இக்கிராமத்தில் உள்ள 160 குடும்பங்களுக்கு மலசலகூடமும் 150 குடும்பங்களுக்கு கிணறும் தேவையாகவுள்ளது.

அத்துடன் 15 இற்கு மேற்பட்ட முன்னாள் போராளிகள் இங்குள்ள போது, வாழ்வாதார உதவிகள் எவையும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

மின்சாரம் இன்மையால் மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகிறது. மண்ணெண்ணெய் முத்திரையும் வழங்கப்படவில்லை.

இங்குள்ள மக்கள் சமுர்த்தி திட்டத்திற்கும் உள்வாங்கப்படவில்லை. 35 குடும்பங்களுக்கு நிரந்தர காணி கூட வழங்கப்படவில்லை.

16 உள் வீதிகளும் 50 இற்கு மேற்பட்ட கிளை வீதிகளும் இங்கு புனரமைக்கப்படாத நிலையிலுள்ளது.

இக்கிராமத்தில் உள்ள ஐந்து இந்துக் கோவிலும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் புனரமைக்கப்படாத நிலையிலுள்ளது.

பெருங்கடலில் தொழிலில் ஈடுபடும் 84 பேருக்கும் சிறுகடலில் தொழிலில் ஈடுபடும் 75 பேருக்கும் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவில்லை.ள

இங்கு 44 விதவைக் குடும்பங்களும் 14 கணவனால் கைவிடப்பட்ட குடும்பங்களும் 22 ஊன முற்ற குடும்பங்களும் வாழ்ந்து வருகின்ற நிலையில் இவர்களுக்கு உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

கிராம அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்பு, சமுர்த்தி அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், பல நோக்கு கூட்டுறவு சங்கம், மீனவர் ஓய்வு மண்டபம், ஆரம்ப சுகாதார நிலையம் என்பவற்றிற்கு காணி உண்டு கட்டடம் இல்லை.

எனவே உரியவர்கள் தமது அவல நிலையைக் கருத்திற் கொண்டு உதவ முன்வர வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)

## செய்திமடல் வெளியீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தினால் வெளியிடப்படும் "பேரிகை" ஆண்டுச் செய்தி மடல் வெளிவந்துள்ளது.

சமூக அறிவியல் சஞ்சிகையாக வெளிவந்திருக்கும் இச் செய்தி மடல் மாணவர்களின் ஆக்கங்கள் பாடசாலை நிகழ்வுகளின் பதிவுகள் என்பவற்றை தாங்கி வெளிவந்துள்ளது. (ம-5)

## கம்பனில் "நான்" நூல் வெளியீடு

(பூந்தோட்டம்)

கலாநிதி அகளங்கனின் கம்பனில் நான எனும் கட்டுரை நூல் வெளியீடு எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.


வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த முழுநிலா நிகழ்வில் இடம்பெற வுள்ள இவ் வெளியீட்டு நிகழ்வு கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், ம. தியாகராசா, இ. இந்திர ராஜா, க. சிவலிங்கம், சி. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்க தலைவர் நா. சேனாதி ராஜா, இந்து மாமன்ற தலைவர் வை. செ. தேவராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-266)







பூநகரி மத்திய கல்லூரியின் முத்தமிழ் விழாவும் பூவிழை சஞ்சிகை வெளியீடும் அண்மையில் நடைபெற்ற போது ....
( படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

## கிராம சேவையாளர் மீதான துப்பாக்கி சூட்டிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

(குருமன்காடு)

வவுனியா வைரவபுளியங்குளம் முன்னாள் கிராம சேவையாளர் திருமதி சற்குணசேயோன் பாலசுந்தரி மீதான இனந்தெரியாதோரின் துப்பாக்கி சூட்டினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாக கண்டிக்கின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட கிளை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயலாளர் சி.கோபாலகிருஸ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 4 ஆம் திகதி புதன் கிழமை இரவு 8.30 மணிக்கு கிராம சேவையாளரின் வேப்பங்குளம் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஜெகன் என்ற ஒரு பெயரைக் கூறி அவர் நிற்கின்றாரா என கேட்டனர்.

அதற்கு அவ்வாறான பெயரையுடைய ஒருவர் இங்கு இல்லை என முன்னாள் கிராம சேவையாளர் பதில் அளித்திருக்கின்றார்.

எனினும் அவ்விருவரும் வீட்டினுள் நுழைய முயற்சிக்கவே முன்னாள் கிராம சேவையாளர் வீட்டு கதவினை சாத்தி இருக்கின்றார். இதனை அடுத்து கதவின் மீது குறித்த நபர்கள் துப்பாக்கியினால் சுட்டிருக்கின்றனர். இத் துப்பாக்கி சூட்டில் 60 வயதான முன்னாள் கிராம சேவையாளர் காயம் அடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

தற்போது படையினரும் படையிருக்கு உதவுகின்ற ஆயுத குழுக்களும் மட்டுமே ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். அவர்களே இத் துப்பாக்கி சூட்டிற்கு பொறுப்பு கூற வேண்டும். முழத்திற்கு முழம் இராணுவ முகாம்கள் இருக்கின்ற நிலையிலும் உளவு பிரிவினர் அன்றாடம் மக்களின் கால்களுக்குள் தடக்குப்படுகின்ற நிலையிலும் வேறு நபர்கள் இத்துப்பாக்கிசூட்டை மேற்கொள்ள வாய்ப்புக்கள் எதுவும் இல்லை.

ஓய்வு பெற்ற அரச அலுவலர் மீது இடம்பெற்ற இத்துப்பாக்கி சூட்டினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாக கண்டிக்கின்றது. (ம-266)

## தமிழர் கூட்டணியின் மக்கள் குறைகேள் சந்திப்பு

(பூந்தோட்டம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான தமிழர் விடுதலை கூட்டணியின் வன்னித் தொகுதி உறுப்பினர்கள் மக்கள் குறைகேள் சந்திப்பை கடந்த 8 ஆம் திகதி வவுனியா கன்னாட்டி கிராமத்தில் மேற்கொண்டனர்.

இதன்போது மதகுருமார், கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் கிராமத்தின் தேவைகள் மற்றும் குறைகளை கலந்துரையாடியதோடு கிராமங்களின் பல பாகங்களுக்கும் விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இச் சந்திப்பின் போது வடக்கின் வசந்தம் இருந்தும் கூட மின்சாரம் இன்றி தவிக்கும் மக்கள் இது அவர்களின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

மீள் குடியேறியும் அடிப்படை வசதியின்றி தவிக்கின்றனர். 45 குடும்பங்களுக்கு கட்டாய உடனடி தேவையாக மலசலகூடங்கள் தேவைப்படுவதாகவும் தெரிவித்ததுடன் 50 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் ஒதுக்கப்பட்ட நிலையிலும் 23 குடும்பங்களுக்கு மாத்திரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளது எனவும் மக்களால் தமது நிலைப்பாடுகள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டதுடன், வனவிலங்குகளினால் விவசாய நிலங்கள் அழிக்கப்படுகிறமை இதற்கு மின்சாரம் இன்மையும் ஒரு காரணமாகிறது என சுட்டிக் காட்டிய அவர்கள் காலபோகம் செய்தும் கூட அறுவடை செய்யமுடியாமலுள்ளதாகவும் விசனம் தெரிவித்தனர்.


இதேவேளை விவசாய மானியம் பெறமுடியாமல் உள்ளமை, கிணறுகளில் உள்ள வெடி பொருட்கள் பூரணமாக அகற்றப்படாமை, மழை, வெயிலுக்கு ஒதுங்கக் கூடிய பஸ்தரிப்பிடங்கள் அற்ற நிலைமை, அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றத்தால் மக்களின் பூர்வீக காணிகள் பறிபோகின்றன மற்றும் காணிப் பிரச்சினைகள் நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாமை உள்ளது எனவும் பொது மக்களால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி தொகுதி உறுப்பினர்களிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வன்னி தொகுதி தலைவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இராஜ.குகனேஸ்வரன், மேற்படி குறைகளையும் தேவைகளையும் நிவர்த்தி செய்ய தம்மாலான முயற்சிகளை செய்வதோடு, போரினால் வாழ்விழந்த வன்னி மக்களின் வாழ்வில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள்மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் இம் மக்களின் குறைகளையும் தேவைகளையும் எடுத்துக் கூறுவதாகவும் தெரிவித்திருந்தார். (ம-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தந்தையின் பரிசு



சிறுகம்பையூர் என்ற ஊரில் ஏழை மனிதர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். இந்த ஏழை மனிதரிடம் செல்வம் இல்லையென்றாலும் தன் குழந்தைகளை அன்பு காட்டி அரவணைத்து நல்ல வழியில் வளர்த்து ஆளாக்கினார். தான் இறக்கும் தருவாயில் தன் பிள்ளைகளை அழைத்தார்.

"குழந்தைகளே... உங்களிடம் கொடுப்பதற்கு என்னிடம் பெரிதாக சொத்துக்கள் ஒன்றுமில்லை. என்னிடம் உள்ளதை உங்களுக்கு தருகிறேன். அதை கொண்டு நீங்கள் புத்தியோடு பிழைத்துக் கொள்ளுங்கள்," என்று கூறினார்.

முதல் மகனுக்கு ஒரு கோழியையும், இரண்டாம் மகனுக்கு அரிவாளையும், மூன்றாம் மகனுக்கு ஒரு பூனையையும் கொடுத்தார்.

"மகன்களே இந்த பொருட்களை பார்த்து ஏளனமாக நினைக்கவேண்டாம். இந்த பொருட்களில் உங்கள் தந்தையுடைய ஆசீர்வாதம் இருக்கிறது. என் சொல் பேச்சை கேட்டு நடந்தால் உங்களுக்கு நிறைய பொருட்களை இவை சம்பாதித்து தரும்.

"இவற்றை எடுத்து கொண்டு இந்த பொருட்கள் இல்லாத நாடுகளுக்கு சென்று உங்கள் அறிவு திறமையை பயன்படுத்தினால் நிச்சயம் பணக்காரனாவீர்கள்," என்று சொல்லிவிட்டு இறந்தார்.

தந்தையை இழந்த பிள்ளைகள் மிகவும் வருந்தினர். இறப்பு சடங்குகள் எல்லாம் செய்து முடித்த பிறகு மூத்த மகன், தந்தை கூறியபடியே கோழியை எடுத்து கொண்டு பெருஞ்செல்வந்தர் ஆவதற்காக வீட்டை விட்டு புறப்பட்டான்.

ஒவ்வொரு நாடாக சென்றான். எல்லா நாட்டிலும் கோழிகள் இருந்தன. எனவே, அவனது கோழியை விலைக்கு வாங்குவோர ஒருவரும் இல்லை. இப்படியாக பல நாடுகளை சுற்றி திரிந்தான். அவனுக்கு வெறுப்பு உண்டாயிற்று. இருப்பினும் அப்பா சொன்ன சொல்லை நினைத்து மனதை தேற்றிக் கொண்டு சென்றான்.

ஒரு நாள் ஒரு புதிய தீவை அடைந்தான். அந்த தீவில் கோழிகளே இல்லை. சூரியனை கண்டு காலை மாலை நேரத்தை அறிந்து கொள்வர். ஆனால், இரவு நேரத்தை அவர்களால் கணக்கிட முடியாமல் தவித்தனர்.

இதுதான் தன் கோழியை விற்க சரியான இடம் என்பதை அறிந்து, அந்த ஊர் மக்களை அழைத்தான் மூத்தவன்.

"இந்தப் பறவையை பார்த்தீர்களா? எவ்வளவு அழகாக இருக்கிறது. இதன் தலையில் அழகான கொண்டை இருக்கிறது. இந்த பறவை இரவு நேரத்தில் மூன்று முறை கூவும்.

"அப்படியென்றால்முதல் சாமம், இரண்டாம் சாமம், மூன்றாம் சாமம் என்று கணக்கிட வேண்டும். மூனறாம் சாமம் வந்ததும் விடியப் போகிறது என்று அர்த்தம்.



அதேபோல், பகலில் கூவும்போது, நேரத்தை எப்படி கணக்கிட வேண்டும்" என்பதை சொன்னான். அதை கேட்ட அந்த தீவு மக்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். அன்று இரவு கோழி கூவுவதை கேட்க ஆவலுடன் காத்திருந்தனர்.

அன்று இரவு கோழி மூன்றுமுறை கூவியது. அதை கேட்ட மக்கள் வியப்படைந்தனர். "ஐயா இந்த பறவையை எங்களுக்கு விலைக்கு கொடுங்கள்," என்று கெஞ்சினர் அவ்வூர் மக்கள்.

"ஒரு மூட்டை பொன் நாணயம் கொடுத்தால் நிச்சயமாக அந்த பறவையை தருவேன்," என்றான்.

"இத்தனை சிறந்த பறவைக்கு இவ்வளவு சிறிய அளவு பொன் கேட்கிறானே.." என்று நினைத்த மக்கள் உடனே அவன் கேட்ட அளவு பொன்னை கொடுத்து அந்த கோழியை வாங்கி கொண்டனர். பொன்னை எடுத்து கொண்டு ஊர் திரும்பினான் மூத்தவன்.

அண்ணன் கொண்டு வந்த பொற்காசுகளை கண்டு வியப்படைந்தனர் தம்பிகள் இருவரும். உடனே இரண்டாவது மகன் தன அரிவாளை எடுத்து கொண்டு புறப்பட்டான்.

அவன் புறப்பட்டு சென்று பல நாட்கள் வரையில் அந்த அரிவாளால் எந்த நன்மையும் ஏற்படவில்லை. பல இடங்களில் சுற்றினான். கடைசியாக ஒரு நாட்டிற்கு வந்தான். அந்த நாட்டிலிருந்தவர்கள் அரிவாளை பார்த்ததேயில்லை. அந்நாட்டு மக்கள் வயல்களில் தானியம்விளைந்தால், அவற்றை கையால் கசக்கியோ அல்லது கதிர்களை கிள்ளியோ எடுதது்ச் செல்வர்.

இதனால் தானியங்கள் பலவகையிலும் கீழே சிந்தி வீணாவதை குறித்து வருந்தனர். அத்துடன் அதிக நேரம் கஷ்டப்பட வேண்டியிருப்பதை உணர்ந்தனர். இந்த நிலையை பார்த்த இரண்டாவது மகன் அந்நாட்டு மக்களுக்கு தன்னுடைய அரிவாளின் பயனை எடுத்து கூறினான்.

பிறகு அரிவாளை கொண்டு கதிர்களை அறுத்துகட்டிகொடுத்தான். அதனால் கதிர்கள் வீணாகாமல் இருப்பதை கண்ட மக்கள் ஆச்சரியமடைந்தனர். "என்ன விலை வேண்டுமானாலும் சொல் தருகிறோம். அந்த அரிவாளை எங்களுக்கு கொடுத்துவிடு," என்றனர்.

இரண்டுமூட்டை நிறைய தங்க நாணயங்கள் கேடடான் இரண்டாமவன். அப்படியே கொடுத்துவிட்டு அந்த அரிவாளை வாங்கி சென்றனர். மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினான் இளையவன.

அண்ணன்கள் இருவரும் நிறைய பணம் சம்பாதித்து வந்ததைக் கண்ட தம்பி மகிழ்ச்சியடைந்தான். தானும் அவ்வாறே செல்வதாக கூறி தன்னுடைய பூனையுடன் புறப்பட்டான்.

பூனையுடன் பல நாடுகள் சுற்றிப் பார்த்தான். எல்லா நாடுகளிலும் பூனைகள் இருந்தன. இதனால் சில மாதங்கள் மிகவும் கஷ்டப்பட்டான். ஒருநாள் ஒரு நாட்டிற்குள் நுழைந்தான். அந்த நாட்டில் பூனைகளே இல்லை. ஆனால், எக்கச்சக்கமான எலிகள் இருந்தன.


அவை மக்களுக்கு கொடுத்து வந்த துன்பங்கள் ஏராளம். இதனால் அந்த ஊர் மக்கள் நிம்மதியை இழந்தனர். அந்த ஊர் ராஜா எலிகளின் தொல்லையை எப்படி நீக்குவது என்று தெரியாமல் தவித்தான். அச்சமயத்தில் அங்குள்ள ஒரு வீட்டில் தங்கினான் சிறியவன்.

அந்த வீட்டிலிருந்த எலிகளை எல்லாம் வேட்டையாடியது பூனை. இரண்டு நாட்களில் அந்த வீட்டில் எலிகளே இல்லை. இதை கண்ட நகரத்து மக்கள் மகிழ்ந்து போய் அரசனிடம் இந்த விஷயத்தை கூறினர். உடனே அரசன் இந்த புதுமையான விலங்கை விலைக்கு வாங்கினால் நாட்டிற்கு நன்மை ஏற்படும் என நினைத்தான்.

பூனைக்காரனை அழைத்து, "உனக்கு எவ்வளவு பொருள் வேண்டும்?" என்று கேட்டான்.

பத்து மூட்டை பொன்னும், பத்து மூட்டை வெள்ளியும் கொடுத்தால் இந்த விலங்கை தருவேன் என்றான். அப்படியே கொடுத்து பூனையை வாங்கி கொண்டான் அரசன். தான் சம்பாதித்த பொருட்களோடு ஊர் போய் சேர்ந்தான்.

தங்களை விட தங்கள் தம்பி பல மடங்கு



மிகுதியாக பொருள்கள் கொண்டு வந்ததை கண்டு மகிழ்ந்தனர் அண்ணன்கள். சகோதரர்கள் மூவரும் தங்களுக்கு வேண்டிய வீடு, நிலம் முதலியவற்றை வாங்கி கொண்டு சுகமாக வாழ்ந்தனர்.

குட்டீஸ்... பெற்றோர் சொல் கேட்டு நடந்ததால் பிள்ளைகளுக்கு கிடைத்த அதிர்ஷ்டத்தை பார்த்தீர்களா?





- 1789- ஐக்கிய அமெரிக்காவின் மிகப் பழமையான பொதுப் பல்கலைக்கழகம் வட கரோலினா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1792-பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் நாட்டுத்துரோகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டான்.
- 1816- இந்தியானா ஐக்கிய அமெரிக்காவின் 19 ஆவது மாநிலமானது.
- 1907-நியூசிலாந்தின் நாடாளுமன்றக் கட்டடம் தீயில் எரிந்து சாம்பலானது.
- 1917-பிரித்தானியப்படைகள் ஒட்டமான் பேரரசிடம் இருந்து ஜெருசலேமை மீட்டன.
- 1927-சீனாவின் குவாங்சூ நகலை கம்யூனிஸ்டுகள் க்கைப்பற்றி அதனை குவாங்சூ சோவியத் என மாற்றியிருப்பதாக அறிவித்தனர்.
- 1931-ஆஸ்திரேலியா, கனடா, அயர்லாந்து, நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகியவற்றுக்கு தமது முழுமையான அரசியலமைப்புக்களைப் பேணும் சட்டமூலம் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் 1931 பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.
- 1936-ஐக்கிய இராச்சியத்தின் மன்னன் எட்டாம் எட்வேர்ட் முடிதுறந்தான்.
- 1941- இரண்டாம் உலகப்போர்: ஜேர்மனியும் இத்தாலியும் ஐக்கிய அமெரிக்காமீது போரை அறிவித்தன.
- 1946-ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்(யுனிசெப்) நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1964-நியூயோர்க் நகரில் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் சேகுவேரா உரையாற்றினார். இவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஐ.நா.கட்டடத்தின் மீது குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது.
- 1972-அப்பல்லோ 17 சந்திரனில் இறங்கியது.
- 1981-எல்சல்வடோரில் இராணுவத்தினர் நாட்டின் உள்நாட்டுப் போரின் ஒரு கட்டமாக கிட்டத்தட்ட 900 பொதுமக்களை கொன்றனர்.

### பிறப்புக்கள்

- 1781-சர்டேவிட் ப்ரூஸ்டர், ஸ்கொட்லாந்து இயற்பியலாளர்(இ.1868)
- 1803-ஹெக்டர் பேர்லியோஸ்,பிரெஞ்சு இசையமைப்பாளர் (இ.1869)
- 1843-றொபேர்ட் குக், ஜெர்மனிய அறிவியலாளரும் மருத்துவரும் (இ.1910)
- 1882- சுப்பிரமணிய பாரதி, கவிஞர் (இ.1921)
- 1931-ஓஷோ, இந்திய ஆன்மீகத் தலைவர் (இ.1990)
- 1935-பிரணாப் முகர்ஜி, இந்திய அரசியல்வாதி
- 1958-ரகுவரன், நடிகர் (இ.2008)
- 1969-விஸ்வநாதன் ஆனந்த், இந்திய சதுரங்க ஆட்டக்காரர்

### சேகுவேரா



சேகுவேரா 1928 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் திகதி ஆர்ஜன்டீனாவில் உள்ள் றொசாரியோ எனும் இடத்தில் பிறந்தார்.

இஸ்பானிய, பாஸ்க்கு, ஐரிய மரபுவழிகளை கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்த இவர் இளம் வயதிலேயே அரசியல் தொடர்பான பரந்த நோக்கை கொண்டு வளர்ந்தார்.

விடுதலைப்போராளியாக உருவாகிய சேகுவேரா தன்னை பிடல் காஸ்ட்ரோவின் போராட்ட இயக்கத்தில் இணைத்துக்கொண்டார். அவ்வியக்கம் 1959 இல் கியூபாவின் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றியது. தொடர்ந்து புதிய அரசில் பல முக்கியமான பதவிகளை வகித்த சேகுவேரா கொங்கோ- கின்ஸாசா மற்றும் பொலிவியா போன்ற நாடுகளின் சோசலிசப் போராட்ட வளர்ச்சிக்கு தனது பங்களிப்பினை அளிப்பதற்காக 1965 ஆம் ஆண்டில் கியூபாவில் இருந்து வெளியேறினார்.

பொலிவியாவில் சி.ஐ.ஏ மற்றும் அமெரிக்க சிறப்பு இராணுவத்தினது இராணுவ நடவடிக்கை ஒன்றின்போது சே கைது செய்யப்பட்டு வல்லெகிராண்டிற்கு அருகில் உள்ள லாகிகுவேரா என்னுமிடத்தில் 1967 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி கொல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்கின் மேல் கோபம் வருகிறதா?



ஆன்மீகம் 64

**கேள்வி:-** எதற்கெடுத்தாலும் குறை கண்டுபிடிக்கும் என் மாமியாரால் தினம் தினம் வேதனை அனுபவிக்கிறேன். என் கோபத்தை எங்கே காட்டுவது? என் குழந்தைகள்மீது காட்டுகிறேன். கையில் கிடைத்ததைத் தூக்கி எறிகிறேன். கோபம் அடங்கியதும், நானா இப்படி நடந்து கொண்டேன் என்று எனக்குள்ளே வெட்கப்படுகிறேன். என்ன செய்வது?

**சத்குரு:-** மனநலம் தவறிய ஒருவன், தன்னை ஒரு கயிறு வைத்துத் தூணுடன் கட்டிப்போட்டிருப்பதாகக் கற்பனை செய்துகொண்டான். தூணையே சுற்றிச் சுற்றி வந்தான். அவனுடைய பரிதாப நிலைமையைப் பார்த்து வேறொருவன் அவனைத் தள்ளி வரச் சொன்னான்.

என்னை இந்தத் தூணுடன் பிணைத்திருக்கும் கயிற்றை முதலில் வெட்டி என் கையில் கொடு. அப்புறம்தான் என்னால் நகர முடியும் என்றான் அவன்.

நீங்களும் அப்படித்தான். கோபம் என்ற தூணுடன் யாரோ வந்து உங்களைப் பிணைக்கவில்லை. இதைப் போன்ற தேவையற்ற பல விடயங்களுடன் கற்பனைக் கயிற்றால் உங்களை நீங்களேதான் பிணைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். நீங்களாகத் தயாரித்து விலங்கிட்டுக் கொள்ளப் பயன்படுத்தும் சங்கிலிகளை யாராவது வந்து துண்டிப்பார்கள் என்று காத்திருந்தால், வாழ்நாளே முடிந்து விடும். கோபம் உற்பத்தியாவது உங்களிடமா? அல்லது வேறெங்கோ வெளியிலா? அதை எடுத்துவந்து உங்கள் மாமியார் உங்கள் மீது அணிவிக்கிறார் என்று சொல்லித் தப்பிக்கப் பார்க்கிறீர்கள்.

சங்கரன்பிள்ளை டாக்டர் வீட்டுக்குப்போனார்.

சமீபகாலமாக என் மனைவிக்குக் காது கேட்கவில்லை டாக்டர். எதையும் பத்துத் தடவை சொன்னால்தான் பதில் சொல்கிறாள் என்றார்.

அது எவ்வளவு மோசம் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு வீட்டுக்குப் போனதும், பதினைந்து அடி தூரத்தில் நின்று ஏதாவது சொல்லுங்கள். பதில் வரவில்லையென்றால், இன்னும் கொஞ்சம் கொஞ்சமாகக் கிட்டே போய்ச் பேசிப் பாருங்கள். எத்தனை தூரத்தில் நின்று பேசினால் அவளுக்குக் காது கேட்கிறது என்று கண்டுபிடித்துச் சொல்லுங்கள் என்றார் டாக்டர்.



சங்கரன்பிள்ளை வீட்டுக்குப்போனார். பதினைந்து அடி தூரத்திலிருந்து ஏதாவது போன் வந்ததா? என்று மனைவியைக் கேட்டார். பதில் வரவில்லை. ஒவ்வொரு அடியாக நெருங்கிப்போய் அதே கேள்வியைக் கேட்டார். பதில் இல்லை. மனைவியிடமிருந்து இரண்டடி தூரத்தில் நின்று கேட்டபோது அவள் வெடுக்கென்று திரும்பினாள்.

பத்தாவது தடவையாகச் சொல்கிறேன். எந்த போனும் வரவில்லை. போதுமா?

இப்போது சொல்லுங்கள். பிரச்சினை யாரிடம் இருக்கிறது. சங்கரன்பிள்ளையிடமா, அவரது மனைவியிடமா?

உங்களுடைய இன்றைய நிலைக்குக் காரணம் உங்கள் மாமியார் அல்ல. நீங்கள்தான். கோபம் விலகியதும், வெட்கப்படுவதாகச் சொல்கிறீர்கள். கோபம் வருவதற்கே நீங்கள் வெட்கம் கொள்ள வேண்டும்.

குரங்கு ஒன்று ஆர்வமிகுதியால், அசிங்கத்தைத் தொட்டுப் பார்த்தது. தன்னிச்சையாகக் கையைத் தன்மீதே துடைத்துக்கொண்டது. அதன் துர்நாற்றம் தாங்க முடியாமல், அந்த இடத்தை விட்டே ஓடிப்போனது. ஆனால், மணம் வீசும் மலர்த் தோட்டத்துக்குப் போனால் கூட துர்நாற்றம் தொடர்ந்தது. குரங்கு செய்வதறியாது தவித்தது.

அசிங்கத்தை எடுத்துப் பூசிக் கொண்டால் எங்கே போய் ஒளிந்து கொண்டாலும் துர்நாற்றத்திலிருந்து தப்பிக்க முடியாது. கோபம், பொறாமை, சந்தேகம் போன்ற பல தவறான குணங்களுக்கு இடம் கொடுத்தால். வேதனைகளிலிருந்து விடுபட முடியாது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஈழத் தமிழர் போராட்டம் மூன்றாவது வழிமுறையை அடைந்துள்ளது

தமிழ் மக்கள் சுயாட்சியுடன் வாழ வேண்டும் என்கின்ற அரசியல் அபிலாசைகளைக் கொண்டுள்ள போதிலும் இலங்கை அரசு தமிழ்மக்களின் அபிலாசைகளைத் தனது சொந்தக் காரணங்களுக்காக மறுத்து வருகிறார். சிங்களப் பேரினவாதிகளின் மேலான செல்வாக்கின்கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இலங்கை அரசாங்கமானது வெற்றிக்களிப்பில் உள்ளதுடன் இதன் காரணமாக சிங்கள மக்களின் மனங்களை வென்றுள்ளது. போரில் தப்பிச் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீளவும் ஒன்றுசேர்ந்து நாட்டிற்கு குந்தகம் விளைவிக்கலாம் என்கின்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி தொடர்ந்தும் இராணுவத்தின் தலையீடுகளை இலங்கை அரசாங்கம் அதிகரித்து வருகிறது. அத்தியாவசியமான அதிகாரப்பகிர்வுக்கான எந்தவொரு விட்டுக்கொடுப்பும் பலவீனமடைவதைக் காண முடிகிறது.

இதேவேளையில், இலங்கை அரசாங்கம் நாட்டில் ஜனநாயகம் மற்றும் மறுமலர்ச்



The Dilomat ஊடகத்தில் Kum Wall- (Colombia graduate and journalist Formerly a reporter for the south china morning post) எழுதியுள்ள கட்டுரையிலிருந்து...

சிக்கான தனது அனுமதியை வழங்காது விட்டால், இது நீடித்து நிலைப்பது மிகவும் கடினமானதாக இருக்கும். நீண்ட காலமாக அரசியல் தீர்வுக்காக காத்திருக்கும் தமிழ் சமூகத்தின் மீது மட்டுமல்லாது, இலங்கையில் வாழும் ஏனைய சிறுபான்மை இனங்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் வாழும் கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களை இலக்கு வைத்து இராணுவத்தினரும் பௌத்த ஆயுததாரிகளும் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இவ்வாறான போக்கானது இலங்கையின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்தை எதிர்க்கும்போது மாற்றமடையும். இவ்வாறான நிலைப்பாடானது தமிழ்- முஸ்லிம் கூட்டணி ஒன்று விரைவில் உருவாக வழிவகுக்கலாம்.

ஊடகங்கள் மீது இலங்கை அரசாங்கம் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகள் விதித்துள்ள போதிலும் வன்முறைச் சூழலானது விரைவில் ராஜபக்ச குடும்பத்திற்கு தீங்கு விளைவிப்பதாக இருக்கும்.

இலங்கை அரசாங்கமானது நாட்டில் மிகவும் பயனுள்ள மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு தயாராக இல்லை என்பதை அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு தெளிவாகக் காண்பித்துள்ளது என்பது இலங்கைக்கு ஒரு கெட்டவாய்ப்பாகும். எதிராக அமைதி வழியில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்பவர்கள், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக இலங்கை காவற்றுறை மேற்கொண்ட தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் இலங்கையில் நடந்தேறுகின்றன. இவை பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டின் போது காண்பிக்கப்பட்டன.

இலங்கை அரசாங்கம் அனைத்துலக ரீதியில் தன்மீதான மதிப்பீடு தொடர்பாக கவனம் செலுத்தாதுவிடலாம். பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டில் அரசின் முன்னுரிமை முதன்மையிடத்தில் வைக்கப்படாதிருக்கலாம். இலங்கையால் இழைக்கப்படும் மீறல்களை அனைத்துலக சமூகமானது மிகக் கவனமாக உற்றுநோக்கிக் கொண்டுள்ளது.

"இங்கு அரசியல் சூழல் மிக மோசமாக உள்ளது. ராஜபக்ச அரசாங்கம் மீது அனைத்துலக சமூகமானது தனது அழுத்தத்தை இடும் என நாம் நம்புகிறோம். இது மட்டும் எம்மிடமுள்ள ஒரு வாய்ப்பாகும். நாங்கள் எமது கருத்துக்களைக் கூறிமுடியாது" என பல தடவைகள் இடம்பெயர்ந்து தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு வயது போன பெண்மணி வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் அரசாங்கத் தலைவர்களுக்கான உச்சி மாநாடு நடந்து முடிந்துள்ள நிலையில் அங்கு இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு ராஜபக்சவுக்கு எதிராக மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையகத்தில் விவாதம் ஒன்று மேற்கொள்ளப்படும். அண்மைய நாட்களில் இலங்கைக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கின்ற சீனா கூட இலங்கையின் மனித உரிமைச் சூழல் தொடர்பில் தனது அதிப்தியை முன்வைத்துள்ளது. இலங்கை அதிபர் தான் தனது சொந்த நாட்டில் அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்படுவதோடு மட்டுமன்றி இராஜதந்திர ரீதியிலும் தான் ஓரங்கட்டப்படுகின்றேன் என்பதை தானாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேவேளையில் இலங்கை அரசின் தவறான நகர்வுகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேலும் மேலும் மிதவாதியாக மாறுவதுடன் வேறு தெரிவினை நாடிச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இலங்கையானது ஊழல் மிக்க நாடாக மாறிவருகிறது. வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது புதிய காற்றைச் சுவாசிப்பது போல் தெரிகிறது. இலங்கையின் சட்ட அறிவைக் கொண்ட மிகச்சிறந்த அறிவாளிகளில் ஒருவராக ஓய்வுபெற்ற முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரன் திகழ்கிறார். இவர் கடந்தவாரம் கெமரூனுடன் பேச்சு நடத்திய பின்னர், தற்போது பிரித்தானியாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசாங்கம் தனது மக்களுக்கு நம்பகமான எதனையும் செய்யாவிட்டாலும்கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களுக்கு உதவி செய்ய வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்காளர்கள் தமது வாக்குகளை வழங்கிய போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பானது தமிழ் மக்களுக்கான தனிநாடான ஈழத்தை ஒருநாள் பெற்றுத் தரும் என நம்பிக்கையை வெளியிட்டனர். இது ஒரு கனவாக உள்ள போதிலும் நாட்டில் நிலையான உறுதியான மீளிணக்கப்பாடு ஏற்படுவதற்கும், அரசியல் பங்களிப்பு மற்றும் முழுமைய உரிமை போன்றவற்றை மக்கள் பெறுவதற்கான நடவடிக்கை அடுத்து எடுக்கப்படுவது மிகச்சிறப்பாக இருக்க முடியும்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பானது சமவலுவில் செயற்பட வேண்டும். அனைத்துலக சமூகமானது இலங்கை அரசாங்கம் மீது நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவது மற்றும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது தொடர்பில் அழுத்தங்கொடுப்பதிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியானது தங்கியுள்ளது. இதில் புலம்பெயர் சமூகம் பெரும் பங்காற்ற வேண்டும்.

தலைவர்கள் மீது அழுத்தங்களைப் போடுவது மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான முதலீட்டை மேற்கொள்கின்ற மிக முக்கிய ஊடகமாகவும் புலம்பெயர் தமிழ் சமூகம் செயற்பட வேண்டும். இலங்கையின் வரலாற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது புதிய சரித்திரம் ஒன்றை உருவாக்கலாம். குறைந்தது கலந்துரையாடலாவது மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியின் மதிப்பீடானது இதன்மூலம் பெற்றுக்கொள்ளப்படும். பல பத்தாண்டுகளின் பின்னர் முதற்தடவையாக இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தமது விருப்பம் என்ன என்பதை ஒருமித்த குரலில் வெளிப்படுத்தியுள்ளனர்.

"நாங்கள் தமிழ் சமூகத்தின் அவாவை நிறைவு செய்வதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளோம். நாங்கள் முதலில் 30 ஆண்டுகளாக அமைதி வழியில் போராடித் தீர்வைப் பெற முயற்சித்தோம். இதன்பின்னர், தமிழ்ப் புலிகளுடன் இணைந்து நாங்கள் 30 ஆண்டுகளாக வன்முறை வழியில் போராடினோம். தற்போது நாங்கள் மூன்றாவது வழிமுறையில் எமது அவாக்களை அடைய முயற்சிக்கிறோம்" என வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்த அடுத்த நாள் வாக்காளர் ஒருவர் தெரிவித்திருந்தார். அனைத்துலக சமூகத்தின் ஆதரவுடன் மூன்றாவது வழிமுறையானது இலங்கையில் வாழும் சிறுபான்மை சமூகத்தவர்கள் தமது சிறந்த வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## தமிழ் இலக்கிய நயம் பகுதி I

**பகுதி I இல் 1. 2 ஆம் வினாக்களுக்கும்**
**பகுதி II இல் 3 ஆம் வினாவுக்கும்**
**பகுதி III இல் 4, 5, 6, 7 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**01. (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

(i). "ஐயனே! தேனும் மீனும் திருத்திக் கொண்டு வந்தேன். தேவரீர் திருவமுது செய்தருள வேண்டும்" இக் கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது.

(ii). "குயில் போல் பேசிடும் மனையாள்" என்ற பாடல் அடியில் காணப்படும் அணி யாது? விளக்குக.

(iii). தாய் தாலாட்டும் போது, உறவினர்களையும் பாடலில் சேர்த்துக் கொள்வதன் காரணம் யாது?

(iv). "பரிந்து ஓம்பிக் காக்க ஒழுக்கம், தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை" இக்குறட்பாவின் கருத்தினைத் தருக.

(v). முயற்சி உடையோருக்கு கிடைத்த வெற்றிகளையும் விதியை நம்பியோருக்குக் கிடைத்த தோல்விகளையும் குறிப்பிடுக.

(vi). "மன்னர் அறம் புரிந்தால் வையகமெல்லாம் மாண்பு பெறும்" இப் பாடலடிகள் பற்றி உமது கருத்துக் களைக் குறிப்பிடுக.

(vii). ஏற்றப்பாடல் என்றால் என்ன?

(viii). "புரூட்டஸ் நீயுமா?" என்ற சீசரின் வினா உமது உள்ளத்தில் எத்தகைய உணர்வை ஏற்படுத்து கின்றது?

(x). மொழி ஒரு குறியீடாகக் குறிப்பிடப்படுவதற்கான காரணம் யாது?

**02. பின்வரும் செய்யுள்களினதும் உரைப் பகுதிகளினதும் பொருளை உங்கள் மொழி நடையில் எழுதி, தடித்த அல்லது அடிக்கோட்டிட்ட தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.**

(i). களம்புகலோம்பின் றெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைகல்
**எண்டேர் செய்யுந் தச்சன்**
**திங்கள் வலித்த காலன்னோனே**

(ii). **பெய்யும் மாரியில் பெருகு வெள்ளம் போய்**
**மொய்கொள் வேலை வாய் முடுகும் ஆறு போல்,**
ஐய! நின் மதற்கு அளவு இல் விஞ்சை வந்து
எய்து காலம் இன்று எதிர்ந்தது - என்னவே.

(iii). **ஆடிக் குடத்தையு மாடும் போதேயிரையும்**
**மூடித் திறக்கின் முகங்காட்டும்** - ஓடி மண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற் பிண்ணாக்கு முண்டாம்
உற்றிடு பாம்பெள்ளெனவே போது

(iv). **ஆகவே பேச்சு என்பது மக்களது அரிய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்த செல்வமாகும்.** என்று நாம் எளிதில் துணியலாம் அன்றியும் அது மக்கள் இனத்துக்கு மட்டுமே ஏகவுரிமையாக உள்ளது என்பதும் நாம் நன்கு உணரலாம். விலை மதிக்க முடியாத இப்பரம்பரை உரிமைதான் நம் மக்கள் இனத்தவர்க்குச் சிருஷ்டிகளில் தலைமைப் பதவியை அளிக்கின்றது.

(v). **ஆறுமுக நாவலருக்குச் சமயம் உயிர், மொழி உடல் உயிர்** நிலை பெறுவதற்கு உடலை நல்ல முறையிற் பேண வேண்டும்.எனவே தான் சமயத்தை வளர்ப்பதற்கு மொழி வளர்ச்சி அவசியமாயிற்று. மொழியைப் பேணுவதற்குக் கல்வியை விருத்தி செய்தல் இன்றியமையாதது ஆகும். தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள், முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை நிறுவுதலும் சைவப் பிரசாரம் செய்தலுமே எனக் கண்டார்.

## தமிழ் இலக்கிய நயம் பகுதி II

**03. கீழே தரப்பட்டுள்ள பாடற் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வத் தமிழ் மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமிலெம் மொழி மாதா - படும்
அல்லலைத் தீர்க்க அறிவு வராதா

முச்சங்கத் தரியணை யேறி - மன்னர்
முடி தொட்ட மூவரும் அடி தொட்டுப் போற்ற
விச்சையாலரசாண்ட மாதா - அவள்
வேதனை தீர்க்க விரக்கம் வராதா

இன்னமுதோ தெளிதேனோ - என
எஞ் செவிக்கினிக்கின்ற மொழியெது தானோ
அன்னை மொழிதனை நாமோ - வெறுத்
தரு வருத் தவமித் திடலழகாமோ

வேற்று மொழிகளைக் கற்றோம் - எங்கள்
மெய்யான முது சொத்தை விலை பேசி விற்றோம்
ஆற்றிலே புளி கரைத்திட்டோம் - ஐயோ
அருமந்த தமிழினை யறியாது கெட்டோம்

(i). இப் பாடல்களை கவிஞர் எழுதியதன் நோக்கம் யாது?

(ii). இப்பாடல்களில் தமிழ் மொழியின் தொன்மை, இனிமை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(iii). பின்வரும் அணிகளை விளக்குக
தெய்வத் தமிழ்
மொழி மாதா

(iv). "மெய்யான முது சொத்தை விலை பேசி விற்றோம்
ஆற்றிலே புளி கரைத்திட்டோம்" என்ற அடிகள் மூலம் புலப்படுத்தப்படுவது யாது?

(v). இப்பாடல்களின் ஊடாக கவிஞரின் மொழிப் பற்று வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக

## தமிழ் இலக்கிய நயம் பகுதி III

**04. ''காலனும் கிழவியும்'' என்ற சிறுகதையில் நகைச்சுவை உணர்வை கதாசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என விளக்குக.**

**05. திருக்குறள்- ''நட்பு'' என்ற அதிகாரத்தில் அறிவுடையோர் நட்பு, பண்புடையாளர் தொடர்பு, உண்மையான நட்பு என்பன எவ்வாறு விளக்கி கூறப்பட்டுள்ளது?**

**06. கம்பராமாயணக் கையடைப் படலத்தில் இராமன் மீது கொண்டிருந்த பாசம் வெளிப் படுத்துமாற்றினை விளக்குக.**

**07. '' செந்தமிழ் மரபும் இஸ்லாமிய மரபும் வழுவாது காவியம் இயற்றியவர் உமறுப்புலவர்'' என்பதை நோக்கியும் நோக்காததும் போல் என்ற கட்டுரையில் ஆசிரியர் எடுத்துக் காட்டி இருப்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.**

## விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் விடைகள் பகுதி II

**01.**

i. 1.தானியப்பயிர் 2.அவரைப்பயிர் 3.காய்கறிப்பயிர் 4.கிழங்குப்பயிர்

ii. 1.நோய்பீடைத் தாக்கத்தை குறைத்தல்
2.மண்ணில் போசணை குறைபாடு ஏற்படாது
3.பல் வேறு ஆழங்களிலிருந்து போசணை பெறப்படும்
4.அவரைப்பயிர் காரணமாக நைதரசன் பதிக்கப்படும்
5.நிச்சயமற்ற தன்மை குறைவு

iii. 1.வட்டத்தட்டுக் கலப்பை 2.முள்மண்வெட்டி 3.மண்வெட்டி 4.மிதிமுள்ளு

iv. 1.மண்ணைப் புரட்டுதல் 2.களை கட்டுப்பாடு

v. 1.கிளிசரீடியா 2.இப்பில் இப்பில் 3.முள்முருக்கை 4.அகத்தி

vi. 1.சாடிப்பயிர்ச்செய்கை 2.கிடைப்பயிர்ச் செய்கை
3.நிலைக்குத்துப்பயிர்ச் செய்கை 4.பயிர்ச் செய்கைத் தட்டு
5.பயிர்ச் செய்கை கூடை

vii. 1.பெரும் போகம் 2.வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை

viii. 1.கூட்டெரு 2.பண்ணையெரு,மாட்டெரு 3.பசுந்தாட்பசளை

ix. 1.மண் கட்டமைப்பு மேம்படல் 2.மண் காற்றூட்டல் மேம்படல்
3.நீர்ப்பற்றுத் திறன் அதிகரித்தல் 4.நுண்ணங்கித் தொழிற்பாடு அதிகரித்தல்
5.கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு அதிகரித்தல்

x. 1.சீதேவியார் செங்கழுநீர் -ஓராண்டுக்களை 2.சிறுகோரை-பல்லாண்டுக்களை

**02.**

1. A.நிரம்பல் நிலை B.களக்கொள்ளளவு நிலை (வயற்கொள்ளளவு) C. நிரந்தர வாடல் நிலை
2. 1.புவியீர்ப்பு நீர் 2.மயிர்துளை நீர் 3.பருகுநீர்
3. a.புவியீர்ப்பு நீர் b.மயிர்துளை நீர் c.பருகுநீர்
பருகுநீர்

**03.**

1. சேதனப் பசளையை இட்டு மண்ணின் பௌதீக ,இரசாயன,உயிரியல் இயல்புகளை விருத்தி செய்து பயிரின் தேவையை நிறைவேற்றும் வகையில் மட்டும் இரசாயனப் பசளையிடுதல்
2. (a) நைதரசன்,பொசுபரசு,பொட்டாசியம் (b) பொட்டாசியம்
3. a) போசணைப் பதார்த்தங்கள் மண்ணினுள் கசிந்து விரயமாதலை குறைத்தல்
b) சேதனப் பசளைகளின் சிதைவடைதலை விரைவுபடுத்தல்
c) சேதனப் பசளை சிதைவடைய தேவையான நுண்ணங்கிகளை அறிமுகஞ் செய்தல்
d) - நுண்ணங்கிகளுக்குத் தேவையான காற்றூட்டலை வழங்கல்
- சிதைவடையாத பதார்த்தங்களையும் சிதைவடைந்த பதார்த்தங்களையும் கலத்தல்

**04.**

i.

| விலங்குவகை | வகைப்படுத்தல் | உதாரணம் |
|---|---|---|
| (a) மாடு | 1.பாலுக்கானது | 4.பிறிசியன் |
| | 2.இறைச்சிக்கானது | 5.ஹெறிபோர்ட் |
| | 3.இழுவைக்கானது | 6.[illegible] |
| | | [illegible] காங்கேயன் |
| (b) எருமை | 7.பாலுக்கானது | 8.முறா |
| (c) ஆடு | 9.பாலுக்கானது | 10.சாணன் |
| (d) கோழி | 11.முட்டைக்கானது | 14.லெகோன் |
| | 12.இறைச்சிக்கானது | 15.ஹைபுறோ |
| | 13.இரு நோக்கமுடையது | 16.ஒஸ்ரேலோப் |

ii. 1.திறந்த வெளிவளர்ப்பு 2.அரைத் தீவிர முறை வளர்ப்பு
3.தீவிர முறை (செறிவான) வளர்ப்பு

iii. 1.சுறுசுறுப்பான தன்மை,அமைதியான சுபாவம் 2.வர்க்கத்துக்குரிய உடலமைப்பைக் கொண்டிருத்தல்
3.இறகுகள் சிலிர்த்துக் காணப்படும் 4.நகங்கள் தேய்ந்து காணப்படும்
5.பிரகாசமான கண்கள்

**05.**

i. a) வாழை b) வைரசு

ii. 1.நோய்க் காரணி 2.விருந்துவழங்கித் தாவரம்
3.நோய்க் காரணிக்கு உவப்பான சூழல்

iii. a) நாற்றழுகல்
b) பித்தியம் ,றைசொக்ரோணியா,பியூசாரியம்
- வித்திலைகள் நிறம் மங்கி உருவாகும்
- வித்திலைகள் உலர்தல்
- நாற்றின் கழுத்துப் பகுதி அழுகுதல்

**06.**

1. (a) உயிருள்ள (வாழ்தகவு கொண்ட) வித்துக்கள் முளைப்பதற்கு நிபந்தனைகள் அனைத்தும் உரிய அளவில் கிடைத்த போதும் முளைக்காதிருத்தல் நிலையே உறங்கு நிலையாகும்
(b) A - மா-வித்துறையை காயப்படுத்தல் B - தக்காளி-நீரில் கழுவுதல்
C - தேக்கு- ஓரளவு நெருப்பில் சுடுதல் D - நெல்-நீரில் ஊறவிடுதல்

2. (a) வாள் உறிஞ்சி
(b) 1.அடியிலுள்ள சிறிய இலைகளை அகற்றுதல் 2.பங்கசு நாசியினால் பரிகரித்தல்
3.பூச்சி நாசினியால் பரிகரித்தல் 4.3-4 நாட்கள் நிழலான இடத்தில் வைத்தல்

3. 1.குறைந்தளவு நீரை அதிகளவு பரப்புக்கு பாய்ச்ச முடிதல் 2.ஆவியாதல் மூலமான நீரிழப்பு குறைவு
3.நீர் கசிந்து இழக்கப்படல் குறைவு 4.கண்கள் முறைப்பது குறைவு
5.நீருடன் பசளையையும் கலந்து இடலாம் 6.தொழிலாளர் தேவை குறைவு

**07.**

1. A) உலர்தல்-உணவிலுள்ள நீரின் அளவைக் குறைத்தல்
B) குளிரூட்டல்-நுண்ணங்கிகள் வாழ ஏற்றதல்லாத வெப்பநிலையை குறைத்தல்
C) பாய்சராக்ரம்-நோயாக்கு நுண்ணங்கிகளை அழித்தல்
D) கிருமியழித்தல்-எல்லா நுண்ணங்கிகளையும் அழித்தல்

2. A) உலர்த்துதல்-மரக்கறி, பழங்கள், இறைச்சி, மீன்
B) குளிரூட்டல்- மரக்கறி, பழங்கள், இறைச்சி, மீன்
C) பாய்ச்சாராக்கம்- பால், பழச்சாறு
D) கிருமியழித்தல்-பால்

3. a) i)சோடியம் மெற்றா சல்பைட்டு
ii)பென்சசொயிக்கமிலம்
iii)பொட்டாசியம் மெற்றா சல்பைட்டு

b) a) பாலின் நீர்ச் சதவீதத்தை குறைத்தல்
b) கொதித்தலுக்கு தேவையான வெப்பநிலை வழங்குதல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

நீங்கள் எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் அதைத் தொடர்ந்து முடிக்காமல் தூங்கக்கூட மாட்டீர்கள். நீங்கள் பிறர் செய்யும் குற்றங்களை அவ்வப்போது கண்டுபிடித்து அச்சமின்றி அவர்கள் எதிரிலேயே எடுத்துக்கூறித் திருத்த முயல்வீர்கள்.

உதாரகுணமுடைய உங்களுக்குச் சில சமயங்களில் உணர்ச்சி வெடிப்புக்களினால் ஆவேசமும் கோபமும் வருவதுண்டு. நீதி நேர்மையைப் பற்றிப் பேசிக் குற்றம் செய்தவரைத் தண்டிக்கத் தயங்காத நீங்கள் மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி ஒரு சிறிதும் யோசிக்காமல் இருந்துவிடுவீர்கள். உங்களைப் போலவே எல்லோரும் நேர்மையும் நீதியுமாக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பதில் நீங்கள் சில சமயங்களில் ஏமாற்றம் அடையவும் நேரிடலாம்.

நீங்கள் பிறரிடம் பேசும்போது சில கசப்பான உண்மைகளை உள்ளது உள்ளபடி சொல்வதால் அவர்களது வெறுப்புக்களுக்குச் சில சமயங்களில் ஆளாகக் கூடும். எனவே நீங்கள் பிறரைப்பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொண்டிருந்தாலும் அவற்றை அவர்களிடம் நேருக்கு நேர் சுட்டிக்காட்டிப் பேசமால் இருக்கவேண்டும்.

உங்களுக்கு மத ரீதியாகவும் பக்தி பூர்வமாகவும் ஒரு வகை நம்பிக்கையும் மன அமைதியும் உண்டாகும். தெய்வீக விடயங்களில் நீங்கள் சிரத்தையும் உற்சாகமும் காட்டுவீர்கள். கால நிலைமைகளையும் சூழ்நிலைகளையும் சுற்றுப்புறத்தில் சஞ்சரிப்பவர்களின் மன நிலைகளையும் புரிந்துகொண்டே நீங்கள் செயற்படுவீர்கள்.

பக்திரீதியாகவே நீங்கள் உண்மையின் உயர்ந்த விளக்கத்தையும் வாழ்வதற்குத் தகுந்த வழிமுறைகளையும் உணரும் சந்தர்ப்பங்கள் உண்டாகக்கூடும். சிம்ம லக்கினகாரர்களுடன் நீங்கள் உறவோ அல்லது தொடர்போ கொண்டிருக்க வேண்டிய நிலைமைகள் இயல்பாகவே உங்களுக்கு ஏற்படவும் கூடும்.

நீங்கள் வெகுவேகமாகப் பிரயாணம் செய்வீர்கள் நீங்கள் வாழ்க்கையில் உசாராகவே நடந்துகொள்வீர்கள். அறிவியக்கப்படி உங்கள் உடலும் மனமும் இயங்கும். சில சமயங்களில் உங்களுக்கு சில பிரச்சினைகளைக் குறித்து பயமோ அச்சமோ ஏற்படவும் கூடும். நீங்கள் அடிக்கடி ஓய்வெடுத்துக்கொள்வது அவசியமாகும். நீங்கள் உற்சாகமிக்க இலட்சியவாதியாகையால் சமயத்துறை, பக்திமார்க்கம், தெய்வழிபாடு இவற்றை உங்களில் பலர் தங்கள் வாழ்க்கையின்மிக முக்கிய அம்சமாக கருதிக் கடைப்பிடிப்பார்கள்.

உங்கள் மனநிலை பொதுவாக அமைதியாகவே இருக்கும். ஆனால் சூடேற்றப்பட்டால் பெரிதாக வெடித்துவிடும். உங்கள் பிறவி வேட்கை அமிழ்த்தப்பட்டால் உங்கள் உணர்ச்சிகள் பீறிட்டு வெடித்துவிடும்.

நீங்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை ஆத்திரத்தாலோ அவசரத்தாலோ வீணாக்கிவிடக்கூடாது. பத்திரிகையில் தலையங்கம் எழுதுவோருக்கு உலகியலில் உலகையே மாற்றிவிடும் ஆற்றலுக்குரிய செல்வாக்கு பெருகச் செய்துவிடுவதைப் போல உங்கள் கருத்தினால் நீங்கள் பலரது கவனத்தைக் கவரக்கூடியவர்களாக விளங்குவீர்கள். காலம் அறிந்து செயற்படுவது உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும்.




# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சித்தமருத்துவம் கூறும் தின ஒழுக்கத்தில் ஆரோக்கியவாழ்வு

தின ஒழுக்கம் எனப்படுவது ஓர் மனிதன் ஆரோக்கியத்தை பேணிக்காப்பதற்கும் நோய்வராமல் தடுப்பதற்கும் தினசரி வாழ்வில் என்ன செய்யவேண்டும் என்பதற்கான விதிமுறைகள் ஒழுக்கம் எனப்படும்.

தின ஒழுக்கத்தில் முதலாவதாக பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும். பிரம்மமுகூர்த்தம் எனப்படும்போது விடியற்காலை 3 தொடக்கம் 5 மணிவரை அடங்கும்.

இந்த நேரத்தில் எழுவதை வழக்கமாகக் கொள்ளவேண்டும். அதாவது பிரம்ம முகூர்த்த நேரத்தில் ஓசோன் படலமானது பூமிக்கு அண்மையாக வுந்து செல்லும் இந்நேரம் துயில் எழும்போது மூளை சுறுசுறுப்பாக இருக்கும். அத்துடன் ஒட்சிசன் செறிவு அதிகளவாக இருப்பதால் சுற்றோட்ட குருதியில் செறிவு அதிகரிப்பதால் புத்துணர்ச்சியைக் கொடுக்கும். அதிகாலையில் எழுந்தபின்பு முதலில் பல்தேய்க்கவேண்டும். முன்னைய காலத்தில் டூத் பிரஸ். டூத் பேஸ்ட் கிடையாது. மூலிகை குச்சிகள்தான். ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பதற்கமைய ஆலம்குச்சி, கருவேலம் பட்டை துவர்ப்பாகவும் கசப்பாகவும் உள்ள வேர்களை உடைத்து நுனியை சிதைத்து பிரஸ் போன்று செய்து பல் தேய்ப்பார்கள்.

பல்தேய்ப்பது என்பது நவீன பழக்கம் அல்ல. தந்தாபனம் என்பது அன்றிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதுதான். இதற்கு மேலும் புங்கு, மருது, கருங்காலி போன்றவற்றையம் பயன்படுத்துவார்கள். உதாரணமாக இப்படியான இப்பட்டைகளில் தனின் எனும் வேதியப் பொருள் இருப்பதால் இது கிருமியகற்றியாகவும் செயற்படுவதோடு பல் ஈறு இரத்தம் கசிவு என்பவற்றையும் தடுக்கும்.

அதைவிட நாயுருவி விதை சுட்ட சாம்பல் அல்லது தென்னம்விதை சுட்ட சாம்பலும் பற்பொடியாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததாகும்.

மேலும் நாக்கு வழித்தல், கொப்பளித்தல் என்பனவும் மேற்கொள்ளல் வேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தது 10 தடவைகள் எனினும் கொப்பளித்தல் வேண்டும்.

வாய் கொப்பளிக்க உப்புநீர், ஆல், அரசு, அத்தி, இத்தி, நாவல் போன்ற பட்டைகளை அவித்த குடிநீர் இவற்றைப் பயன்படுத்தலாம். இதனால் வாய்க்குழியில் உள்ள கிருமிகளை அழிப்பதுடன் நோய்கள் வராதும் இருக்கும். காலையில் நீர் அருந்துதல் பற்றியும் குறிப்பிட வேண்டும். (Water Theraphy) கிட்டத்தட்ட 1.5 லீற்றர் தூய குளிர்ந்த நீரை குடிக்க வேண்டும். இரவு முழுவதும் நீண்டநேரமாக வெறுமையாக இருந்த வயிற்றில் இந்நீரைப் பருகும் போது அது உடலுக்கு புத்துணர்ச்சியை வழங்குவதாகவும் உடலுக்கு புஷ்டியை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது. கபநோய்கள் உள்ளவர்கள் இந்நீரில் மிளகினையும் பித்தரோகமும், வயிறு எரிவு உள்ளவர்கள் வில்வம்பழத்தையும் கொலஸ்ட்ரோல் உள்ளவர்கள் வெந்தயத்தையும் ஊறவைத்து குடித்து வருதல் சிறந்ததாகும்.

இவ்வாறு குடித்துவரின் இது நோய்களைத் தணிக்கும். ஓர் மருத்துவ நீராகவும் அமையும். பெண்களிடையே அஞ்சனம் தீட்டும் பழக்கமும் காணப்படுகின்றது. (கண்மை) இது கண்ணிற்கு இடுவதால் கண் நோய்கள் வராது தடுக்கப்படுவதுடன் கண்ணுக்கு குளிர்ச்சியும் ஏற்படும்.

இதனை வாரத்துக்கு ஒருமுறையாவது தீட்டுதல்வேண்டும். கண்மை தயாரிக்க கரிசலாங்கண்ணி பயன்படுத்தப்படும்.

முக்கியமான இன்னொன்று வியாகாமம் ஆகும். இது 30 நிமிடம் சுறுசுறுப்பான நடை பயிற்சி. இது வாரத்தில் 5 நாட்கள் செய்வது சிறந்ததாகும். கைகளை நன்கு வீசி நடக்க வேண்டும். கொழுப்பு குறையும், உடல் நல்ல அழகு பெறும், உடலின் எல்லா பாகமும் சுறுசுறுப்பாக அமையும். இதனால் உடல், மனம் ஆரோக்கியம் கிடைக்கும்.

உங்களுடைய உடற்கூறு எதுவாக இருந்தாலும் (வாதமாக இருந்தாலும் பித்தமாக இருந்தாலும் கபமாக இருந்தாலும்) உடற்பயிற்சி கண்டிப்பாக செய்யவேண்டும். வாதத்தன்மை அதிகமாக உள்ளவர்கள் இலகுவான யோகாப்பயிற்சி, தியானம் செய்யவேண்டும்.

கபம், பித்தத்தன்மை அதிகமாகவுள்ளவர்கள் கொஞ்சம் கனமாக உள்ள உடற்பயிற்சிகள் பளுதூக்குதல் செய்யலாம். இடுப்புவலி, கழுத்துவலி உள்ளவர்கள் எல்லா ஆசனங்களையும் செய்யக்கூடாது. எனவே வாத, பித்த கப யாக்கை இலக்கணங்களுக்கு ஏற்ப சித்த வைத்திய ஆலோசனை பெற்று பின்பற்றுதல் சிறந்ததாகும்.

தின ஒழுக்கத்தில் முக்கியமான இன்னொரு விடயம் எண்ணெய்தேய்த்துக் குளிப்பதைக் குறிக்கும். ஸ்நானம் என்றாலே அப்யங்க ஸ்நானம்தான். எண்ணெய்தேய்த்துக்குளிக்கிற பழக்கம் ஆரோக்கியமானதாகும். குளித்துவிட்டு எண்ணெய் தேய்ப்பது தவறான முறையாகும்.

சனி நீராடு என்று கூறுவோம். அதில் சனியானது வாதக்கிரகம். வாதத்தின் ரூக்வுத் தன்மை (வறட்சி) யை சாந்தப்படுத்தவே சனிக்கிழமை எண்ணெய் தேய்க்கிறோம்.

எள்ளிலிருந்துதான் எண்ணெய் வந்தது. நல்லெண்ணெய், சனிக்கிரகத்திற்கு ப்ரீதியானது. தைலம் என்பது திலம் என்ற வார்த்தையிலிருந்து வந்ததுதான். தரமான நல்லெண்ணெயை இலேசாக சூடாக்கி எண்ணெய்க் குளியலுக்குப் பயன்படுத்த வேண்டும். பொதுவாக சூரியன் உதித்தபின்புதான் எண்ணெய் தேய்க்க வேண்டும்.

எண்ணெய் தேய்ப்பதற்கும் ஒரு கிரமம் இருக்கு. எண்ணெய்யை எடுத்து இலேசாக சூடாக்கி உச்சந்தலையில் தடவவேண்டும். தலையிலே எண்ணெய் தடவுவதற்கு சிரோ அப்பியங்கம் என்று கூறப்படும். சிரோப்பியங்கத்திற்கு சில குணங்கள் உண்டு. தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது அது பிராணசக்தியை வளப்படுத்துகிறது.

தலையிலே தேய்த்து முடித்த பின்பு பாதத்தில் தேய்க்கவேண்டும். பாதத்தில் எண்ணெய் தேய்ப்பதால் கண்ணுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். நல்ல தூக்கம் வரும். அதற்குப் பின்பு இரண்டு கைகளிலும் தொப்புளிலும் தேய்த்து மேலிருந்து கீழாக மசாஜ் (பிடித்துக்கொடுத்தல்) செய்து 10-15 நிமிடங்கள் ஊறிய பின்பு ஆறவைத்த வெந்நீரில் குளிக்கவேண்டும்.

எண்ணெய் தேய்த்து குளித்த பின்பு தூங்கக் கூடாது. அன்று பகல் உறக்கம் ஆகாது. தயிர், குளிர்பானங்களை தவிர்த்தல் வேண்டும். எண்ணெய்ப் பலகாரம், வெயிலில் அலைதல், மது அருந்துதல் ஆகியவை தவிர்க்கப்படல் வேண்டும்.

எண்ணெய் ஸ்நானம் செய்தவர்கள் மிக மிதமான மலமிளக்கி எடுக்கலாம். இதற்கு திரிபலா சூரணம் 2 கிராம் வெந்நீரில் அல்லது கடுக்காய் ஊறல் குடிநீர் 60 மில்லி அருந்தலாம்.

எண்ணெய் தேய்த்து குளிப்பதால் தேக சிரமத்தை போக்கும். Chronic Fatigue Syndrome எனும் நிலையை அறவே போக்கும். நரம்புத்தளர்ச்சி, களைப்பு நீங்குவதோடு சருமத்திற்கு பளபளப்பையும் மூப்பு சீக்கிரம் வராமலும் தடுக்கும். கண்கள் தெளிவாகும். சரீரம் திடமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

பொதுவாக எண்ணெய் தேய்க்கும் போது மேலிருந்து கீழாகத் தேய்ப்பதுதான் சரி. மேலிருந்து கீழாக தடவுவது வாதத்திற்கு நல்லது. கபத்திற்கு கீழிருந்து மேலாகத் தடவவேண்டும். இருபது நிமிட நேரம் தினமும் தேய்த்தால் சிறந்தது.

இனிவரும் 2014 ஆம் ஆண்டிலிருந்தாவது எமது மக்கள் ஆரோக்கியத்திற்குரிய மேற்கூறிய இயற்கை வைத்திய முறைகளை கடைப்பிடிக்க பழகிக் கொள்ள வேண்டும். சித்தமருத்துவத்தில் கூறப்படும் நோய் வராமல் தடுக்கும் வழிகளும், உடலை எப்படி ஆரோக்கியமான திடமாக வைத்திருக்கலாம் என்று கூறும் முறைகளும் எமது பழக்க வழக்கங்கள் உணவு முறைகள், பத்தியா பத்திய முறைகள், பருவகால மாற்றங்கள், தியானப் பயிற்சி, ஆசனப்பயிற்சி என்பவற்றை உள்ளடக்கியதாகவே உள்ளது.

எனவே நாம் குறிப்பிடும் முறைகள் பல மக்களுக்கு கடைப்பிடிக்க சிரமாக இருந்தாலும் (ஏனெனில் தற்போதைய வாழ்க்கை முறை, உணவுப் பழக்கவழக்கம் எமது சமூகப் பின்னணிக்கு அப்பாற்பட்டதாக உள்ளதால் (நீண்ட கால ஆரோக்கிய வாழ்வை கருத்தில் கொண்டு மேற்கூறிய ஆரோக்கிய வைத்திய முறைகளை கடைப்பிடித்தே ஆக வேண்டும். தின ஒழுக்கத்தில் ஆரோக்கிய முறைகள் தொடரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக திரும்புமா இந்தியா ?

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்த பின்னர், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் ஒருவித மந்தநிலை இருந்து வருகிறது. இருநாடுகளுமே தமக்கிடையிலான உறவுகளில் எந்தக் கசப்புணர்வோ, இடைவெளிகளோ கிடையாது என்று அவ்வப்போது கூறிக் கொண்டாலும், ஒரு வெளித்தெரியா இடைவெளி நீடித்து வருகிறது. ஜெனிவா தீர்மானத்தின் போது, தொடங்கிய இந்த இறுக்கநிலை, கொமன் வெல்த் மாநாட்டின் பின்னர் இன்னமும் தீவிரம் அடைந்துள்ளதே தவிர, குறைந்துள்ளதாகத் தெரியவில்லை. சர்வதேச இராஜதந்திர அரங்கில், இலங்கையைக் காப்பாற்றுவதில் இந்தியா தனது முழுப்பங்களிப்பை செய்யவில்லை அல்லது முழுமனதோடு செய்யக்கூடிய நிலை இருக்கவில்லை.

இதுதான், இராஜதந்திர முனையில், இலங்கை-இந்திய உறவுகளில் தோன்றியுள்ள முக்கியமான இடைவெளிக்கான 'காரணம்.

இராஜதந்திர முனையில் ஏற்பட்டுள்ள இந்த இடைவெளி, இப்போதைக்கு குறைவடைவதற்கான சாத்தியங்களோ, அறிகுறிகளோ தென்படவில்லை.

இந்த இடைவெளியைக் குறைக்க கொழும்பும் புதுடெல்லியும் விரும்பினாலும் கூட, சில அக, புறக்காரணிகள் அதற்கு இடமளிக்கப் போவதில்லை.

இலங்கையுடன் இந்தியா கொண்டுள்ள ஆழமான நட்புறவை தொடர்ந்து பேணிக்கொள்ள வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இருந்தாலும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக இந்தியா கருதும், 13-வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயம், அந்த நெருக்கத்துக்கு சவாலாக உள்ளது. அதிகாரப் பகிர்வு இருதரப்பு இடைவெளியை இன்னமும் குறைக்க விடாமல், அமுக்கிவருகிறது. அதைவிட உள்நாட்டு அரசியல் அழுத்தங்களும் இந்தியாவை ஒரு கட்டத்துக்கு மேல் இலங்கையுடன் நெருக்கம் கொள்ள விடாமல் தடுக்கவே செய்கின்றன.

இது இராஜதந்திர அரங்கில் உள்ள முக்கியமான இருதரப்புச் சிக்கல்.

ஆனால், பாதுகாப்பு உறவுகளில் இந்த உறவுச் சிக்கல் ஏதும் இருக்கவில்லை.

பாதுகாப்பு ஒத்துழைப்பு விடயத்தில், இலங்கையுடன் எந்த இடைவெளியும் ஏற்பட்டுவிடாமல் பாதுகாப்பதில் இந்தியா உறுதியாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், புதுடெல்லியின் இந்த இரட்டை அணுகுமுறையைப் புரிந்து கொள்ளாமல், திரும்பத் திரும்ப அதற்குள் மூக்கை நுழைத்து, முட்டிக்கொள்கிறார்கள்.

இராஜதந்திர உறவுகயையும், பாதுகாப்பு உறவுகளையும் ஒன்றுடன் ஒன்று குழப்பிக்கொள்ளாத இரட்டை அணுகுமுறையை இலங்கையுடன் முதன்முதலாக அறிமுகப்படுத்திய நாடு அமெரிக்கா தான்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்தவுடன், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்று ஒரு வழியைக் கடைப்பிடிக்கத் தொடங்கியபோது, அது இலங்கையுடனான நெருக்கத்தைக் குறைக்கும் என்று அமெரிக்கா உணர்ந்திருந்தது. ஆனால், இந்தியப் பெருங்கடலில், இலங்கையின் அமைவிடத்தின் முக்கியத்துவம் கருதி, இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகளை சீர்குலையாமல் பாதுகாத்துக் கொள்வதில அமெரிக்கா உறுதியாக இருந்தது. இலங்கை விமானப் படைக்கு கடல்சார் கண்காணிப்புக்கான கருவிகளைக் கொடுத்தும், பசுபிக் கட்டளைப் பீடத்தின் மூலம் பயிற்சிகள், கூட்டுப் பயிற்சிகளை நடத்தியும், சில உதவித் திட்டங்களை நடைமுறைப் படுத்தியும் பாதுகாப்பு உறவுகளை கெட்டுப் போகாமல் பாதுகாத்துக் கொண்டது அமெரிக்கா. இன்றுவரை அது சுமுகமாகவே தொடர்கிறது.

அதேவேளை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும், கொழும்பும் கிட்டத்தட்ட கீரியும் பாம்பும் என்ற நிலை வரைக்கும் சென்றுள்ளன.

இதுபோலத்தான், இப்போது இந்தியாவும் இரட்டை அணுகுமுறையைக் கையாண்டு வருகிறது.

தமிழ்நாடு, புதுடெல்லியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில், இலங்கையுடனான 'உறவுகளை சமநிலைப்படுத்திக் கொள்வதற்கு இந்த இரட்டை நிலைப்பாடு இந்திய அரசுக்கு அவசியமாக உள்ளது. அரசியல் இராஜதந்திர ரீதியாக தமிழ்நாட்டின் உள்ளார்ந்த விருப்பம்சார் ஈடுபாடுகளுக்காக நெகிழ்ந்துபோக நேர்ந்தாலும், பாதுகாப்பு ரீதியாக அத்தகைய இழப்புகளுக்கு விட்டுக் கொடுக்காத போக்கை புதுடெல்லி அண்மைக்காலமாக கடைப்பிக்க ஆரம்பித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு, இந்தியா மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் போர்த் தளபாட உதவிகள் உள்ளிட்டவற்றை கொடுத்திருந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையுடன் எத்தகைய பாதுகாப்பு உறவுகளையும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று தமிழ்நாடு கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தாலும், அவை எதுவுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிக்கப்படும் விவகாரம், இலங்கைக் கடற்படையுடன் இணைந்து போர்ப்பயிற்சிகளில் ஈடுபடும் விவகாரம், உள்ளிட்டவற்றில் தமிழகம் எந்தளவிற்கு முட்டி மோதியும் எதையுமே சாதிக்க முடியவில்லை.

இப்போதும் கூட இருதரப்பு கடற்படைகளுக்கு இடையிலான உறவுகளில் நெருக்கம் அதிகரித்துள்ளது.

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தேவேந்திரகுமார் ஜோஷி, இலங்கையில் [illegible] நாள் பயணம் மேற்கொண்டிருந்ததும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாஜ ராஜபக்ச புதுடெல்லிக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டிருந்ததும், இந்த உறவின் முக்கிய அடையாளங்களாகும். இந்திய கடற்படைத் தளபதி, காலியில் நடைபெற்ற கலந்துரையடலுக்காகவே வந்திருந்தாலும், மேலதிகமாக மூன்று நாட்கள் இங்கு தங்கியிருந்து, முக்கிய கடற்படைத் தளங்களுக்கு சென்றதுடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துவிட்டே போயிருக்கிறார். அத்துடன், இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த நால்வருக்கு தொழில்நுட்ப பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான, வசதியை அளிக்கவும் அவர் இணங்கியுள்ளார். அதேவேளை, கோத்தபாய ராஜபக்ச, புதுடெல்லிக்கு மேற்கொண்ட பயணத்தின் நோக்கம் குறித்து இன்னமும் எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

இரண்டு நாட்கள் புதுடெல்லியில் தங்கியிருந்து பேச்சுக்களை நடத்திவிட்டு, அங்கிருந்து கொழும்பு திரும்பிய பின்னர்தான், அவர் வந்துசென்ற விவகாரமே புதுடெல்லி ஊடகங்களுக்குத் தெரியவந்தது. அவர் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் குறிப்பாக இந்தியக் கடற்படைத் தளபதிகளுடன் இரண்டு நாட்களும் பேச்சுக்களை நடத்தியதாகவும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனை சந்தித்ததாகவும் மட்டுமே மொட்டையான தகவல்கள் வெளியாகின. கொழும்பு திரும்பமுன்னர் அவர், வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்தது கூட ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு என்றே கூறப்படுகிறது. எனவே, அவரது புதுடெல்லிப் பயணத்தின் அடிப்படை, அரசியல் இராஜதந்திர நோக்கிலானது அல்ல என்பது உறுதியாகியுள்ளது.

பாதுகாப்பு ரீதியாக இலங்கையுடன் இந்தியா, நெருக்கத்தை கொண்டுள்ளதற்கு இரண்டு முக்கியமான காரணங்களைக் குறிப்பிடலாம்.

முதலாவது, சீனாவுடனும் பாகிஸ்தானுடனும், இலங்கை கொண்டுள்ள உறவுகள் பலமடைந்து வரும் நிலையில், பாதுகாப்பு துறையிலும் அத்தகைய இடைவெளி ஒன்று ஏற்படுவதை, அதற்கு இடமளிக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை. இந்தியா எங்கெல்லாம் பின்வாங்குகிறதோ, அங்கெல்லாம் மூக்கை நுழைப்பதற்கு சீனா ஆர்வம் காட்டுவதால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையுடனான நெருக்கத்தை குறைத்துக்கொள்ள இந்தியா தயாராக இல்லை.

அடுத்தது, இந்தியாவுக்கு அதிகரித்துவரும் கடல்வழி பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. குறிப்பாக கடற்கொள்ளையருக்கு எதிரான செயற்பாடு என்ற போர்வையில் செயற்படும் தனியார் பாதுகாப்பு அமைப்புக்களின் மூலம் தீவிரவாதிகளின் தாக்குதல், நிகழலாம் என்று இந்தியா அதிகளவில் அச்சம்கொண்டுள்ளது. இந்தியாவைச் சுற்றியுள்ள கடலில் 140 தனியார் ஆயுதக்கப்பல்கள் நடமாடுவதாக இந்தியக் கடற்படை தளபதி அட்மிரல் ஜோஷி கடந்த வாரம் கூறியள்ளார். இந்தியப் பெருங்கடலில் முக்கியமான இடத்தில் அமைந்துள்ள, இலங்கையின் உதவியும் ஒத்துழைப்பும் இருந்தால்தான், இத்தகைய தீவிரவாதத் தாக்குதல்களில் இருந்து தப்பிக்கமுடியும். எனவே, இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை குறிப்பாக கடற்படைகளுக்கு இடையிலான நெருக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த நினைக்கிறது இந்தியா.

அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்த இலங்கையுடன் அவுஸ்திரேலியா எவ்வாறு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தியுள்ளதோ அது போலத்தான் தனக்கு எதிரான அச்சுறுத்தல்களை முறியடிக்க இலங்கையுடன் நட்புறவு கொள்வதைவிட இந்தியாவுக்கு வேறு வழியில்லை. இந்தியாவின் இந்தப் பலவீனம் தான், இலங்கைக்கு சாதகமாக உள்ளது.

அரசியல் இராஜதந்திர முனையில் இந்தியா, அழுத்தங்களைக் கொடுத்தாலும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ரீதியாக வலியவந்து ஒட்டிக்கொள்ளும் இந்தியாவின் நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது இலங்கை. இந்தப் பாதுகாப்பு உறவுகளை தமிழ்நாட்டின் எந்த அரசியல் அழுத்தங்களினாலும் உடைக்க முடியாது. ஒருவேளை எதிர்வரும் மே மாதத்திற்குப் பின்னர், புதுடெல்லியில் பா.ஜா.க. ஆட்சிபீடம் ஏறினாலும் கூட இந்த வியூகத்திலிருந்து வெளிவரமுடியாது.

ஒருபக்கத்தில் இலங்கை அரசுக்கு தலைவலி கொடுப்பதாகக் காட்டிக் கொண்டாலும் இந்தியா தன்னைக் காப்பாற்றிக் கொள்ளதற்கு இந்த இரட்டை அணுகுமுறை தேவைப்படுகிறது. இந்த சூட்சுமத்தைப் புரிந்து கொள்ளாமல் இந்தியாவின் ஆதரவை தமிழர்கள் பக்கம் திருப்பிவிடலாம் என்று தமிழ்நாடோ அன்றி இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் தலைமைகளோ எத்தகைய கணக்கைப் போட்டாலும் அது பலிக்கப் போவதில்லை.

-சுபத்ரா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வரவு செலவுத்திட்ட வரைபில்

# இளைஞர்களின் நலனுக்கென அதிகளவு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வரலாற்றில் முதற் தடவையாக இளைஞர் சமுதாயத்துக்காக செயற்படும் இளைஞர் விவகார திறன பிவிருத்தி அமைச்சிற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக இளைஞர் விவகாரதிறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இம் முறை 12 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுளளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

இளைஞர்களின் நலனுக்காக அதிக நிதி ஒதுக்கீடு மேற்கொண்டது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முழு இளைஞர் சமூகமும் நன்றி கூற வேண்டும்.

2010 ஆம் ஆண்டில் 5 பில்லியனும் 2011 ஆம் ஆண்டில் 7 பில்லியனும் 2012 இல் 7 பில்லியனும் எமது அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டது. இம்முறை 12 பில்லியனாக இது அதிகரிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் தொகை 114,29 ஆக உயர்ந்துள்ளது. பல்கலைககழகம் செல்ல முடியாத, பல்வேறு பரீட்சைகளில் சித்தியடையாத, பாடசாலை விட்டு வெளியேறிய மாணவர்கள் ஆகியோருக்கு கைத்தொழில் தொழிற் பயிற்சி வழங்கும் நடவடிக்கை மேம படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் செல்லமுடியாத மாணவர்கள் குறித்து இதற்கு முன்னர் எந்த அரசாங்கமும் கவனம செலுத்தவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் சகல இளைஞர் பிரிவுகளும் உள்வாங்கப்படும் வகையில் வளங்களால் போஷிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய இளைஞர் மாநாட்டின் மூலம் இலங்கை இளைஞர்கள் தொடர்பான கவனம் அதிகரித்துள்ளது. உலக இளைஞர் மாநாடும் மே மாதம் 7 முதல் 11 வரை இலங்கை யில நடைபெறவுள்ளது என்றார். (செ-2)

# சர்வதேச தலையீடு பிழையானதல்ல

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளின் உள்விவகாரங்களில் சர்வதேசம் தலையீடு செய்வது பிழையானதல்ல என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், சர்வதேச சமூகம், நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வது எல்லா நேரங்களிலும் பிழையானதல்ல என அவா சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கப்பதற்கு சர்வதேச சமூகத்தின் அழுத்தம் ஓர் பிரதான ஏதுவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மறைந்த தலைவர் நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மற்றும் சர்வதேச சமூகத்தின் தலையீடு ஆகியனவே, தென்னாபிரிக்க ஜனநாயகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வழிகோலியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற ரீதியில் ஆபிரிக்காவில் ஏற்பட்ட மாற்றத்திற்கு இலங்கையும் பங்களிப்பு வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (2)

# கோடீஸ்வரர்களையும் தாண்டிய செல்வந்தர்களாக மஹிந்த குடும்பம்

### பாலித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்கும் முன்னர் அவரது குடும்பத்தில் கோடீஸ்வரர்கள் எவரும் இருக்கவில்லை.

தற்பொழுது அவரது குடும்பத்தில் இலட்சாதிபதிகள், கோடீஸ்வர்களும் அதனை மீறிய செல்வந் தர்களும் இருப்பதாக நீதியாவல பாலித தேரர் தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டுக்குள் திருட்டுத்தனமாக பல கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு கொண்டு வரப்படும் போதைப் பொருளில் 100 இற்கும் மேற்பட்ட கிலோ கிராம் காணாமற் போகின்றது.

அத்தோடு, மரணதணடனை விதிக்கப்பட்டவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுதலை செய்யப்படுகின்றனர்.

அரசாங்கத்திற்குள் நெருக்கடி அதிகரித்துள்ளது. அச்சம் காரணமாக ஊடகங்கள் எதனையும் வெளியிடுவதில்லை. நாட்டில் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இலங்கையர்கள் மிகவும் தான் தோன்றிதனமாகவும் சுய நலவாதிகளாகவும் மாறிவிட்டனர்.

நாட்டில் ஊழல் மோசடிகள் மலிந்துள்ளன. அரச நிறு வனங்கள் 72 உள்ள நிலையில், இவற்றில் 16 நிறுவனங்கள் கடுமையான நட்டத்தில் இயங்கி வருகின்றன.

இவ் அரசாங்கம் மக்களுக்கு எதனையும் இலவசமாக கொடுக்காவிட்டாலும் மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிறிலங்கன் எயார், மிஹின் எயார் போன்ற நிறுவனங்கள் கடும் நட்டத்திலேயே இயங்கி வருகின்றன.

இவற்றை ஈடு செய்ய அரசாங்கம் பணம் வழங்குகிறது எனச் சுட்டிக் காட்டியுள்ள அவர்,

இலங்கையில் இருப்பது அரச நிர்வாகம் அல்ல. இது ஒரு குடும்ப நிர்வாகம் என்றார். (2-9)

# நாட்டில் எதிர்வரும் காலங்களில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை

### சஜின் வாஸ் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் காலங்களில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்க இடமளிக்கப்பட மாட்டாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தி வருகின்றது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

வாக்குகளை இழக்க நேரிடும் என்ற காரணத்தினால் இவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

நாட்டு மக்களின் பௌதீக ஒருமைப்பாடு, தேசிய பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கருத்திற் கொண்டு அரசாங்கம் வெளியுறவுக் கொள்கைகளை வகுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார். (2)

# திருவாதிரை திருவிழா

ஏழாலை கண்ணகை அம்மன் ஆலயத்தில் மார்கழி திருவாதிரை திருவிழா நேற்று முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (செ-9-78)



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பண்டத்தரிப்பு பரிஷ் பங்குத்தந்தை வண.யூயின் பிரான்சிஸ் அடிகாளர், பாடசாலை அதிபர் கு.விமலன், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கு கொண்டனர். நிகழ்வில் பண்டத்தரிப்பு பரிஷ் பங்குந்தந்தை வண.யூயின் பிரான்சிஸ் அடிகளார் மாணவனொருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# ஊழல் மோசடிகள் அதிகரித்தால் வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்காது

### சட்டமா அதிபர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலஞ்ச உழல் மோசடிகள் அதிகரித்தால், வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்காது என சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உலக இலஞ்ச ஊழல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிடுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டில் பாரியளவில் இலஞ்ச ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றமை அம்பலமானால், வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்க்க முடியாது.

இலஞ்ச ஊழல் மோசடிகளினால் நாட்டின் பொதுமக்களே அதிகளவல் பாதிக்கப்படுகின்றனர். இதனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரியள வில் பாதிப்பு ஏற்படுகின்றது.

குறித்த மோசடிகளைத் தவிர்க்க அனைத்து தரப்பினரும் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும். இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு போதி யளவு சட்டங்கள் நாட்டில் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (செ-2)

# தெரிவு செய்யப்பட்ட செய்தி இணையங்கள் முடக்கப்படுகின்றன

(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட செய்தி இணையத் தளங்கள் மட்டும் முடக்கப்பட்டு வருவதாக தொழில்சார் இணைய ஊடகவியலாளர் பேரவை குற்றம் சுமத்தியுள்ளது.

இணைய ச்செய்திகளை முடக்கும் நோக்கில் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் இணைய தளங்கள் முடக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா மிரர் இணையத் தளம் இலங்கையில் முடக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் அழைப்பாளர் பெரடி கமகே தெரிவித்துள்ளார்.

தமிழ்நெற், ஸ்ரீலங்கா கார்டியன், லங்கா ஈ நியூஸ் போன்ற இணைய தளங்கள் திட்டமிட்ட அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். ஸ்ரீலங்கா மிரர் ஊடகத்தின் மீது தொடர்ச்சியாக அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட இணையத் தளங்களில் ஸ்ரீலங்கா மிரரும் ஒன்று என அவர் தெரிவித்துள்ளார். இணைய ஊடகங்கள் பல்வேறு சமூக சீரழிவுகளை அம்பலப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைபபின் தலைமைப் பதவியை வகிக்கும் இலங்கை, அந்த அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகளுக்கு அமைய தகவல் அறிந்து கொள்ளும் கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்யவும் ஜனநாயகத்தை நிலைநாட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்மோகன் பிரதமராக தெரிவானது தவறு மணிசங்கர் ஐயர்

மன்மோகன் சிங் பிரதமராக தேர்ந்தெடுக்கப் பட்டது தவறு என காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

நான்கு மாநில சட்டப் பேரவை முடிவுகளுக்கு பின் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல்வேறு தலை வர்கள் கட்சியில் மறு சீரமைப்பு செய்ய வேண்டியது அவசியம் என்று கூறி வருகின்றனர்.

காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மணி சங்கர் ஐயர் நேற்றையதினம் பேட்டியொன்றில்,

2009 ஆம் ஆண்டு மன்மோகன் சிங் பிரதமராக தேர்ந்தெடுக்க ப்பட்டதே தவறு. அதை இப் போதைய தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கிறது என்றார். (2)

## நரேந்திரமோடி பிரதமரானால் அமெ. இணைந்து செயலாற்றும்

### அமெ. முன்னாள் வெளியுறவுத்துறை செயலர் தெரிவிப்பு



**நரேந்திரமோடி பிரதமரானால் அவருடன் இணைந்து அமெரிக்கா செயலாற்றும் என அமெரிக்க முன்னாள் வெளியுறவுத்துறை செயலர் காண்டலீசா தெரிவித்துள்ளார்.**

நான்கு மாநில சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜனதா கட்சி அமோக வெற்றி பெற்று மகிழச்சியில் திளைத்து வருகின்ற சூழலில் அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை செயலர் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியி லேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்தொடர்ந்துகூறுகையில்,

குஜராத் கலவரம் குறித்த நிலை தற்போது மாறிவிட்டதாகவும். அது குறித்த யோசனை இனிமேலும தேவையில்லை, மோடி பிரதமரா னால அமெரிக்கா அவருடன்இணைந்து செயற்படும் என்று கூறியது அவர்க ளின் மகிழ்ச்சியை மேலும்அதிகரித்துள்ளது.

தாங்கள் நடந்தது என்ன என்று பார்ப்பதை தவிர்த்து, நடக்க போவது என்ன என்று பார்க்க விரும்புவதாகவும் எதிர்கால வளர்ச்சிக்கு பலமாக அடித்தளத்தை உருவாக்க விரும்புவதாகவும் அதை நோக்கி நிலையான குறிக்கோளுடன் ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படவுளளதாகவும்தெரிவித்து ள்ளார்.

இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு, யார் இந்திய பிரதமராக வந்தாலும் அமெரிக்கா அவருடன் இணைந்து செயற்படும், மக்களின் அடிப்படை நலன்களையும், மதிப்பையும் உயர்த்தும் வகையில் இந்திய பிரதமரும் அமெரிக்க ஜனாதிபயும் இணைந்து செயற்ப ட்டு வருவதாகவும், கடந்த பல ஆண்டுகளாக ஜனாதிபதி ஒபாமா அவ்வாறே செயற்பட்டு வந்துள்ள போது, இந்தியாவில் யார் பிரதமராக வந்தாலும் இந் நடவடிக்கை தொடரும் எனவும் அவர் கூறியுள்ளார். (2)

## பதவி விலக முடியாது

## தாய்லாந்து பிரதமர் கண்ணீர்மல்க அறிவிப்பு

(பாங்கொக்)


நாம் எல்லோரும் தாய்லாந்து நாட்டினர். நாம் ஒருவரையொருவர்மனம்நோகச் செய்யலாமா? நான் தாய்லாந்து மண்ணில் நிற்கக் கூடாது என எதிர்ப்பாளர்கள் விரும்புகிறார்கள்.

இவ்வாறு கண்ணீ மலக தெரிவித்தார் தாய்லாந்து பெண் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா. அத்துடன் பதவி விலக மாட்டேன்என அவர்கூறினார்.

தாய்லாந்தில் தனக்கு எதிரான போராட்டம் வலுத்ததை அடுத்து, பெண் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பாராளுமன்றத்தை அதிரடியாக கலைத்தார். 60 நாளில் தேர்தல் நடத்தப்படும் என்று அந்த நாட்டு தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இந்நிலையில் பிரதமராக யிங்லக் தொடர்ந்தாலும், அவர் பதவி விலக வேண்டும் என்று போராட்ட க்காரர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். அவர் பதவி விலகியே ஆக வேண்டும் என்று எதிர்ப்பாளர்கள் பிரதமர் இல்லத்தின் அருகில் முற்றுகை போராட்டம் நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இந்த நிலையில் பிரதமர் தனது அமைச்சரவை கூட்டத்தை கூட்டி நாடு நிலவரம் குறித்து விவாதித் தார். அப்போது அவர் உரையாற்றுகையில், நாம் எல்லோரும் தாய்லாந்து நாட்டினர். நாம் ஒருவர் ஒருவரை மனம் நோகச் செய்யலாமா? நான் இதுவரை பின்வாங்கி விட்டேன். இன்னும் என்ன பின் வாங்குவது என்பது எனக்கு தெரியவில்லை. நான் தாய்லாந்து மண்ணில் நிற்கவும் கூடாது என (எதிர்ப்பாளர்கள்) விரும்புகிறீர்களா? இவ்வாறு அவர் கூறி கண்ணீர் சிந்தினார். முடிவில், நான் பதவி விலக மாட்டேன் என அவர் கூறினார். (2)

## சர்தாரியை மூன்று வழக்குகளில் ஆஜராகுமாறு நீதிமன்று அழைப்பாணை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு மூன்று ஊழல் வழக்குகளில் எதிர்வரும் 23 ஆம் திகதிக்குள் நேரில் ஆஜராகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

பாகிஸ்தான்முன்னாள் ஜனாதிபதி கடந்த செப்டெம்பர் மாதம் பதவி விலகினார். இவர் மீது ஏற்கனவே ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஜனாதிபதி பதவியில் இருந்ததை தொடர்ந்து நீதிமன்ற வழக்கு விவகாரங்களில் அவருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. தற்போது பதவி விலகியதை அடுத்து அந்த வழக்குகள் மீண்டும் உயிர் பெற்று விட்டன.

இந் நிலையில், பாகிஸ்தான் தேசிய ஊழல் தடுப்பு பிரிவு சர்தாரி மீது 5 ஊழல் வழக்குகளை பதிவு செய்துள்ளது. அதில் 3 வழக்குகள் மீது தற்போது நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையின் போது சர்தாரி நீதிமன்றில் ஆஜராக வில்லை. எனவே, அவரது வக்கீலும், முன்னாள் சட்ட மந்திரியுமான பருக்எச்நயக் ஆஜராகிமனு தாக்கல்செய்தார்.

அதில், 'பாதுகாப்பு காரணம்கருதிசர்தாரிநீதிமன்றில் ஆஜராக முடியவில்லை. அவருக்கு அரசு பாதுகாப்பு வழங்கியதும் அடுத்த விசாரணையின் போது ஆஜராவார்' என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதை ஏற்றுக் கொண்ட நீதிபதி எதிர்வரும் 23ஆம் திகதிக்குள் ஆசிப்அலி சர்தாரியும், சாட்சிகளும் நேரில் ஆஜராகும்படி அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டார். (2)

## உக்ரேன் போராட்டம்

## எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு ஐ.நா. வலியுறுத்து






உக்ரைனில் நடைபெற்று வரும் போராட்டங்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினருடன் அந்நாட்டு ஜனாதிபதி பேச்சு நடத்த வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில கூறியிருப்பதாவது, உக்ரைனின் கீவ் நகரத்தில் அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்கள் கவலை அளிக்கின்றன.

எனவே எதிர்க்கட்சியினருடன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். இதன்மூலம் அங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கட்டுக்குள் கொணடுவர முடியும் என்று தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனுடனான வர்த்தக ஒப்பந்தத்தை தவிர்த்து, ரஷ்யாவுடன் நெருககமான உறவை நாடும் உக்ரைன் அரசின் நட்வடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டு எதிர்க்கட்சியினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (2)

## செவ்வாய் கிரகத்தில் ஏரி- கியூரியா சிட்டி



(வோஷிங்டன்)

செவ்வாய் கிரகத்தில் ஏரி இருந்ததற்கான ஆதாரத்தை கியூரியா சிட்டி விண்கலம் கண்டுபிடித்துள்ளது.

கியூரியா சிட்டி தற்போது செவ்வாய் கிரகத்தின் மண், பாறை, காற்று மற்றும் சுற்றுப்புற சூழலை படம் எடுத்தும் மாதிரிகளைசேகரித்தும்ஆய்வு மேற்கொண்டு வருகின்றது.


செவ்வாய் கிரகத்தின் வறண்ட மேற்பரப்பை கியூரியாசிட்டி ஆய்வு செய்தது. தற்போது அதில் தண்ணீர் எதுவுமின்றி வறண்டு கிடக்கிறது. ஆனால் அங்கு மிகப் பெரிய தண்ணீர் ஏரி இருந்தது தெரிய வந்துள்ளது.

மேலும் அங்கு இருக்கும் பாறைகளில் துளையிட்டு வெளியான துகள் மாதிரிகள் ஆய்வுமேற்கொள்ளப்பட்டன. அதில் காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசளன் சல்பர் போன்றகனிமங்கள்உள்ளன.

இவை நுண்ணுயிரிகள் வாழ்வாதாரத்துக்கு தேவைப்படுபவை ஆகும். மேற்கண்ட கனிம வளங்கள் இப்பாறையில் இருப்பதால் இங்கு ஏரி இருத்திருக்க வேண்டும். அவற்றில் நுண்ணுயிரிகள் வாழ்ந்திருக்க வேண்டும் என விஞ்ஞானிகள்கருதுகின்றனர்.

இதன்மூலம் அங்கு ஏரிகளும் ஆறுகளும் கடந்த 360 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருக்கவேண்டும்எனவிஞ்ஞானிகள் கருதுகின்றனர். (2)

## இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் பாசித் நியமனம்



இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக அப்துல் பாசித் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக சல்மான் பஷீர் செயல்பட்டு வருகிறார். அவரது பதவிக்கலாம் முடிவடையும் நிலையில், புதிய தூதராக அப்துல் பாசித் அறிவிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அப்துல் பாசித்தை, வெளியுறவு செயலாளராக பாகிஸ்தான் அரசு நியமித்தது. மேலும் இந்தியாவுக்கான புதிய தூதராக சையத் இபேன் அப்பாஸ் அறிவிக்கப்பட்டு இருந்தார்.

அதன்படி அப்துல் பாசித், பாகிஸ்தான் வெளியுறவு செயலாளராக கடந்த வாரம் பொறுப்பேற்க இருந்த நிலையில், இந்தியாவுக்கான புதிய தூதராக அவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று கூறபட்டுள்ளது.

சையத் இபேன் அப்பாசை விட அனுபவம் மிக்கவர் என்பதால், அப்துல் பாசி த்தை இந்திய தூதராக நிய மித்ததாக பாகிஸ்தான் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (2)

## டிரக் மீது புகையிரதம் விபத்து;



இந்தோனேசியாவில் எரிபொருள் ஏற்றிச் சென்ற டிரக்மீது பயணிகள்புகையிரதம் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்தனர். 20பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இது குறித்து தெரியவருவதாவது.

இந்தோனேசியா தலைநகர் ஜகார்தாவின் வடக்குப்பகுதியில் பயணிகள் புகையிரதம் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக எரிபொருள் ஏற்றி சென்ற டிரக் மீது புகையிரதம் மோதியதில்,டிரக் வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

புகையிரதத்தின் 2 பெட்டிகள் தடம் புரண்டன. விபத்து நடந்த பகுதிக்கு விரைந்து வந்த மீட்புக் குழுவினர் இடிபாடுகளுக்குள் சிக்கிய 3 உடல்களை மீட்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபையில் நேற்று 16 பிரேரணைகள் எதிர்ப்பின்றி நிறைவேற்றம்

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தி னால் பறித்து வைக்கப்பட்டுள்ள வலி. வடக்கு மக்களின் காணிகள் மீண்டும் அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும், சிவில் சமூகத்தைச் சேர் ந்த நற்பண்புள்ள, மனிதநேயமு ள்ள ஒருவரே வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்ப டல் வேண் டும் என்ற பிரேரணைகள் உட்பட 16 பிரேரணைகள் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் எதிர்ப்பின்றி நிறைவேறின.

வடக்கு மாகாண சபையின் 3 ஆவது அமர்வு கைதடியிலுள்ள மாகாணசபை கட்டடத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகியது.

இதில் அவைத்தலைவரின் ஆரம்ப உரையின் போது சபையின் உறுப்பினர்களது போக்குவரத்துச் செலவு, சபை நடவடிக்கைகள், உறுப்பினர்களுக்கான அறிவுறுத்தல்கள் என்பன கூறியதோடு சபையில் உறுப்பினர்களின் நடவடிக்கைகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் எனவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

**செங்கோல்**

சபையின் நேற்றைய 3ஆவது அமர்வின்போதும்செங்கோல்அவைத் தலைவரால் கொண்டுவரப்படவில்லை.

எனினும் அதற்கான காரணம், செங்கோல் வடிவமைப்பு வேலைப் பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவ்வடிவமைப்பு வேலைப் பாடுகள் நிறைவுறும் நிலையில் உள்ளன. சபையின் அடுத்த அமர்வின் போது செங்கோல் கொண்டுவரப்படும் எனவும் அவைத்தலைவர் சி.வி.கே.தனது ஆரம்ப உரையின் போது தெளிவுபடுத்தியிருந்தார்.

**சபைக்குள் ஆர்ப்பாட்டம்**

அவைத்தலைவரின் உரையை யடுத்து சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் தலைமையேற்பில் இராணுவத்தின் அடக்கு முறைகள் தமிழினப் படுகொலைகள் என்பவற்றை கண்டித்து 10 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய ஆர்ப்பாட்டமொன்று சபைக்குள் நடத்தப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்றைய தினம் சர்வதேச மனிதவுரிமைகள் தினமாகையால், வடக்கில் குறிப்பாக தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மனிதவுரிமைகள் தினத்தை முன்னிலைப்படுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதற்கு ஆளுங் கட்சியின் அனை த்து உறுப்பி னர்களும் எழுந்து நின்று ஆதரவு அளித்ததோடு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு எதிர்ப்பும் அதரவும் வழங்காமல் நடுநிலைமையுடன் மௌனம் காத்தனர்.

**எதிர்க்கட்சித்தலைவர் இல்லை**

சபையின் நேற்றைய அமர்வின் போது எதிர்க்கட்சித்தலைவத் யாரும் அங்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவராக ஈ.பி.டி.பி.யின் முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய கந்தசாமி கமலேந்திரன் நியமிக்கப்பட்டு இருந்தபோதிலும் நீதிமன்ற வழக்கொன்றின் காரணமாக அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையால் நேற்றையதின அமர்வில் அவர் கலந்து கொள்ளாமை தவிர்க்கமுடியாததாயிற்று.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் வலி. வடக்கு காணிகள், இராணுவ அடக்குமுறைகள் என்பன உட்பட 16 பிரேரணைகள் 8 மாகாண சபை உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டன.

**பிரேரணை–1**

உறுப்பினர் இ.இந்திரராசாவினால் வடமாகாணத்திற்குட்பட்ட யுத்தப் பிரதேசம் மற்றும் அதிகஷ்டப் பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக் குறை காணப்பட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்கள் பலர் நீண்டகாலமாக பணியாற்றி வந்துள்ளனர். இன்றும் இப் பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை காணப் படுகின்றது. எனவே கஷ்டமான காலங்களில் தொண்டராசிரியர்கள் ஆற்றிய சேவையினைக் கருத்திற்கொண்டும் பாடசாலைகளின் ஆசிரியர் தேவைகளைக் கருத்திற்கொண்டும் இவர்களை ஆசிரியர்களாக உள்ளீர்ப்புச் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்ற பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இந்திரராசாவின் இப்பிரேரணையை உறுப்பினர் தியாகராஜா வழிமொழிய பிரேரணை ஏகமனமாக சபையோரினால் நிறைவேற்றப்பட்டது.

**பிரேரணை– 2,3**

அடுத்து சபை உறுப்பினர் சி.சிவமோகனினால் கொண்டுவரப்பட்ட



இரண்டு பிரேரணையில், தற்சமயம் முல்லை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மக்களுக்காக நடைபெறும் வீட்டுத்திட்ட வேலைகளில் அவர்களுக்கு போதிய மணல் கிடைக்க வழி செய்யப்படவேண்டும்.

பிரதேச செயலருக்கும் தெரியாது நடைபெற்று வரும் மணல் அகழ்வு நடவடிக்கைகள் உடன் நிறுத்தி எமது வளங்கள் சுரண்டப்படுவதை நிறுத்த வேண்டும் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.

சிவமோகனின் இப்பிரேரணையை சபை உறுப்பினர் சுகிர்தன் வழிமொழிய சபையினால் குறித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையை வழிமொழிந்த சுகிர்தன் குறித்த மணல் அகழ்வு கட்சி ஒன்றினால் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் இதனால் எமது வளம் அழிவடைந்து செல்கின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து பிரேரணையினை கொண்டுவந்த சிவமோகன், இம்மணல் அகழ்வு யாரினால் மேற்கொள்ளப்படுகின்றது? பொதுமக்களுக்கு மணல் அகழ்வு நிலையங்கள் பிரதேச செயலகங்களினால் அனுமதி வழங்கப்படுகின்றது. அப்படியானால் இவர்களினால் எடுக்கப்படும் மணல் தூரநோக்கில் வெளிமாவட்டங்களுக்கு இலாப நோக்குடன் எடுத்துச் செல்லப்படுகின்றது.

இதனால் அப்பிரதேச மக்கள் தமது தேவைகளுக்கு மணல் இல்லாமல் இருக்கின்றனர்.

வனவள அதிகார சபை என்ற போர்வையில் பிரதேச செயலருக்கும் தெரியாமல் மணல் அகழ்வு வியாபாரத்தில் முகம்கூட தெரியாத வெளிமாவட்ட குத்தகைகாரர்கள் இராணுவத்தின் ஆதரவுடன் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். எனவே மேற்படி விடயங்களுக்கு உடனடித் தீர்வு கிடைக்கும் முகமாக ஒரு ஆராய்வுக் குழுவொன்றை இந்த அவை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனக்கூறிய அவர், பொதுமக்களுக்கு போதிய ளவு மண் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

**பிரேரணை– 4,5**

இதனையடுத்து சபை உறுப்பினர் பா.கஜதீபனால் கொண்டுவரப்பட்ட இரண்டு பிரேரணையில்,

நீண்டகாலமாக இராணுவத் தால் கையகப்படுத்தபட்டுள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் மக்களுடைய பூர்வீக வாழ்வாார நிலங்கள் (வலிகாமம் வடக்குப் பிரதேசம் உட்பட) அம்மக்களுக்கே மீள ஒப்படைக்கப்படல் வேண்டும். அத்துடன் அப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்களின் சொத்துக்கள் வழிபாட்டுத்தலங்கள் பாடசாலைகள் என்பன இடிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட்டு அந்தக் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப் படல் வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள அரசகாணிகளில் எமது மாகாணத்தைச் சாராத வெளி மாகாண மக்கள் அரசாங்கத்தின் ஆதரவுடன் திட்டமிட்ட வகையில் குடியேற்றப்படுவது உடன் நிறுத்தப்பட்டு அந்தந்த அரச காணிகளில் அந்தந்த பிரதேசத்தைச் சேர்ந்த காணியற்ற மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்பிரேரணையை சபை உறுப்பினர் ரவிகரன் வழிமொழிந்த பின்னர்தன்னால் கொண்டுவரப்பட்டபிரேரணைதொடர்பில் விளக்கவுரையொன்றை கஜதீபன் ஆற்றியிருந்தார்.

**பிரேரணை –6,7**

இதனையடுத்து சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் கொண்டு வரப்பட்ட இரண்டு பிரேரணையில்,

வடக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுநர் ஒருவரை ஜனாதிபதி அவர்கள் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையுடனும் இணக்கத்துடனும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஜனாதிபதியின் நம்பிக்கையைப் பெற்ற தமிழர் ஒருவரை நியமிப்பதன் மூலம் வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகளை சுமுகமாகக் கொண்டு செல்ல முடியும் எனவும் இந்த விடயத்தில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தமிழ்த் தாயகத்தில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் சுமார் 6 ஆயிரத்து 300 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்து அங்குள்ள கோவில்கள் , வீடுகள், கடைகள் போன்றவற்றை இடித்து அழிப்பதை உடனடியாக நிறுத்துமாறும் காணிச் சுவீகரிப்பைக் கைவிடுமாறும் இராணுவக் குடியிருப்பை நிறுவு வதையும் திட்டமிட்ட அரசாங்கத்தின் ஆதரவுடனான சிங்களக் குடியேற் றங்களைக் கைவிடுமாறும் வலிகா மம் வடக்குப் பிரதேச நிலைமை களை நேரில் பார்வையிடச் சென்ற முதலமைச்சரை இராணுவம் தடு த்து நிறுத்தி திருப்பியனுப்பியிருப்ப தானது வடக்கில் இராணுவ ஆட்சி நடைபெறுவதை உறுதி செய்துள்ள காரணத்தினால் உடனடியாக இராணு வ ஆட்சியை மீளப் பெற்று சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என அரசாங்கத்தைக் கோருகி றோம் எனக் குறிப்பிட்டிருந்தது. இப்பிரேரணையில் தமிழ் பேசும் ஆளுநர் என்ற பதத்தினை நீக்கி விட்டு மனித நேயம், உள்ள நல்ல பண்புள்ள, படித்த ஒருவரை ஆளுநராக நியமிக்கலாம் என மாற்றம் செய்யுமாறு கோரியிருந்தார்.

மேலும்இப்பிரேரணையில்மாகாண சபை உறுப்பினர்களான தவபாலன், சிவஞானம், சத்தியலிங்கம், விந்தன் ஆகியோரினாலும் எதிர்க் கட்சியினராலும் கருத்து முன்வைக்கப்பட்டு சிறுமாற்றங்கள் கொண்டு வரப்பட்டும் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்பட்டும் சபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**பிரேரணை– 8**

இதனையடுத்து சபை உறுப்பினர் வே.சிவயோகனினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையில்,

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நெல்லியடி நகரையும் அதனை அண்மித்த கிராமங்களையும் உள்ளடக்கி நெல்லியடி நகர சபையினை உருவாக்கிட எமது மாகாண சபையானது அதிக பட்ச வினைத்திறனைப் பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரேரணையினை சபை உறுப்பினர் சயந்தன் வழி மொழிந்தார்.

**பிரேரணை– 9,10**

இதனையடுத்து சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையினால் கொண்டு வரப்பட்ட பிரேரணைகள் இரண்டிலும், வடக்குமாகாண சபையிடம் இருக்கின்ற விவசாயத்துறை சார் அதிகாரங்களை பயன்படுத்தி இராணுவம் ஆக்கிரமித்துள்ள வட்டக்கச்சி விவசாயப் பண்ணையை மீள இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மணல் கிரவல் காட்டு மரங்களைப் போன்ற இயற்கை வளங்களைப்பகிர்ந்தளித்தல்மற்றும்தமது கட்டமைப்புக்களில்இச்செயற்பாடுகளை உள்வாங்குதல் மூலம் மாகாண சபைக்கான வருமானச் செயற்பாட்டை அதிகரிக்க முடியும் என்பதுடன் இச்செயற்பாடுகளை உள்ளூராட்சிசபைகளுக்குப்பெற்றுக்கொடுத்தால் இச்சபைகள் வலுப்பெறும் என்பதுடன் வடபுலத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும்உத்தரவாதம்அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரேரணை– 11**

இப்பிரேரணையினை சபை உறுப்பினரும் அமைச்சருமான ஐங்கரநேசன் முன்மொழிந்ததோடு ஏனைய இடங்களில் நடைபெறுகின்ற சட்ட விரோத இராணுவ ஆக்கிரமிப்புக்களையும் நிறுத்துமாறு கோரியிருந்தார்.

இதன்போது சாந்தபுரம் விவசாயப்பண்ணை உட்பட அனைத்து விவசாய நிலங்களையும் இராணுவம் விடுவிக்க வேண்டும் என சபை உறுப்பினர் அரியரட்ணம் கோரியதோடு அதனையும் குறித்த பிரேரணையில் சேர்த்துக் கொள்ளுமாறு கோரியிருந்தார்.

இப்பிரேரணையினைசபைஉறுப்பினர் சிராய்பா வழி மொழிந்ததோடு சபை உறுப்பினர்களான அரியரட்ணம் , சுகிர்தன், விந்தன், ரவிகரன் என்போரினால் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

**பிரேரணை– 12, 13, 14, 15,16**

இதனையடுத்து சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனால் கொண்டு வரப்பட்ட செயலகத்துக்கான நூலகம் ஒன்றை அமைத்தல் என்ற பிரேரணையினை சபை உறுப்பினர் சயந்தன் முன்மொழிந்தார்.

இதனையடுத்து சபை உறுப்பினர்ஜிரிலிங்கநாதனினால்கொண்டு வரப்பட்ட பிரேரணையில்

✷ பாதிக்கப்பட்ட மக்களுக் கான மிகுதி வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்

✷ காணிவிடயம் சம்பந்தமான சரியான முடிவுகள் எடுக்கப்படும் வரை தற்போது நடைமுறையிலுள்ள காணி தொடர்பான நடவடிக்கையினை நிறுத்துதல்

✷ மாகாண திட்டமிடல் குழுவை உரியமுறையில்செயற்படுத்திமாகாண அபிவிருத்தியை மேம்ப டுத்தல்

✷ அனைத்து மாவட்டங்களிலுமுள்ள வீதிகள் (RDD/ உள்ளூராட்சி) திருத்தம், புனரமைப்பு மேற்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும்.

✷ மாகாண மட்டத்திலான நடமாடும் சேவையினை முதலாவதாக வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு (நெடுங்கேணி) செட்டிக்குளம் ஆகிய பிரதேசங்களில் நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணைகள் யாவும் எதிர்க் கட்சியின் எதிர்ப்பின்றி ஏக மனதாக நிறைவேற்றப்பட்டு முதலமைச்சரின் வரவு செலவு திட்ட வாசிப்பின் பின்னர் மதியபோசன இடைவேளை பிற்பகல் ஒரு மணிக்கு விடப்பட்டு பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் அவை மீண்டும் ஆரம்பமாகியது.

இதன் பின்னர் வரவு செலவு திட்ட விவாதங்கள் இடம்பெற்று ஒவ்வொரு துறை சார்ந்த வரவு செலவுத் திட்டங்கள் இடம்பெற்று பிற்பகல் 4.30 மணியளவில் சபை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. எனினும் தற்போது பெருமளவானோரின் கவனத்தினை ஈர்த்துள்ளதும் பலரிடையே பலரிடையே பல கேள்வியினை முன்வைத்துள்ளதுமான கட்டாயக் கருத்தடை மற்றும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள கொலை, கொள்ளைச் சம்பவங்கள் சட்ட சீர்குலைவு என்பவை தொடர்பில் பெரும் நேற்றைய தினம் வாய்திறக்கவில்லை.

(தொகுப்பு:-எஸ்.ஆர்.கரன், ஊ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன உறவுகளை கண்டுபிடித்துத்தாருங்கள்

## முல்லை. அரச அதிபரிடம் மக்கள் வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவும் முல்லைத்தீவு காணாமற் போன உறவுகளை தேடும் சங்கமும் இணைந்து நேற்று காலை 9.30 மணிக்கு ஊர்வலமாக சென்று 1990 ஆம் ஆண்டு வன்செயல் தோன்றிய காலம் தொடக்கம் இன்றுவரை காணாமற் போனவர்களைக் கண்டு பிடித்து தருமாறு கோரி முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.



மேற்படி மகஜரில் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு,

கடந்த 1990 ஆண்டு வன்செயல் இந்நாட்டில் ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரையான 23 வருடகாலத்தில் பெருந்தொகையான தமிழர்கள் இந்நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் ஆயுதப்படைகளால் கைது செய்யப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டவர்கள் ,அடையாளம் தெரியாத ஆயுதம் தரித்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டோர்,பொலிஸராலும் ஆயுதப்படையினராலும் விசாரணைக்கென்று அழைக்கப்பட்டதன் பேரில்,தாமாக படைமுகாம்களுக்கும் பொலிஸிற்கும் சென்றவர்கள் என பல வகைப்பட்டோர் அடங்குகின்றனர்.

மேலும் வன்னிப் போரின் போது வன்னியில் குடியிருந்தவர்களாக அரசுப் பதிவேடுகளில் காணப்பட்டவர்களின் தொகைக்கும் போரின் பின் முகாம்களில் தடைப்படுத்தி வைக்கப்பட்ட மக்களின் தொகைக்கும் இடையில் காணப்படும் வித்தியாசம் ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பேருக்கும் மேலானதாகும்.

இந்த ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பேரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுள் அடங்குவர்.

இவர்களுள் எமது முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளும் அடக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீட்கும் முயற்சியாக நாம் பொலிஸ் படைத்தரப்பு, அரச அதிபர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணைக்குழுக்கள், ஜனா திபதி ஆணைக் குழுக்கள் என்பவற் றிற்கு செய்யப்பட்ட முறைப் பாடுக ளும் அவர்களால் அழைக்கப்பட்டு நாம் பல தடவைகளில் முகம் கொடுத்த விசாரணைகளும் இதுவரை எவ்வித பயனையும் தராமையால் மனைவிகள் கணவர்களை இழந்தும், பெற்றோர், பிள்ளைகளை இழந்தும், நண்பர்கள் உறவுகளை இழந்தும் நாங்கள் கண்ணீரும் கவலையுமாக வாழ்ந்து வருகின்றோம்.

இந்த இழப்புகளுக்கு காரணமான யுத்தமும் அதனை முன்னெடுத்த அரசும் அப்பாவி மக்களின் இக்கவலைகளையிட்டு எவ்வித அக்கறையுமில்லாதுள்ளனர். இவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்பதைக் கூட மூடி மறைத்து எங்களை அங்கலாய்ப்பில் தவிக்க விட்டுள்ளனர்.

எம்மால் இழக்கப்பட்ட இந்த உறவுகள் பற்றிய எமது கவலையைத் திசை திருப்பவோ என்னவோ அரசு எம்மீது வேறு பல சுமைகளையும் தொடர்ந்தும் சுமத்தி வருகிறது.

* மீளக்குடியமர்ந்தவர்களுக்கு உரிய நிவாரணமோ வேலை வாய்ப்புக்களோ வழங்கப்படவில்லை.

* பல நூற்றுக்கணக்கானோருக்கு அவர்களது சொந்த நிலத்தில் மீள் குடியமர அனுமதி வழங்கப்படாது காடுகளிலும் வளமற்ற தரிசு நிலங்களிலும் அந்தரிக்க விடப்பட்டுள்ளனர்.

* காணியுரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதுடன் வளமான நிலங்களும் இராணுவத் தேவைக்கும் தென் பகுதி மக்கள் குடியேற்றத்திற்குமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன.

* தமிழ் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி கரையோரங்களில் படையினரின் உதவியுடன் வேற்றிடத்த வர்கள் குடியமர்த்தப்பட்டு தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் சூறையாடப்பட்டுள்ளது.

* தமிழ்ப் பகுதிகளில் அதிகரித்த இராணுவ பிரசன்னத்தை ஏற்படுத்தி மக்களது இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டுள்ளது.

* பொது மக்களின் வீடுகளும் வணக்க ஸ்தலங்களும் படைத்தரப்பினால் ஆக்கிரமிக்கப்பட்டு யுத்தம் முடிந்த பின்னரும் அகதி வாழ்க்கை வாழும் அவல நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

* தமிழ் மக்கள் அன்றாட பொது விடயங்களில் கூட படைத் தரப்பின் தலையீடு இருப்பதால் மக்களின் இயல்பு நிலை முழுமையாக தடைப் பட்டுள்ளது.

* ஒட்டு மொத்தமாக ஒரு இன அழிப்பு மௌன யுத்தம் படைத் தரப்பு மூலம் தமிழ் மக்கள் மீது தொடக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்த நாட்களில் சிறிய தொரு நிலப்பரப்புள் முடக்கப்பட்ட மக்கள் கொத்துக் கொத்தாக, குடும்பம் குடும்பாக அழிக்கப்பட்ட போது அடைந்ததைவிட மிக அதிகமான துயரத்தை எமது உறவுகளின் இருப்பையோ,இறப்பையோ அறியாமல் இருப்பதன் மூலம் அனுபவித்து வருகிறோம்.

இந்த துன்பத்தை நீக்க நாட்டின் அதி உயர் அதிகார தலைவராகிய தாங்கள் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி எமது அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு பணிவுடன் இரந்து வேண்டுகின்றோம் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-267)

# மண்டேலாவின் போராட்ட வரலாற்றிற்கு தமிழின விடுதலைப் போர் ஒப்பானது!

## வடக்கு அமர்வில் கஜதீபன் நீண்ட உரை

தென்னாபிரிக்காவின் விடுதலைப் போராளி அமரர் நெல்சன் மண்டேலாவினை போன்று நாமும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்தியிருந்தோம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் மூன்றாவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் தனது பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,


27 ஆண்டுகள் சூரிய ஒளியைக் கூட காணமுடியாமல் தான் சார்ந்த மக்களின் விடுதலைக்காக உழைத்திட்ட ஒப்பற்ற விடுதலைப் போராட்ட மாவீரன் நெல்சன் மண்டேலாவிற்கு ஒரு கணம் தலைவணங்கி என் உரையை ஆரம்பிக்கின்றேன்.

அதைப் போல எமது விடுதலைப் போராட்டத்திற்காக பலர் எமது இனத்திலும் போராளிகளாகி மாவீரர்களாகியிருக்கின்றார்கள் என்பதை என் மனக்கண்முன் நிறுத்திப் பார்க்கின்றேன்.

இப்போராட்டத்தில் பலரும் பல விலைகளைக் கொடுத்ததைப் போன்றே இப்போராட்டம் நிறைவடைந்ததாகச் சொல்லப்படுகின்ற போதிலும், இக்காலப்பகுதியில் 1990களிலில் இருந்து எமது வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்து 23ஆயிரத்து 351 குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரத்து 618 பேர் இடம் பெயர்ந்தனர்.

31.08.2012 வரையான அங்கீகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2ஆயிரத்து 140 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 630 பேர்வரை பூரணமாக மீள்குடியேற்றஞ் செய்யப்படிருக்கின்றனர். ஏனைய 4ஆயிரத்து 562 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 613 பேர் குடியமர அனுமதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பினும் வாழ்வதற்கான அடிப்படையான வசதிகள் கூட ஏற்படுத்தவோ அல்லது ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையினாலோ இன்றுவரை மீள்குடியேற்றப்படவில்லை.

ஆனால் இன்றும் 13 ஆயிரத்து 198 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 757 பேர் மீள்குடியேறுவதற்கு விரும்பிப் பதிவு செய்திருக்கின்றார்கள்.



இருப்பினும் 1990 களில் 23 ஆயிரத்து 351 குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரத்து 618 பேரினது பூர்வீகநிலம் அபகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று 24 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற போது இம் மக்கள் தொகை எத்தனை மடங்காக உயர்ந்திருக்க வேண்டும்.

ஆனால் எம்மக்களின் சன அடர்த்தி காலப் போக்கில் மிகவும் குறைவடைந்து செல்வதையே காணமுடிகின்றது.

இதுவே இம் மக்களை அவர்களது நிலங்களிலிருந்து விரடியடித்தவர்களின் நோக்கமாக இருக்கின்றது. இதை நாம் தொடர்ந்து அனுமதிக்கலாமா?

இவ்வாறு மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்ட நிலையில் யுத்தம் மிகவும் தீவிரமாக இருந்தது. இன்று என்ன நிலை?

கடந்த 2 ஆண்டுகள் யுத்தம் தான் இல்லையே? ஆனால் யுத்தம் நடைபெற்றபோது இருந்த நிலைமையைப் பார்க்க இன்றுவரை இராணுவத்தினர் மிகவும் திட்டமிட்ட ரீதியில் அறிவிக்கப்படாத யுத்தத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதாக உணர்கின்றோம்.

6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலத்தை முழுமையாகக் கையகப்படுத்த 18.04.2013-27.04.2013 வரை நோட்டிஸ் கொடுக்கப்பட்டது. காணி சுவீகரிப்பு அதிகாரிகளின் கையொப்பத்தோடு,அதற்கு சொல்லப்பட்ட காரணங்கள் வருமாறு:

* படைத்தளங்கள் அமைக்கப்படுவதற்காகவும்.

* உயர் பாதுகாப்பு வலயங்களை முறைப்படி கையளிப்பதற்காகவும் என்பனவே யாகும்.

அதற்கு பின்னர் தற்போதைய நிலைமை இன்றும் பயங்கரமாகக் காணப்படுகிறது. மக்களது வாழ்விடங்கள், அவர்களது வணக்க ஸ்தலங்கள் கிட்டத்தட்ட 150 இந்து ஆலயங்கள், 15 கிறிஸ்தவ தேவாலயங்கள், 18 பாடசாலைகள் அவற்றில் 13 Type III, Type II,1AB பாடசாலை (நடேஸ்வராக் கல்லூரி) மண்மேடாக்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம். அல்லது அப்படிச் செய்திருக்கிறார்கள் என நேரடியாகவே குற்றஞ் சுமத்துகின்றோம்.

ஏனெனில் இப்பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக நானும் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களாகிய சிவாஜிலிங்கம், சித்தார்த்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரும் சென்றிருந்த போது நடந்தது என்ன? என்பதை இச்சபை அறியும்.

பத்திரிகை சுதந்திரம் எந்தளவிற்கு இம் மண்ணில் நடைமுறைக்கு இருக்கின்றது என்பதை நேரடியாகவே உலகம் பார்த்தது.

இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல் இராணுவமே இங்கு அனைத்தும் என்பதை மெய்ப்பிப்பது போல் நடந்த சம்பவம் தான் எமது வடமாகாண முதலமைச்சர் சென்றபோது திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம். இது வெறுமனே ஒரு சம்பவம் அல்ல. இதற்கு எமது பதில் என்ன? நாம் அடுத்த கட்டமாக எப்படி நகரப் போகிறோம் என்பதை இந்த சபையின் 38 உறுப்பினர்களும் தீர்மானிக்க வேண்டும்.

இந்தப் பிரேரணை தொடர்பாக அனைத்து உறுப்பினர்களும் கருத்துச் சொல்ல வேண்டும். குறிப்பாக எதிர்த்தரப்பிலிருக்கின்ற தமிழ் உறுப்பினர்களின் கருத்துக்களை இந்தச் சபை எதிர்பார்க்கின்றது.

ஏனெனில் உங்களுக்கு வாக்களித்திருக்கும் தமிழ் மக்கள் உங்களது கருத்துக்களை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என அவர் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மையான மகிழ்ச்சி நல்ல செயல்களை செய்து முடித்தபோதுதான் வரும்
- பெஞ்சமின் ஃபிராங்ளின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அமைச்சர் பசில் வெளிநாடு பயணம்; அதிர்ச்சியில் அமைச்சர்கள்!

வரவு செலவுத்திட்டத்தின் விவாதம் நடந்து வரும் நிலையில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ திடீரென வெளிநாடு சென்றுள்ளமை அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பசில் ராஜபக்ஷ தனது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்ற அன்றைய தினமே வெளிநாடு புறப்பட்டுச் சென்றார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு அவரது ராஜபக்ஷ குடும்பத்தினரே எதிராக செயற்பட்டு வருவது அவரை அதிருப்தியடைய செய்துள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை அமைச்சர் கவனத்தில் கொள்ளாது செயற்பட்டு வந்ததாக ஜனாதிபதியினால் குற்றம் சுமத்தப்பட்டதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாயிருந்தன.

வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் நடைபெறும் காலத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என எவரும் வெளிநாடுகளுக்கு செலக் கூடாது என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் பசில் வெளிநாடு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மருத்துவச் சிகிச்சைக்காகவே வெளிநாடு சென்றுள்ளதாக அவரது அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். (எ-11)

## நிறைவேற்றப்படும் பிரேரணைகளை எப்பாடுபட்டும் அமுலாக்க வேண்டும்

வடக்கு மாகாண சபையின் மூன்றாவது அமர்வு நேற்றைய தினம் இடம்பெற்றது. அந்த அமர்வில் முக்கியமான பல பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன என்ற செய்தி மகிழ்வுக்குரியதாயினும் பிரேரணைகளைக் கொண்டு வந்து அந்தப் பிரேரணைகளை நிறைவேற்றுவதால் மட்டும் குறித்த பிரச்சினை தீர்ந்துவிட மாட்டாது.

எனவே, பிரேரணைகளைக் கொண்டுவரும் போது, அதனை அமுலாக்குவதற்கான வழிமுறைகள் என்ன என்பதையும் பிரேரணையை முன்மொழிபவர்கள் முன்வைப்பது அவசியம்.

வடக்கு மாகாண சபையின் அமர்வுகளில் பிரேரணைகளை கொண்டு வருவதன் மூலம் எங்கள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றால், ஏகப்பட்ட பிரேரணைகளைக் கொண்டுவர முடியும்.

ஆனால், வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை என்பதற்காக அதனை அரசு ஏற்கும் என்றும் கூறிவிட முடியாது.

அதேநேரம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்படுகின்ற பிரேரணைகளை வடக்கு மாகாணத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கூட, வாசிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாத அளவிலேயே எங்கள் நிர்வாக நடைமுறையும் உள்ளது.

ஆக, பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலம் தமிழ் மக்களைச் சமாளிக்க முடியும் என்ற அடிப்படையில் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டால் வடக்கு மாகாண சபையின் அடுத்த தேர்தலின்போது கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையை விட, அதற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கைதடி முதியோர் இல்லம் எவ்வளவோ மேலானது என்று தமிழ் மக்கள் கூறிக் கொள்வர்.

எனவே, கொண்டுவரப்படும் பிரேரணைகளை எப்பாடுபட்டேனும் நிறைவேற்றியாக வேண்டும் என்பதில் வடக்கு மாகாண அரசின் முதலமைச்சரும் உறுப்பினர்களும் திடசங்கற்பம் பூண வேண்டும்.

இதற்காக வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்படுகின்ற பிரேரணைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துகின்ற ஒரு விசேட ஏற்பாட்டை ஒழுங்குபடுத்துவது அவசியமாகும்.

அதாவது மாதத்தில் குறைந்தது இரு தடவையேனும் முதலமைச்சர் உள்ளிட்ட வடக்கு மாகாண அரச குழு ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும்.

இச்சந்திப்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் தொடர்பில் கலந்துரையாடி நிலைமைகளை தெளிவுபடுத்தி அவற்றை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இதைவிடுத்து பிரேரணைகளை எவ்வளவு தூரம் உரப்பாக வாசித்து கரகோஷத்துடன் அவற்றை நிறைவேற்றினாலும் அந்தப் பிரேரணைகள் அமுல்படுத்தப்படாவிட்டால் அதனால் எந்தப் பயனுமே கிடைக்க மாட்டா.

ஆகவே ஜனாதிபதியுடன் சந்தித்து பேச்சு நடத்தி பிரேரணைகளை நிறைவேற்றுகின்ற ஒரு திட்டத்தை வடக்கு மாகாண அரசு முன்னெடுக்க வேண்டும்.

இதற்கு ஆட்சி பீடம் ஒத்துழைக்க மறுத்தால், அதனை சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து வடக்கு மாகாண சபையில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதை நிறுத்திட்டமாக வெளிப்படுத்தி ஆட்சியாளர்களின் உள்நோக்கத்தை பகிரங்கப்படுத்த வேண்டும்.

## பதில் பொலிஸ் மா அதிபர் நியமனம்

பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பி.கே. காமினி நவரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் நேற்று செவ்வாய்க்கிழமை மலேஷியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ள நிலையிலேயே பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மலேஷியாவில் நடைபெறவுள்ள பொலிஸ் நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காகவே பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் மலேஷியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். (எ-11)

## பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவியின் வீட்டிற்கு தீ வைப்பு

வீட்டுக்கு தீ வைத்து மாணவி ஒருவரை பரீட்சைக்குத் தோற்ற முடியாதவாறு சதிவேலை ஒன்று இடம் பெற்றுள்ளது. நேற்று ஆரம்பமாகிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவியொருவரை பரீட்சைக்குத் தோற்றுவதிலிருந்து தடுக்கும் வகையில் அம்மாணவியின் வீட்டை தீயிட்டுக் கொளுத்திய சம்பவமொன்று தம்புத்தேகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை உபகரணங்கள், சீருடை, பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் போன்றன தீக்கிரையாகிய நிலையிலும் அம்மாணவி தனது பாடசாலை அதிபரின் உதவியுடன் நேற்றைய பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

தம்புத்தேகம மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜயமாலி நிஸ்ஸங்க (வயது 17) என்ற மாணவியின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் அம்மாணவி தோற்றவிருந்த நிலையில் அதனைத் தடுக்கும் முகமாக அவரது எதிரியொருவரினால் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த மாணவியின் அறை முற்றாக தீக்கிரையாகியுள்ள நிலையில் அதிலிருந்த பாடசாலை உபகரணங்கள், சீருடை பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் போன்றன முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

பாடசாலை சீருடை இன்மையால் அம்மாணவி சிவில் உடையிலேயே பரீட்சைக்குத் தோற்றியுள்ளார். அம்மாணவியின் புகைப்படமொன்றை பாடசாலை அதிபர் அத்தாட்சிப்படுத்திக் கொடுத்த நிலையில் அவர் எவ்வித பிரச்சினையும் இன்றி பரீட்சையை எழுதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம பொலிஸில் மாணவியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து பொலிஸார் இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## மண்டேலாவிற்கு மஹிந்த அஞ்சலி

மறைந்த தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இலங்கை நேரப்படி நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்கா சென்றடைந்துள்ளார்.

ஜொஹன்னர்ஸ்பேர்க் நகரில் வைக்கப்பட்டுள்ள நெல்சன் மண்டேலாவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி செலுத்தியுள்ளார். ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிசும் அஞ்சலி செலுத்தினார். (எ-11)

## மண்டேலாவுக்கு சபையில் அகவணக்கம்

(யாழ்ப்பாணம்)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி அமரர் நெல்சன் மண்டேலாவிற்கு வடக்கு மாகாண சபையில் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் முதலாவது பேரவையின் மூன்றாவது அமர்வு நேற்றுக்காலை யாழ்.கைதடியிலுள்ள மாகாண சபைக் கட்டடத்தில் இடம்பெற்றது. இதன்போதே நெல்சன் மண்டேலாவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தும் முகமாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட உலக மக்கள் ஒன்றாக மனித உரிமையை நிலைநாட்ட நினைவு கூரும் தினம் எனவும்,

தென்னாபிரிக்காவின் இனவெறி ஆட்சியை முடிவிற்கு கொண்டுவந்து ஒரு தனித்துவமான நல்லிணக்கமான நல்லாட்சியை உருவாக்கிய அதன் தலைவராயிருந்து அமரத்துவம் அடைந்திருக்கின்ற நெல்சன் மண்டேலாவுக்கு ஒரு நிமிடம் அகவணக்கம் செலுத்துவோம் என அவைத் தலைவர் சபையில் அறிவித்ததையடுத்து அகவணக்கம் இடம்பெற்றது. (எ-6)

### ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி



இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்

இந்துக்களே உங்களுடைய தர்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை ஆயிரக்கணக்கில் எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமது சமயத்தினையும் சமய விழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்து மந்திரம் முதலீடு செய்யுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### பக்தி பாவத்தைக் கொல்லும்



❖ புலி மற்ற மிருகங்களைக் கொன்றுவிடும். அதுபோல பக்தி என்னும் புலி காமம் குரோதம் முதலானவற்றைக் கொன்று விடுகிறது. இதயத்தில் பக்தி வளருமானால் காமமும் ஏனைய மிருக உணர்ச்சிகளும் அடியோடு மறைந்துவிடும்.

❖ பொட்டலம் கிழிந்து கடுகு சிதறிவிட்டால் அவற்றை ஒன்று சேர்ப்பது மிகவும் கடினம். அதுபோல பல்வேறு திசைகளில் ஓடுகின்ற மனத்தை உட்குவித்து ஒருமுகப்படுத்துவது எளிதான செயல்அல்ல. மனதை ஒருமுகப் படுத்துவதற்கு நல்லவர்களுடன் நாடிச் சேர்வது மட்டுமே வழி.

❖ சிறு இழை ஒன்று நீட்டிக் கொண்டிருந்தாலும் ஊசியின் காதுவழியாக நூல் நுழைய முடியாது. உலகப் பொருட்களில் சிறிது பற்று இருந்தாலும் நம்மால் கடவுளை அணுக முடியாது.

❖ மனைவி, மக்கள், பெற்றோர் அனைவருடனும் சேர்ந்து குடும்பமாக வாழுங்கள். ஆனால், உள்ளத்தை மட்டும் கடவுளிடம் இருத்துங்கள்.

❖ முட்செடிகளை விரும்பித் தின்னும் ஒட்டகத்தின் வாயில் இரத்தம் ஒழுகும். அதுபோல, உலகியல் இன்பங்களில் நாட்டம் கொண்டு மனிதன் எத்தனையோ வேதனைகளையும், துன்பத்தையும் அனுபவிக்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோ கிண்ண காற்பந்தாட்ட போட்டி




யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக நெஸ்ரில் நிறுவனத்தின் அனுசரணையிலான "மைலோ கிண்ண" காற்பந்தாட்டப் போட்டிகளின் யாழ்.வலிகாமம் அணிகளுக்கிடையிலான போட்டிகள் நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவின் அனுமதியுடன் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியில் தொழில்நுட்ப இயக்குநராக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ் கடமையாற்றுகின்றார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை பிரதேச அணிகள் ஒரு பிரிவாகவும், யாழ்.வலிகாமம் அணிகள் இன்னொரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன.


இதில் பருத்தித்துறை பிரதேச அணிக்ளுக்கிடையிலான போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை 6 ஆம் திகதி முதல் இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று தற்போது கொலின்ஸ், வல்வை, விண்மீன், டயமன்ஸ் ஆகிய அணிகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியுள்ளன.



யாழ், வலிகாமம் அணிகளுக்கிடையிலான போட்டிகளிலிருந்தும் நான்கு அணிகள் தெரிவு செய்யப்படும்.

தொடர்ந்து இரண்டு பிரிவுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 8 அணிகளுக்கிடையில் அடுத்தகட்டப் போட்டிக்ள் நாளை 12 ஆம் திகதி முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று, 14 ஆம் திகதி பிற்பகல் இச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்தார்.

## முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்த மின்னொளி கரப்பந்தாட்ட போட்டி; ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்



மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்திய முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இத்தொடரின் இறுதியாட்டம் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

இப்போட்டியின் தொடர்நாயகன் விருது, ஆட்டநாயகன் விருது ஆகியவற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரர் ஜெனகன் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் சி.மனோகரன், சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ரஞ்சிக் கிண்ண கிரிக்கெட்

### டினேஷ் கார்த்திக் அதிரடி; தமிழக அணி வெற்றி




பரோடா அணிக்கெதிரான ரஞ்சிக் கிண்ண B பிரிவு லீக போட்டியில் தமிழக அணி 9 விக்கெட் வித்தியாசத்தில வெற்றி பெற்றது. இந்தியாவில் தற்போது ரஞ்சிக் கிணணத் தொடர் நடைபெற்று வருகிறது. மொத்தம் 27 அணிகள், மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, போட்டிகள் லீக் முறையில் நடக்கின்றன.தமிழகம் மற்றும் பரோடா அணிகளுக்கு இடையிலான லீக் போட்டி சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் பரோடா அணி 162 ஓட்டங்களும், தமிழ்நாடு 233 ஓட்டங்களும் எடுத்தன. டினேஷ் கார்த்திக் 92 ஓட்டங்கள் எடுத்தார்.இரண்டாவது இன்னிங்சில் பரோடா அணி 129 ஓட்டங்கள் எடுத்தது. மிஸ்ரி 64 ஓட்டங்களும், சௌரப் வாக்கர் 20 ஓட்டங்களும் எடுத்தனர். இதனையடுத்து 59 ஓட்டங்கள் என்ற சுலப இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தமிழக அணி 14.5 ஓவரில் ஒருவிக்கெட் இழப்பிற்கு இலக்கை அடைந்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

## மோசமான துடுப்பாட்டம் தோல்விக்கு வித்திட்டது

### டோனி காட்டம்

இந்திய கிரிக்கெட் அணியின் தென் ஆபிரிக்க பயணம் தொடர்ந்து ஏமாற்றம் அளித்து வருகிறது. இந்த முறையும் டோனி தலைமையிலான இந்திய அணி ஒருநாள் தொடரை இழந்தது. 3 போட்டிகளை கொண்ட தொடரில் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த முதல் ஆட்டத்தில் 141 ஓட்ட வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

டர்பனில்கடந்த 8 ஆம் திகதிநடந்த 2 ஆவது ஒருநாள் போட்டியிலும் 134 ஓட்ட வித்தியாசத்தில் தோற்று இந்திய அணி தென் ஆபிரிக்காவிடம் சரண்டர் ஆனது.

முதலில் விளையாடிய தென் ஆபிரிக்கா 49 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர்கள் குயன்டன் டிகாக் (106), ஹசிம் அம்லா (100) ஆகியோர் சதம் அடித்தனர். முகமது ஷமி 3 விக்கெடடுகளை கைப்பற்றினார்.

பின்னர் விளையாடிய இந்திய அணி 35.2 ஓவரில் 146 ஓட்டங்




களில் சுருண்டது. ரெய்னா அதிகபட்சமாக 36 ஓட்டங்கள் எடுத்தார். சோட் சோபே 4 விக்கெட்டுகளும், ஸ்டெய்ன் 3 விக்கெட்டுகளும் கைப்பற்றினார்கள்.

இந்த தோல்வி குறித்து இந்திய அணி கப்டன் டோனி கூறியதாவது,

முதல் போட்டியில் பந்துவீசாளர்களால் தோல்வி ஏற்பட்டது. முதல் போட்டியில் இருந்து அவர்கள் பாடம் கற்று 2 ஆவது போட்டியில் சிறப்பாக பந்து வீசினார்கள்.

ஆனால் 2 ஆவது போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக விளையாடியதால தோற்றோம். துடுப்பாட்ட வீரர்கள் ஆடிய விதமே சரி யில்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும். முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் எளிதில் ஆட்ட[illegible] இழந்து விடுவதால் நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது.

ஒரு தொடரை வைத்து முடிவு செய்யவில்லை. துடுப்பாட்டம் மோசமாக இருப்பதை ஒப்புக்கொள்கிறேன். தோல்வியை பற்றி கவலைப்படவில்லை. அதில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளவதே முக்கியமானது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்த வெற்றி மூலம் தென ஆபிரிக்கா தொடரை கைப்பறறியது. இந்தியா-தென் ஆபிரிக்கா மோதும் 3 ஆவது மற்றும் கடைசி போட்டி இன்று 11 ஆம திகதி செஞ்சூரியன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.




யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற மைலோ கிண்ண காற்பந்தாட்டப் போட்டியின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசம் மௌனித்து...

இலங்கையில் சிறுபான்மையினரின் போராட்டங்களின் காரணமாகவே மாகாண சபைகள நிறுவப்பட்டன என்பது எங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

முக்கியமாக வட கிழக்குப் தமிழ் பேசும் மக்களின் நலன் கருதியே மாகாண சபைத் திட்டத்தை இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா பேசி அதன் காரணமாக அரசியல் யாப்பில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

## அதிகாரம் இல்லை

ஆனால் மாகாணசபைச் சட்டத்தை அன்றைய அரசாங்கம் நாடு பூராகவும் ஏற்புடையதாக்கி வட கிழக்கு மாகாணங்களுக்கு அளிக்க வேண்டிய அதிகாரப் பரவல் என்ற கொள்கை ரீதியான மாற்றத்தைக் கொச்சைப்படுத்தி விட்டது.

வட கிழக்கு மாகாணங்களுக்கு விசேடமாக எதுவுமே கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குத் தேவையான அதிகாரப் பரவலாக்கமும் விசேடமாகக் கவனத்திற்கு எடுக்கப்படவுமில்லை. அம்மாகாணங்களில் வாழும் மக்கள் எதிர்பார்த்த மாற்றங்கள், திருத்தங்கள்,நலன்கள் போன்ற எவையுமே கருத்தில் கொள்ளப்படவில்லை.

மாகாணசபை முறைமையானது அதிகாரப் பகிர்விற்கான ஒரு திட்டம் என்று யாவராலும் அடையாளப்படுத்தப்பட்டு வந்த போதிலும் அது உண்மையில் நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதியின் அதிகாரத்தை மேன்மேலும்பலப்படுத்துவதாகவும் விரிவடையச் செய்வதாகவுமே அமைந்துள்ளது.

ஆளுநர், ஜனாதிபதியின் பிரதிநிதி. ஆளுநரின் அனுமதி இன்றி எந்த ஒரு நியமனமும் நடைபெற முடியாது. செயலாளர்கள் தொடக்கம கீழ் மட்டம் வரையில் அவரின் ஊடாகவே நியமனங்கள் நடைபெறுகின்றன.

பிரதம செயலாளர் ஜனாதிபதியால் முதலமைச்சரின் அனுசரணையுடன் நியமிக்கப்பட வேண்டும் என்றிருப்பினும் எமது தேர்தல் தெரிவின் அடிப்படையில அவரும் நியமிக்கப்படவில்லை· மற்றைய செயலாளர்களும் நியமிக்கப்படவில்லை.

## ஆளுநர் ஆட்சி இராணுவ வேகம்

அதைவிட ஆளுநரின் ஆட்சி ஆக்கிரமித்த ஒரு இராணுவத்தின அதிகார வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எந்த ஒரு மாகாணசபை அலுவலகரும மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை உறுப்பினருடன் சேர்ந்து கூட்டுறவாக இயங்கத் தயங்குகினறார்கள்.

எங்கே முன்னைய போர்க்கால இராணுவ மேலதிகாரியும் இன்றைய ஆளுநருமாகிய ஒருவரின் கோபத்திற்கு ஆளாகிவிடுவோமோ என்ற பயம் அவர்களுக்கு.

அதைவிட எமது நியதிச் சட்டங்களை உரியவாறு உருவாக்கி மன்றுக்குச் சமர்ப்பிக்கக் கூடிய நிர்வாக அலுவலர்கள் எம் மத்தியில் இல்லையோ என்று ஏங்க வேண்டியுள்ளது.

காலத்தின் கட்டாயத்தால் கதிரை மாறி கடுகதியில் சிரேஷ்ட நிலை அடைந்துள்ள அலுவலர்கள் பலரிடம் இருந்து அப்பழுக்கற்ற அதிகாரத் திறமையை எதிர்பார்க்க முடியாதுள்ளது. உரியவர்களை திறமை மிக்கவர்களை வெளியில் இருந்து கொண்டு வர உரிய ஏற்பாடுகள் நிலைநிறுத்தப்படவில்லை.

இருபது வருட இராணுவ ஆட்சி மேலிடம் சொல்வதைச் செய்யும் கிளிப்பிள்ளைகளாக எமது அலுவலர்களை ஆக்கியுள்ளது என்பது கண்கூடாகத் தெரிகிறது. அதற்காக அவர்களை நான் கடிந்து கொள்ளவில்லை. கவலைப்படுகின்றேன். ஆட்சித்திறனில், அபிவிருத்திப் பணி நிர்வாகத்தில் உள்ளேயும் புறத்தேயும் பாரிய இடைவெளி காணப்படுகிறது.

## இராணுவம் இருந்தால் மறுமலர்ச்சி இல்லை

2012-ம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் தீர்மானத்தின் முக்கிய நோக்கம் வட கிழக்கு மாகாண மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்தது. ஆனால் அதற்கேற்ற விதத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவா என்பது சந்தேகம் அளிக்கின்றது.

வட மாகாண சபைத் தேர்தல் இந்தியாவின் நெருக்குதல்களாலேயே நடைபெற்றது. இராணுவத்தை வட மாகாணத்தில் தொடர்ந்து நிலைபெற்றிருக்க வைத்து வட மாகாண மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியாது.

2009-ம் ஆண்டு மே மாதத்தில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. அண்மையில் வந்த வெளிநாட்டுத் தலைவர்கள் அனைவரும் வட கிழக்கு மாகாணங்களுக்குப் போதிய அதிகாரப் பரவலாக்கல் அவசியம் என்ற விதத்தில் கருத்துக்கள் வெளியிட்டுள்ளார்கள்.

ஆனால் இப்பேர்ப்பட்ட அதிகாரப் பரவலாக்கலுக்குத் தற்போது இருக்கும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் போதியதாக இருக்கமாட்டாது என்பது வெளிப்படை. வேண்டுமெனில் மாகாண சபையை இடைக்கால மாற்று நிர்வாகமாக அமைத்து அடுத்த கட்டத்திற்குக் கொண்டு போகலாம். அரசியல் ரீதியாகத் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகள் நாடு சுதந்திரம் அடைந்து 65 வருடங்கள் ஆகியும் தீர்க்கப்படவில்லை. மேலும் மேலும் தமிழ்ப் பேசும் மக்கள் மீது கூடிய அல்லல்களையும், அவலங்களையும் தொடர்ந்து வரும் அரசாங்கங்கள் சுமத்தி வருகின்றன.

## சர்வதேசம் உதவ வேண்டும்

அடுத்த கட்டமாக நாங்கள் சர்வதேச சமூகத்தையே நம்ப வேண்டியிருக்கிறது.

சர்வதேசம் கடந்த இரண்டு மூன்று மாதங்களுள் பல நன்மைகளை எமக்களிப்பதாக உறுதி மொழி அளித்துள்ளார்கள். அந்த நன்மையைப் பெற நாங்கள் உரியனவற்றைச் செய்ய வேண்டும். ஐக்கிய நாடுகள் தொழில் நுட்ப உதவிகள் வழங்குவதாக 2012-ல் குறிப்பிட்டிருந்தது.

அவற்றைப் பெற்ற ஆவன செய்ய வேண்டும். வெளிநாடுகளின் நெருக்குதல்கள் இல்லாவிடில் அரசாங்கம் எந்த விதமான அதிகாரப் பகிர்வையும் வழங்கமாட்டாது. எம் மறுமலர்ச்சிக்காக வெளியார் தரும் உதவிகள் எம்மை வந்தடைய அரசாங்கம் முட்டுக்கட்டையாக இருக்காது சர்வதேசம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெளியார் தரும் உதவிகளை நேரடியாக பெற சர்வதேசம் உரியனவற்றைச் செய்து தரவேண்டும். சில நேரங்களில் வெளிநாட்டு நிதியுதவி கொழும்பில் முடக்கப்பட்டு விட மாகாணத்தில் நடக்கும் செயற்திட்டங்களுக்கு உ... பணம் வராது போய்வி...

## வடக்கில் சர்வாதிகாரம்

இன்றை நிலையில் நான் காண்பது ஜனநாயகத்தில் இருந்து நாடு தூரச் சென்று கொண்டிருப்பதையே. நாங்கள் சமஷ்டி,சுயாட்சி, அதிகாரப் பகிர்வு என்றெல்லாம் பேச்சில் தடங்கியுள்ளோம். ஆனால வட மாகாணத்தில் நடப்பது யாவும் சர்வாதிகாரத்திற்கே வித்திடுவதாகத் தெரிகிறது. குடும்ப ஆட்சியை ஒருவரிடம் இருந்து இன்னொருவரிடம் கையளிக்க நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றனவா என்று வாய்விட்டுச் கேட்க வேண்டும போல் இருக்கிறது. இராணுவத்தை எந்தக் காலத்திலும் வாபஸ் பெற மாட்டோம் என்று போர் முடிந்து சுமார் நான்கு வருடங்களுக்குப் பின்னர் கூறுபவர்கள் என்ன மனோநிலையில் இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது மிக விரைவாக அரசியல் தீர்வுகள் காணப்படாவிட்டால் தமிழ்ப் பேசும் மக்களுக்குப் பதில் சிங்களம் பேசும் மக்களே வட மாகாணத்தில் அதிகரித்து விடுவார்கள்.

அதனால் என்ன என்று கேட்கும் தமிழர்களை நான் சந்தித்துள்ளேன். தென்னாட்டில் பரவலாக என் இளமைப் பருவத்தில் குடிகொண்டிருந்த தமிழ் பேசும் மக்களை 1958-ம்,1983-ம் அதற்கு இடைப்பட்ட காலத்திலும் அடித்து விரட்டிய பின்னர் தான் வடக்கில் இராணுவ உதவிகளுடன் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது இனப்படுகொலைக்கு ஒப்பானது என்பது மேற்படி தமிழ்ப் பேசும் மக்களுக்குத் தெரியாதா? அல்லது தெரிய வேண்டிய அவசியமில்லை என்று சுயநல காரணங்களுக்காக அவர்கள் அவ்வாறு கூறி நிற்கின்றார்களா?

## மறைக்கப்படும் அடையாளங்கள்

வடக்குக் கிழக்கு மக்களைத் தமிழ்ப் பேசும் மக்கள் என்று அடையாளம் காட்ட முடியாத அளவுக்கு எடுத்துச் செல்ல ஊடுருவல்கள் நடைபெற்று வருகின்றன.

விரைவாக வட கிழக்கில் இப்போதிருக்கும் தமிழ்ப் பேசும் மக்களிடையே அவர்களின் கருத்துக்களை அறிய சர்வதேசப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

மேலும் சர்வதேச சமூகம் தொடர்ந்து அசட்டையாக இருந்து வந்தால் தமிழ்ப் பேசும் மக்களின் நிலைமை மாற்றியமைக்க முடியாத அளவுக்கு மோசமாகி விடும் என்பதை எம் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இத்தால் கூறி வைக்கின்றேன்.

எமக்குக் கிடைக்கப் போகும் நிதியுதவி மிகச் சொற்பமே. எனினும் விதவைகள் குடும்பங்கள்,தனிப் பெண்களைக் குடும்பத் தலைவிகளாகக் கொண்ட குடும்பங்கள், அங்கவீனர்கள் ,போரினால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரை நல்வாழ்வு பெற பிற நாட்டு உதவிகளுடன் கரை சேர்க்க எண்ணியுள்ளோம்.

ஒவ்வொரு மாவட்டத் தேவைகளைத் தெரிந்த அந்தந்த மாவட்ட மக்களின் நல்வாழ்வுக்காக நடவடிக்கைகள்எடுக்க உத்தேசித்துள்ளோம்.

பாரிய வேலைத்திட்டங்களையும் வெளியார் உதவியுடன் செய்து முடிக்க எண்ணி உள்ளோம்.

இவற்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முட்டுக்கட்டையாக இருக்காது என்று நம்புகின்றோம். எம் மக்களின் நல்வாழ்வும், மனச் சந்தோசமும் முழு நாட்டுக்கும் நன்மை பயக்கும் என்பதை சிங்கள மக்கள் உணர்வார்கள் என்று நம்புகின்றேன் என அவர் தெரிவித்தார். (எ-4,6)

# வடக்கு மாகாண...

நேற்று யாழ்.கைதடியிலுள்ள மாகாண சபையின் கட்டடத்தல் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஆளும்கட்சி உறுப்பினர்களினால் மேற்படி 16 பிரேரணைகள் முன்மொழியப்பட்டதோடு வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாகாணசபையின் அமர்வில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் மற்றும் பிரேரணைகளை முன் மொழித்தவர்கள் வழிமொழித்த வைகள் தொடர்பான முழுமையான செய்தி உள்ளே... (எ-11)

# சிவில் சமூகத்தை சார்ந்தவரையே ஆளுநராக நியமிக்க வேண்டும்!

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

சிவில் சமூகத்தை சார்ந்தவரும் மனித உரிமைகள் தொடர்பான பூரண அறிவுடையவருமான ஒருவரே வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வட மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போதே ஜனாதிபதிக்கு முன் வைக்கப்பட்டிருந்த பிரேரணை சபை உறுப்பினர்களினால் ஏகமனதாக நிறைவேற்றப பட்டது.

சிவில் சமூகத்தைச் சேர்ந்த வட மாகாண தமிழர் ஒருவரே ஆளுநராக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் பரிந்துரைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையொன்றை மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சபையில் முன்வைத்தார்.

இந்த பிரேரணையை ஆறுமுகம் கந்தையா சர்வேஸ்வரன் வழிமொழிந்தார். எனினும் இந்த பிரேரணையில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு எதிர்க்கட்சி உறுப்பினர் செனவிரத்ன எ.டி.தர்மபாலா வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து குறித்த பிரேரணையிலுள்ள தமிழர் என்ற சொல்லை நீக்குமாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். தமிழர் என்ற சொல் வேண்டாம் என்றால் வட மாகாணத்தை சேர்ந்த ஒருவர் என்பதையும் நீக்க வேண்டும் என மாகாண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் தெரிவித்தார்.

இறுதியாக சிவில் சமூகத்தை சார்ந்தவரும் மனித உரிமைகள் தொடர்பான பூரண அறிவுடையவருமான ஒருவரே வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது. இது அனைத்து உறுப்பினர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து ஏகமனதாக சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் வடக்கில் இராணுவத்தை அகற்றி சிவில் சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையும் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் முன்வைக்கப்பட்டது இதனை மாகாண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் வழிமொழிந்தார். இப் பிரேரணையும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. (எ-6)

# கல்வி அமைச்சுக்கு...

10 கோடியே 40இலட்சத்து 9 ஆயிரமும், பேரவைச் செயலகத்திற்கு 11 கோடியே 79 இலட்சத்து 50 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் செயலகத்திற்கு 276 கோடியே 62 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாவும்,சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியதுறை அமைச்சருக்கு 353கோடியே 29 இலட்சத்து 57 ஆயிரம ரூபாய ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சுக்கு 12 கோடியே 24 இலட்சத்து 99 ஆயிரமும், விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு 58 கோடியே 19 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.(எ-6)

# பரீட்சைக் கடமை...

மணியளவில் தனது உடலில் ஏதோ செய்கின்றது எனக்கூறிய அதிபர், சில நிமிடங்களில் உயிரிழுந்ததாக அருகிலிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவருடன் இரவு உணவு உட்கொண்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி அதிபர் திங்கட்கிழமை இரவு உண்ட உணவு விஷமானதால் இச்சம்பவம் இடம்பெற்றிருககலாமோ என சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)




## சிதம்பர தரிசனம்

### கொன்றை வேணிப்பெருமானே குறைபோக்கு

மானே அனைய மைக்கண் மலை
வளர் காதல் உமை இடமருவும்
கோனே! தேவைப் பதிக்கரசே
கொன்றை வேணிப் பெருமானே
தேனே அமுதே செங்கரும்பே .
தெவிட்டாக் கனியே செழும் பாகே
ஊனே சுருக்கி உயிர் பெருக்கி
உய்யும் வண்ணம் வழி காட்டு ஐயா

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

✦ இன்று ஈழத்துச் சிதம்பரத்தில்

((2013/12/11) புதன்கிழமை 3-ம் நாள் திருவெம்பாவை)

(சி-5731)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கவனயீர்ப்பு போராட்டத்தில்...

தாக்குதலுக்கு உள்ளானவர்களில் காணாமல் போனவரகளைத தேடிக் கண்டறியும் குழுவின் ஏற்பாட்டாளர் சுந்தரம் மகேந்திரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முனனாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர் க.திருச்செல்வம் ஆகியோர் திருகோணமலை வைததியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்கள்.

காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டறியும் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் திருகோணமலை பஸ் நிலையம் முன்பாக இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் உறவினரகள் கலந்து கொண்ட இந்த கவனயீர்ப்பு போராடடத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புகிழக்குமாகாண சபை உறுப்பினர்களான கு.நாகேஸ்வரன், ஏ.ஜனார்த்தனன் உட்பட அக்கட்சியன் பிரமுகர்களும கலந்துகொண்டுதமது ஆதரவை தெரிவித்திருந்தனர். கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், காணாமல் போன தமது உறவுகளின் படங்களையும் அவர்களை கண்டு பிடித்துத் தரவேண்டும்என அரசாங்கத்தை வலியுறுத்தும் வாசக அட்டைகளையும் ஏந்தியிருந்தார்கள்.

போராட்டம் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக சுமுகமாக நடைபெற்றுக்கொண்டிருந்த போது, எதிரேயுள்ள பொதுச் சந்தைப் பகுதியிலிருந்து வந்த குழுவினர் சிங்கள மொழியில் பேசியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தை குழப்ப முறபட்ட போது போராட்டஏற்பாட்டாளர்களுக்கும் அவர்களுக்குமிடையில் வாய்த்தகராறு ஏற்பட்டது.

இந்த வாய்த்தகராறை அடுத்து ஏற்பட்ட கைகலப்பின் போது காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டறியும் குழுவின் ஏற்பாட்டாளர் சுந்தரம் மகேந்திரன்உட்பட சிலர்தாக்குதலுக்கு உள்ளானதாகக கூறப்படுகின்றது.

இந்தப் போராட்டததில்கலந்துகொணட கிழக்கு மாகாண சபை உறுப்பனரான கு.நாகேஸவரன் இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கையில், போராட்டம் சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் சந்தை வளவிற்குள்ளிருந்து வந்த ஒரு குழுவினர் போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்களின் கைகளிலிருந்த புகைப் படங்களையும்பதாகைகளையும் பறித்து எறிந்தனர் என்றும் இந்த நபர்களில் ஓரிருவர் தங்கள் முகத்தை துணியினால் மறைத்திருந்தனர் என்றும் கூறினார்.

இதனையடுத்து அங்கு சுமார் 15 நிமிடங்கள் ஒரு பதற்றமான நிலை காணப்பட்டது என்றும் அங்கு நின்ற காவல்துறையினர் அவர்களை அங்கிருந்து கலைத்திருந்தால் இந்தத் தாக்குதல் சம்பவத்தை தடுத்திருக்க முடியும் என்றும்அவர்கூறினார்

மேலும் இந்தப் போராட்டத்தின் முடிவில் செய்தியாளர்களடம் பேசிய காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டறியும் குழுவின் ஏற்பாட்டாளர் சுந்தரம் மகேந்திரன்காணாமல்போனவர்கள் தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றார். (எ-11)

# படகு கவிழ்ந்து...

கடற்கொந்தளிப்பு காரணமாக படகு கவிழ்ந்ததில் இன்பசிட்டிப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கைலாயபிள்ளை குணரட்ணம் (வயது 57) என்ற குடும்பஸ்தர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவருடன்சென்ற மற்றொரு மீனவர் தெய்வாதீனமாக கரைசேர்ந்துள்ளார்.

உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் அப்பகுதி மீனவர்களால் பருத்தித் துறைப் பொலிஸாரின்உதவியுடன்மீட்கப்பட்டுபிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொணடு சென்ற பின்னா் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது சீரற்ற கால நிலை நிலவுவதாக மீனவர்களுக்கு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறைத்திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் கடற்றொழிலுக்குச்சென்றதனாலேயே இச்சம்பவம்இடம்பெற்றுளளதாக தெரிவிக்கப் படுகின்றது.

(எ-9,24,10,60)

# தமிழினப் படுகொலை...

மாகாண சபையின் ஆளும கட்சி உறுப்பினா் எம்.கே.சிவாஜிலிங்கம் சென்று நினறார்.

இத்னையடுத்து ஆளும் கட்சியின் கணிசமாக உறுப்பினர்களும் உறுப்பினர் சிவாஜிலிங்கத்துடன் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் போது உறுப்பினர் சிவாஜிலிங்கத்தினால் 10 கோரிக்கைகளும் வாசிக்கப்பட்டன.

✦ தமிழ்இனப்படுகொலை, மனித உரிமை மீறல்களுக்கு சா்வதேச நீதி விசாரணை தேவை, சா்வதேச மனித உரிமை தினமான இன்று (நேற்று) தமிழ் இனம் சா்வ தேசத்திடம் நீதி கோரி நிற்கிறது.

✦ இராணுவத்திடம் சரணடைந்த பேராளிகள் எங்கே? அரசே பதில் சொல்!

✦ வலிகாமம் வடக்கில் கோவில்கள், வீடுகள்பாடசாலைகள், கடைகள் இடிப்பதை உடனடியாக நிறுத்து.

✦ காணாமல் போனோர் எங்கே? அரசே பதில் சொல்! அரசே பதில் சொல்! சா்வதேசமே நடவடிக்கை எடு.

✦ வலிகாமம் வடக்கில் 6 ஆயிரத்து 300 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகளை இராணுவம் சுவீகரிப்பதை உடனே நிறுத்து.

✦ வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவக் குடியிருப்புக்களை நிறுவுவதை உடனே நிறுத்து!

✦ தமிழ்த் தாயகத்தில் நடைபெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்து.

✦ வலிகாமம் வடக்குக்குச் சென்ற முதலமைச்சரின் பயணத்தை நிறுத்தியது அடிப்படை மனித உரிமை மீறலைக் கண்டிக்கின்றோம்.

✦ முதலமைச்சரைத் திருப்பி அனுப்பிய இராணுவ ஆட்சிக்கு முடிவுகட்டு! இராணுவமே வெளியேறு.

✦ தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் இணைந்து கோஷமிட்டனர்.

இதேவேளைஎதிர்கட்சி உறுப்பினர்கள் மேற்படி போராட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்காத அதே வேளை ஆதரவும் வழங்காது நடுநிலையாக சபையில் தமது ஆசனங்களில் அமா்ந்திருந்தனா்என்பது குறிப்பிடத்தக்கது.(எ-4,6)

## செங்கோல்...

நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கியிருந்தார்.

அத்தோடுமாகாண சபைக்கான செங்கோல் வடிவமைக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த அமா்வில் செங்கோல் பாவனைக்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார். (எ-4,6)


40-வது வருட கல்விச் சேவைதனில் முன்னோக்கி
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ். (C-5664)
புதிய கல்வியாண்டு 2014
தரம் 6,7,8,9,10, O/L EVENING BATCH
ஆரம்பம்: 12.12.2013 மாலை 3 மணி
புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

German Institute
German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Germany யில் இருந்து வந்த ஆசிரியரால் Goethe Institute examக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
10, Palaly Road, Jaffna.
ஆரியகுளத்தடி
T.P : 077 160 4823 (4812)

தேவை
கட்டிட நிர்மாணத் துறையில் பல வெற்றிடங்கள். கொழும்பை அண்மித்த பல பிரதேசங்களிலும் யாழ்/உடையார்கட்டு/ கண்டி/ திருகோணமலை/ மட்டக்களப்பு பிரதேசங்களில் மேசன், தச்சு, சட்டறிங் (1000 - 1500/- வரை) கையுதவியாளர்கள் (800 - 1200 /- வரை) தினமும் கைச்செலவு, தங்குமிட வசதி உண்டு.
விபரங்களுக்கு அழைக்கவும்
077 556 1883 (A-5739)

ஆண்டு 1 - 8 வரை
தரமான ஆசிரியர்கள்
தனிப்பட்ட கவனம்
அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளுங்கள்
Stanford College ஸ்ரான்போர்ட் கல்லூரி
புதிய கல்வியாண்டு - 2014
சாத்திரியார் வளவு, இமையாணன், உடுப்பிட்டி. 077 248 7511 ஆங்கிலம் : சுதாகர் (சுதா) (4817)

விடுமுறைக்கால கணினி; சதுரங்க வகுப்புகள்
பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாக்கும் வகையில் கணினிசதுரங்க வகுப்புக்கள் ஆரம்பாகின்றன. 20 மாணவருக்கு மட்டுமே அனுமதி.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
பதிவிற்கு Type <cs><name> & send to 772 395 895

வேலைவாய்ப்பு
அரச துறை: நூலகர் வகுப்பு III, சிறைச்சாலைகள் திணைக்களம், சுகாதார அமைச்சு மற்றும் பல்கலைக்கழகம்...
தனியார் துறை: DFCC வர்தன வங்கி, சனச அ/தி வங்கி, அபான்ஸ் மற்றும் முன்னணி நிறுவனங்கள்...
NGOகளில்தற்போதுகோரப்பட்டுள்ளவேலைவாய்ப்புகள்பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும்உதவிகளுக்கு.. 021 320 2787
கோலாசிற்றி தொழில்வங்கி இனி நாம் இருக்கிறோம்
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரில் வரவும் (4824)

புகழ் வெளியீட்டகத்தின்
மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
இடம் :- யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் :- 08.12.2013 ஞாயிறு முதல் 14.12.2013 சனிக்கிழமை வரை
நேரம் :- காலை 9 மணிமுதல் மாலை 7 மணி வரை
*இலங்கை – இந்திய வெளியீட்டாளர்களின் 2000 இற்கும் மேற்பட்ட நூல்கள் மலிவு விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
*அத்துடன் 2014ஆம் ஆண்டு கல்வித் தேவைக்கான சகல பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள், கொப்பிகள், காகிதாதிகள் என்பன மிகக் குறைந்த விலையில் பெறலாம்.
அனைத்தையும் தெளிவாகப் பார்த்து மலிவாகப் பெற யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு வருகை தாருங்கள்
தொடர்புகளுக்கு :- 077 411 8950, 077 664 8239 (4820)
புகழ்வெளியீட்டகம் கொக்குவில் மேற்கு.

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் (வ-து) வட்டுக்கோட்டை
தொடக்கம் 1957 பதிவு இல. S. 154
விசேட அறிவித்தல்
தொடர்ந்து பல தடவைகள் உதயன், வலம்புரி நாளேடுகளில் விளம்பரப்படுத்தியும், தபால் மூலம் அறிவித்தல்கள் அனுப்பியும் சில அங்கத்தவர்கள் உரிய பணங்களையும், மேலதிகமாக வழங்கப்படும் வட்டிப்பணங்களையும், பெறாதிருக்கின்றார்கள். கணிசமான அறிவித்தல்கள் உரிய முகவரியில் ஆட்கள் இல்லை என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது.
அடகுகடன் பெற்றவர்களில் ஒன்பது வன்னிப் பகுதி அங்கத்தவர்களே இன்றுவரை மீளாதிருக்கின்றார்கள். இவர்களுக்கு அனுப்பிய பதிவுத்தபால்கள் பல முகவரியாளர்கள் அங்கு இல்லை எனத்திரும்பிவிட்டது. எனவே இவ் விளம்பரப்படி அடகு நகைகளை மீளாதவர்கள் உங்கள் அடகு நகைகளை மீட்டெடுக்கும்படி அறிவுறுத்துகின்றோம். இன்றேல் நகைகளை இழக்க வேண்டி நேரும்.
எம்மிடம் கடன்பெற்ற அங்கத்தவர்கள் பொறுப்புணர்ந்து எமது அறிவித்தலின்படி மீளச்செலுத்துகின்றார்கள். கடனுக்கான வட்டி நீக்கப்பட்டுள்ளது. பிணையாளிகளுக்கு இன்னமும் அறிவித்தல் அனுப்பப்படவில்லை. வெளிநாடுகளில் உள்ள கடன் பெற்றவர்கள் அறிவித்தல் கிடைத்தும் ஒருசில நாட்களில் கடன் பணம் செலுத்தும் பொழுது கடன்பெற்ற உள்ளூர் அங்கத்தவர்கள் மேலும் அறிவித்தல்களுக்காகக் காத்திருப்பது ஏற்புடையதல்ல. எனவே உங்கள் வைப்புப்பணங்களையும், மேலதிக வட்டிப்பணங்களையும் பெறும் அதே சமயம் பெற்ற கடன்களையும் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.
தொ.பே.இல. : 0771495631
வட்டு / இந்துக்கல்லூரி அருகாமை
சித்தன்கேணி 09.12.2013
இ.ஆனந்தராசா
நிர்வாக செயலாளர் (4807)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org